# சந்திரகாவியம்

மூலமும் விருத்தியுரையும்




A. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்

பூமகள் விலாசம் பிரஸ்

மதராஸ்.

REGI[illegible] COPY-RIGHT

உ

நவக்கிரகாயநம:

சதாசிவ சோதிடர் அவர்களால்

இயற்றிய

# சந்திரகாவியம்

மூலமும்-விருத்தியுரையும்

காவேரிப்பாக்கம்

K. M. தெய்வசிகாமணி சோதிடரால்

விருத்தியுரை எழுதியது.


அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்

பூமகள்விலாச அச்சுக்கூடம்

சென்னை


காப்பிரைட்] 1938 [[redacted]

## ரிஜிஸ்டர் காபிரைட் அறிவிப்பு

இதனால் சகலமான பேர்களுக்குந் தெரிவிப்பது யாதெனில்:—சதாசிவ சோதிடர் அவர்களால் இயற்றிய "சந்திர காவியத்திற்கு" காவேரிப்பாக்கம் - தெய்வசிகாமணி சோதிடர் அவர்களால் விருத்தியுரை எழுதியதை, அடியிற் கையொப்பமிட்டுள்ள யான் ஷெயாரிடம் சர்வசுதந்தரமும் பெற்று என்னால் அச்சிட்டு மகாகனம்பொருந்திய கவர்ண்மெண்டார் அவர்கள் சட்டப்படிக்கு காபிரைட் செய்து வெளியிட்டுள்ளேன். ஆகையால் இதனை எனது உத்தரவின்றி யாரும் அச்சிடக்கூடாது என்பதை தெரிவித்திருக்கிறேன்.

இப்படிக்கு,

**அ. முத்துவடிவேல் முதலியார்.**

24, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.


# முகவுரை

மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் அறுவித தோற்றங்களையுடைய ஆத்மகோடிகளுள், மானிடப்பிறப்பு என்னும் இம்மக்கட் பிறவியே விசேஷமாயினும், இம்மக்கட் பிறவிக்கு சுகம் துக்கம் என்னும் இவ்விரண்டில் சுகத்தையே மக்கட்பிறவியினர் கோரப்படுவதாலும், அவ்வித சுகம் உண்டாவது தற்போதுள்ள மக்கட்பிறவி முப்பத்துமூன்றரைகோடிகளில் ஏறக்குறைய ஆயிரத்திற் கொருவரே சுகமடைந்து இன்புற்றிருப்பவரென்பதும் தெரிந்த விஷயமே. ஆதியில் இவ்விதமான சுகம், துக்கம் என்னும் இவ்விரண்டையும் அனுபவித்தவர் சுகத்தை மாத்திரமோ அல்லது துக்கத்தை மாத்திரமோ பிரிவில்லாது தன் அந்தியகாலபரியந்தம் அனுபவித்தவர்கள் அனேகருளர். அவ்விதமான சுகம் துக்கம் இவ்விரண்டையும் அனுபவித்தவரும் பின்பு சிலநாள் துக்கம் கஷ்டம் என்னுமிவற்றையொன்று யனுபவித்தவர் அனேகருளர். அவர்களுள் மிகசிரேஷ்டமான அகத்தியர் தனது பரமகுருவான சிவசுப்ரமணியக்கடவுளிடம் சென்று தன்விஷயந்தெரியாமையால் மனந்தளர்ந்து அன்னவரை, "ஏ எனது ஐயனே! பூவுலகத்திலுள்ள மானிடர்களில் சுகமடைவோரையும் துக்கமடைவோரையும் சொல்லவேண்டும்" என வணங்கிக்கேட்டபோது, "ஏ அகத்தியனே! சுகம் துக்கம் என்னுமிவ்விரண்டினுள் எக்காலம் சுகமுண்டாகும்? அல்லது எக்காலம் கஷ்டமுண்டாகும்? என்பதையாராய்ந்து அறிய முதலில் பூர்வக்யானமும், இரண்டாவதாக வேதநூலாராய்ச்சியும், இவ்விரண்டுமுள்ளவற்கு தெய்வவழிபாடுமிருந்தால் அறியலாமேயன்றி, வேறொருவர் தெரிவது அரிது. ஆனதால் உனக்கு இம்மூன்றுவித சக்தியும் உள்ளன. ஆதலால் உமக்குச் சொல்லுகிறேன்" என - பூவுலகமக்கள் வாழ்க்கையைப் புகன்றதாயும், இவை பிற்காலங்களில் பல்வேறு மதத்தினரால் பல நூற்களானதென்றும், இந்நூலினுக்கு முன்வந்த 'ஹோராசாரம்' 'பாராசாரியம்' 'பிருஹத்ஜாதகம்' என்னும் நூற்களினாலும் காணலாம்.

இந்நூலானது இச்செய்யுளின் கடைசியில் ஆக்கியோன் பெயர் என்ற விடத்தில் சந்திரகுலத் துதித்தவனென்றும், இந்நூலானது பல நூற்களிலிருந்த முக்கிய சாராம்சங்களைச் சேர்த்துத் திரட்டியதால் காவியமென்றும், இவ்விரண்டையும் சேர்த்தே இந்நூலினுக்குச் சந்திரகாவியமென்னும் பெயருண்டாயிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. ஏனெனில், இந்நூலில் ஆதிமுதல் அந்தம் வரையிலுமுள்ள செய்யுளை வாசிக்குமிடத்து, பல பாவவிளக்கம் என்றே கருதவேண்டியதாகையால், பல நூற்களிலிருந்தே சேர்த்துத்திரட்டியதா யிருக்கவேண்டும். ஆயினும், இந்நூலானது மிக்க கடினபதமாய் இருப்பதுடன் கடினமான விசேஷபாவாத்பாவ விஷயங்களைக் கூறுகின்றமையால், இந்நூலானது, தற்கால சோதிடர்களுக்கு விசேஷபயனளிக்குமாயினும், இந்நூலினுக்குச் சரியான உரை வெளிவராததாகையாலும், இந்நூலின், முக்யாம்சங்களைச் சோதிக்குமிடத்து, பல பாவங்களை இதனுள்ளிருக்கும் விஷயங்களெனவும், இவை எல்லோர்க்கும் பொதுப்பட விளங்கும் செய்யுளாதலாலும், எனது தகப்பனாரும் ஆசிரியருமான காவேரிப்பாக்கம்-மார்க்கலிங்க சோதிடரவர்கள் உதவியாலும், அவரிடமிருந்த பற்பல நூற்களின் உதவியாலும், இந்நூலினுக்கு யானும் உரைஎழுத முயன்றமையால், இந்நூலை அனைவரும் கைக்கொண்டு இதனின்றிருக்கும் விஷயங்களை நன்காராய்ந்து, மானிடர்கள் வருகாலபலனை யுரைக்குமாறு வேண்டுகின்றனம். மேலும், இந்நூல் ஆரம்பமுதல் அந்தம் வரையில் முடிவடையவும், இந்நூலின் விஷயங்களை அனைவரும் தெளிவறத் தெரிந்துகொள்ளுமாறு எமது எம்பிரானாகிய கஞ்சி குமர கோட்டக்கடவுள் அருள்புரியுமாறு வேண்டுகின்றனம். இந்நூலில் ஏதேனும் குற்றமிருக்கின் அதனை நீக்கி அன்னமானது ஜலத்தைநீக்கி பாலையுண்ணும் தன்மைபோல் இந்நூலின் முக்கிய விசேஷவிஷயங்களை யாதரித்தும் குற்றங்களை நிராகரித்தும் ஆசீர்வதிக்குமாறு வேண்டுகின்றனம்.

காவேரிப்பாக்கம்
2-9-1938.

இங்ஙனம்:
K. M. தெய்வசிகாமணி சோதிடர்.

உ

வடிவுளவேலோன்றுணை

# சந்திரகாவியம்

(மூலமும்-விருத்தியுரையும்)

## காப்பு

சாரமுத மாஞ்சந்த்ர காவியவி யாக்யான
சாரமெனுஞ் சோதிடத்தைத் தான்றெரிந்து-ஏர்பெறவே
செந்தமிழாற் பாடுதற்குச் செந்திவேற் பன்னிருகை
கந்தனுக்கு முன்னவனே காப்பு.

(இதன்பொருள்) சோதிடநூற்களில் பற்பல சோதிட நூற்களை யாராய்ந்து அதனின்றிருக்கும் முக்ய சாராம்சங்களை ஒன்றுசேர்த்துத் திரட்டியதைச் சந்திரகாவியமென்னும் பெயருடன் வெண்பாவாகச் செந்தமிழில் இச்சோதிடநூலைப் பாடுதற்குத் திருச்செந்தூரின்கண் ணெழுந்தருளியிருக்கும் பன்னிரண்டு கரங்களையுடைய கந்தரென்னும் சிவசுப்ரமண்யக் கடவுளுக்கு முன்பிறந்தவராகிய யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளை வணங்குவாம் என்றவாறு.

(விருத்தியுரை) சாரமுதமாம் என்றதால் பல நூற்களிலுள்ள முக்ய சாராம்சங்களை ஒன்றுசேர்த்து திரட்டிய அமுதத்திற்கொப்பான சோதிடநூலென்றும், காவியம் என்பது இவைபண்டைக்காலந்தொட்டிருந்த பழயவியாக்யானமென்றும் சொல்லுதற்கிட முண்டாகிறது. அன்றியும், இந்நூலின் பற்பல செய்யுளாராய்ச்சியாய்க் காணுமிடத்து பல பாவம் என்னும் பலவித கிரந்த சாராம்சங்களும் அடங்கியிருப்பதால் இந்நூலினுக்கு காவியம் என்றும் பெயருண்டாயிற்று. சந்திர என்பது இந்நூலினையியற்றிய சதாசிவசோதிடரென்பவர் சந்திரகுலமென்னும் ராஜவமிசத்தில் பிறந்தவரென்றும்,

அதனாலேயே சந்திரகாவியம் யென்னும் பெயருண்டாயிற் றென்றும் கருதப்படுகிறது.

இச்செய்யுளின் அடிமுதல் நுனிவரையில் ஆராய்ச்சி செய்யுமிடத்து பலாபலன்களை யுரைக்காவிடினும் பாவவிசேஷங்களை கண்டிப்பாய் கூறுகின்றமைபால் இந்நூலினுக்கு சந்திரனையொத்த ஒளிபோன்ற காவியம் என்றும் பொருள் கூறவேண்டியதாகிறது.

(சத்திகள் நவக்கோள் குரு வணக்கம்)

காயத்திரி சாவித்ரீயும் கலைவாணி கங்கைநாமம்
மேயநல் லுலகமாத ரெழுவகை விரும்பிப்போற்றி
ஆயநற்கதிர் நவக்கோ ளவைகளை வணக்கம்செய்து
தூயநற் கணிதமியாவும் சொல்குரு வணக்கம்செய்வாம்.

## வெண்பா

(5 - 9 - ன் சிறப்பு)

அஞ்சொன்ப துக்கதிபர் பாவிசுப ரானாலும்
மிஞ்சுபல னைத்தருவர் மென்மூன்று-றெஞ்சுபதி
னொன்றுக் கதிபதியு மிப்படியே யொன்றிவரிற்
பொன்றசுப மேகொடுப்பார் பூண்டு.

(இ-ள்) பிரபுஸ்தான மென்னும் ஐந்தாம்வீட்டுக்குடைய வரும், பாக்கியத்தானாதி யென்னும் ஒன்பதாம்வீட்டுக்கதிபதியும், பாவியாயிருக்கினும், சுபராயிருக்கினும் அளவில்லாத பலனையே தருவர். மற்றும் ஜென்மலக்கினத்திற்கு 3-6-11- இவ்வீட்டுக்குடையவர்களில் ஒருவர், மேற்சொன்ன ஐந்து ஒன்பதுக்குடையவராக வரினும் முன்சொன்ன விசேஷபலனையே தருவார்கள் எ-று.

(வி-ரை) ஐந்துக்குடையோன் ஒன்பதுக்குடையோன் இவ்விருவர்களின் சுபத்துவத்தைக் கூறப்பட்டது. விசேஷமாய் இராசிகள் 12-ல் மகாபலமும் சுபத்துவமும் பொருந்திய



விசேஷ ஸ்தானம். 5-9-என சாஸ்திரமேதாவிகளால் கூறப்பட்டதை,

"ஐந்தொன்பா னாதிபராய் யாவர்வரினு மவர்
அந்தமி லின்பப்பலனை யாற்றுவார்"

என்னும் 'வீமகவியின்' செய்யுளாலறியலாம். ஏனெனில் ஐந்துக்காவது ஒன்பதுக்காவது உடைய கிரகம் 3-6-11 என்னும் க்ஷேத்திரத்திற்கதிபதியாக வரினும் அவர் தீயகுணங்களை நீக்கி சுபபலனையே கொடுப்பாரென்பதே இச்செய்யுளின் கருத்தாகும். 1

(கேந்திரதோஷ கிரக வரலாறு)

நிசகேந்தி ராதிபதி நீதிசுப ரானா
லசுபபல மேகொடுப்ப ரல்லா-லிசைகேந்
திரபதிகள் பாவிகளாய்ச் சேரிலதி சுபங்கள்
பரவி யிடக்கொடுப்பர் பார்.

(இ - ள்) ஜென்மலக்கினத்திற்கு 1-4-7-10 என்னும் கேந்திரத்துக் குடையவர்கள் துன்பத்தைத் தரமாட்டாத சுப கிரகங்களே யானாலும் (ஷை கேந்திரதோஷத்தால்) கொடிய பலனையே தருவார்கள். மேலே சொல்லியுள்ள 1-4-7-10 என்னும் கேந்திரங்களுக்கு பாவர்களே ஆக்ஷி வீட்டுக்குடையவராகவரின் அவர்கள் அளவில்லா சுபபலனையே தருவார்களென்பதில் ஐயமில்லை எ-று.

(வி-ரை) இச்செய்யுளில் கேந்திரம் கோணம் இவ்விரண்டு தானாதிபர்களைப் பற்றியும் விரிவாய்க் கூறினார். எப்படியெனில் 1-4-7-10-க்குடையவர்கள் சுபர்களாகில் தீயபலனும், பாவர்களாகில் சுபபலனும் கொடுப்பார் என்பதே இச்செய்யுளின் கருத்து. மற்றும் சோதிட ஆசிரியருள் ஒருவரான வீமகவியாரும்,

"கொடியோர்கள் கேந்திரத்தோராயின் கொடார்கள்
கொடியபலன் நல்லோர் கொடுப்பர்"

என்றனர். கொடியபாவிகளென்னும், சூரியன் - அங்காரகன்-சனி-இராகு-கேது இவர்கள் கேந்திராதிபதிகளாகில் கொடிய பலனைத் தரமாட்டார். சுபகிரகங்களான சந்திரன்-புதன்-குரு இவர்கள் கேந்திராதிபதிகளாகில் தன் சுபத்துவத்தை நீக்கி அசுபபலனையே தருவார்கள் என்றுங் கூறியுள்ளார். இவை பலசாஸ்திர சம்மதியேயாம்.

சிலர் பாவிகள் சனி-குஜன்-சூரியனை மட்டும் பிரித்துப் பேசுவாராலும், இராகு கேதுவுக்கு க்ஷேத்திர பலத்தாலன்றி தன் அசுபகுணம் நீங்காதாகையால் இராகு கேதுவைப் பற்றியும் இங்கு கூறவேண்டியதாயிற்று. 2

(குரு-சுக்கிரனியல்பு கூறப்படுகின்றன)

பாரதனிற் சுக்கிரனும் பண்டேவர் தங்குருவும்
மாரககேந் ராதிபதி யானுக்காற்-றேர்மிகவும்
பாவியவர் பின்னும் புகர்புந்தி பாவியலாற்
றேய்மதியும் பாவியாந் தேர்.

(இ-ள்) ஏதாமொரு லக்கினத்திற்கு, அசுரகுரு என்னும் சுக்கிரனும், தேவகுரு என்னும் பிரகஸ்பதியும், மாரகஸ்தானாதிபதியாகவோ கேந்திரமென்னும் 1-4-7-10-க்குடையவராகவோவரில், மற்றெல்லோரைவிடக் கொடியபாவிகளேயாவர். மேற்சொன்னவர்களைவிட புகரென்னும் சுக்கிரனும், புந்தியென்னும் புதனும் பாவிகளாம். இவ்விருவர்களைவிட, கிருஷ்ணபக்ஷ சந்திரன் கொடியபாவியென்று அறிந்து கொள்வாயாக எ-று.

(வி-ரை) இச்செய்யுளில் மேற்சொன்ன கேந்திராதிபதிகளின் முக்கியதோஷத்தைக் கூறப்பட்டது. மாரகத்தானமென்பது ஜென்மலக்கினத்திற்கு 2-7-ம் ஆகும், அவ்வீட்டிற்கு கேந்திராதிபதிகள் குரு சுக்கிரனாகில் கொடியபாவி யென்றும், அவர்களைவிட குறைந்தவர் புதனும் சுக்கிரனும் பாவியென்றும், இவ்விருவரிலும் குறைந்தபாவி தேய்பிறைச் சந்திரனென்றும் கூறியுள்ளார். மற்றும் பலநூலாராய்ச்சியால் வீமகவியாரும்,



"கண்டத்ததிபராம் கேந்திரத்திற்'காரிகைபாய்
மண்டு குருவெள்ளி மாபாவி"

என்றும் கூறியதால், கேந்திரதோஷங்களில் கொடியவர் குரு சுக்கிரனும், இவ்விருவரில் புதன் இளைத்தவனென்றும், புதனில் சந்திரன் இளைத்தவனென்றுங் கூறுவாயாக. 3

(செவ்வாயி னியல்பு)

தேறுமது பாவிகளிற் சேய்கேந்தி ராதிபனாய்
ஆறி லவனேக னல்லாமல்-வீறுசனி
நல்ல னதைவிட்டால் நன்கிரவி தானுஞ்சேய்
வல்லகோ ணேசனெனின் மாண்பு.

(இ-ள்) பாவிகளெனத் தேர்ந்தெடுக்கப்பெற்ற சூரியன்-சனி-குஜன் - இராகு-கேது இவைகளில், செவ்வாயென்னும் குஜன், கேந்திரம் என்னும் 1-4-7-10-க்குடையவனாக விருந்து ஜென்மலக்கினத்திற்கு ஆறிலிருக்கில் அவன் பூரண சுபனே யாகும். இல்லையேல் சனி மேற்சொன்ன 1-4-7-10-க்குடையவனாக விருந்து முன்சொன்ன ஆறிலிருக்கில் நல்லவன், இவருமன்றி, சூரியன் கேந்திராதிபதியாகி யிருந்து ஆறிலிருக்கின் நல்லவன், முன்சொன்ன அங்காரகனே கேந்திரம் கோணம் இவ்விரண்டிற்கு மதிகாரியாகவரில் அவனே பிரமாதமான யோகமுண்டாக்கும் காரகனாகும் எ-று.

(வி-ரை) இச்செய்யுளால் செவ்வாயின் ஆதிபத்திய தோஷங்களையும் சுபங்களைப் பற்றியும் விரிவாய் கூறியுள்ளார். செவ்வாய் கேந்திராதிபதியா யிருக்கினும், கோணம் என்னும் 1-5-9-க்குடையவரா யிருக்கினும், அவன் சுபனே என்பது இந்நூலுடையார் கொள்கையாகும். இவை மற்ற சாஸ்திரங்களுக்கும் பொருத்தமானதே. ஏனெனில்? செவ்வாய் 3-ல் நிற்கில் சகோதரதோஷம், 8-ல் நிற்கில் ஆயுள்தோஷம், 12-ல் நிற்கினும், 8-ல் நிற்கினும் செவ்வாய்தோஷ மென்னும் களத்திரதோஷமானதால் மேற்சொன்ன யிடங்கள்போக மற்ற யிடங்களில் நிற்பது செவ்வாய்க்கு பிரபலக்ஷேத்திரமே யாகும்.

மற்றும் செவ்வாய்க்கு உரியலக்ஷணங்களைப் பின்வரும் செய்யுளாலுங் காணலாம். 4

(2-11-க்குடையவர்க ளியல்பு)

ஏறு மிரண்டுபதி னொன்றா மிடத்ததிபன்
கூறுஞ் சுபருடனே கூடிநிற்கில்-வீறுநல்லன்
பாவியுட னேகூடிப் பாவித்தா னத்திருந்து
மேவியிடிற் பாவனாம் விள்.

(இ - ள்) ஜென்மலக்கினத்திற்கு இரண்டாம் வீட்டுக் குடையவனாவது, 11-ஆம் வீட்டுக்குடையவனாவது சுபர்களெனக்கூறும் சந்திரன்-புதன்-குரு-சுக்கிரன் இந்நான்கிலொருவருடன் கூடிநிற்கில், மேற்சொன்ன 2-11-ஆம் வீட்டுக்குடையவனே நல்லவனாம், மேற்சொன்ன 2-11-ஆம் வீட்டுக்குடையவர்கள் கொடிய கிரகங்களென்னும் சூரியன்-குஜன்-சனி-ராகு-கேதுடன்கூடி கொடிய ஸ்தானமென்னும் 6-8-12-ல் கூடிநிற்பார்களேயாமானால் மேல்சொன்ன 2-11-ஆம் அதிபர்களே பாவிகளாவார்கள் எ-று.

(வி-ரை) இச்செய்யுளில் 2-11-ஆம் அதிபர்கள் சுபர்களாயினும், பாவர்களாக மாறுவதையும், பூரணசுபர்களாக மாறுவதையும் கூறியுள்ளார். ஏனெனில், உலகிற் பிறந்த மக்களுக்கு தனம் லாபம் இவ்விரண்டுமே முக்கியம். ஆனது பற்றியே, தனாதிபதியோ அல்லது லாபாதிபதியோ சுபனாயிருந்தும் பாவனாவதும், பாவனாயிருந்து சுபனாவதையுங்கூறியுள்ளார். செவ்வாய்க்கு சேர்க்கையாலும், பார்வையாலும், தன்குணம் நீங்கி விசேஷகுணமுண்டாகு மாகையால், இங்கு இவ்விதமான பாவாத்பாவதோஷ விசேஷங்களை யறிந்து நிச்சய பலனறிவது முக்கியமாகும்.

மற்றும் 2-11-க்குடையவர்களின் விசேஷகுணங்களைப் பற்றியும் இங்கு கூறுவாம்.

"இரண்டிடத்தோன் நான்கிடத்தோன் பதினொன்றோனும்
 எவராகினும் சுபர்களுடனே சேர



முறண்படைத்த மனைகளெல்லாம் வந்துதீரும்
 முன்னவனால் சுகமடைவன் முழுதும்கேளு"

என்பதால் 2-11-க்குடையவர்கள் சுபர்களுடன் சேரினும், சுபத்தானங்களில் நிற்கினுமவன் பூரணராஜயோக பலனைக் கொடுப்பான் என்பதாம். 5

(8-க்குடையவ னியல்பு)

எட்டுக் கதிபதியும் பாக்கியத்துக் கேவசையாய்த்
தொட்ட விரயாதிபனாய்த் தோன்றுமந்த-வட்டமத்துக்
காதிபதி பொல்லா தவனிலக்கி னாதிபனா
யோதிலவ னேகநல்ல னோங்கு.

(இ-ள்) எட்டாம் வீட்டுக்குடையவனே பாக்கியத்தானமென்னும் ஒன்பதாம் வீட்டுக்கு விரயாதிபனாக வருவதால் அவனை பாக்கியத்திற்கு விரயாதியெனப் பெயருண்டாயிற்று. ஆதலால், அட்டமஸ்தானத்திற்கு சொக்ஷேத்திரத் தானாதிபதி பொல்லானென்னும் கொடியவன், மேற்சொன்ன அட்டமாதிபனே லக்கினாதிபதியாகவரில் முன்சொன்ன கொடியவனென்னும் பெயர்நீக்கி சுபனாவனென்றும் சாஸ்திரங்களில் கூறியுள்ளன எ-று.

(வி-ரை) இச்செய்யுளில் அட்டமத்தோனில் அசுபகுணத்தையும், அட்டமத்தோனே சுபனாக வருவதையும் கூறியுள்ளார். அட்டமாதிபதிக்குக் கொடியவனென்னும் பெயர் ஏன் உண்டாகவேண்டுமென்றால், பாக்கியத்தானத்திற்கு விரயாதிபன் என்றதனாலேயாம். ஆயினும் லக்கினாதியே அட்டமாதியாயின் ஷி தோஷமில்லையென்பதும் இந்நூலாசிரியராலேயே கூறப்பட்டன. ஏனெனில் மேஷலக்கினத்தோர்க்கு அட்டமாதியும் லக்கினாதியும் குஜனேயாவன். துலாலக்கினத்திற்கு லக்கினாதியும் அட்டமாதியும் சுக்கிரனாவன். ரிடபத்திற்கு லக்கினாதியும் சஷ்டமாதியும் சுக்கிரன். விருச்சிகத்திற்கு லக்கினாதியும் சஷ்டமாதியும் குஜனாவன். ஆனதுபற்றியே

அட்டமாதி யென்னும் எட்டாம்வீட்டோனே லக்கினதியாகில் மேற்சொன்ன பாவத்துவமில்லை யென்றும் கூறியுள்ளார். 6

(8-ஆமிடதோஷம் சூரிய சந்திரர்க் கில்லையெனல்)

ஓங்குமட்ட மாதிபதி யோர்தோடஞ் சூரியற்கு
மேங்கு மதிதனக்கு மில்லையே-பாங்கல்லால்
வேறு மொருமதத்தில் வீழ்தோடங் கொஞ்சமாய்த்
தேறியிடச் சொல்வதெனத் தேர்.

(இ - ள்) ஜென்மலக்கினத்திற்கு எட்டாமாதிபத்திய தோஷம் சூரியன் - சந்திரன் இவ்விருவருக்கு மில்லையாம். ஆயினும், சூரிய சந்திரர்கள் வேறு கிரகங்களென்னும் குஜன்-புதன்-குரு-சுக்ரன்-சனி-இராகு-கேது இவர்களுடன்கூடி மேற்சொன்ன 8-ஆமிடத்திலிருக்கில் அட்டமாதிபத்தியதோஷம் கொஞ்சமுண்டு. இவற்றை நன்ருய் பகுத்து ஆராய்ந்து கூறுவாயென்பது சாஸ்திரவிஞ்ஞானர்களின் கருத்தாகும் எ-று.

(வி-ரை) 6-8 என்னும் இவ்விரு க்ஷேத்திரதோஷமும் சூரிய சந்திரர்களுக் கில்லையாம். ஏனெனில், சூரிய சந்திரர்கள் எக வீட்டுக்கிறைவராயினும் சேர்க்கை தோஷத்தால் மேற்சொன்ன அட்டமாதிபத்தியதோஷம் கொஞ்சமுண்டு என்பதை இந்நாலாசிரியரும் இந்நாலுக்கு முன்னுள்ள 'ஓராசாரம், சந்திராவளி' என்னும் நாலுடையவரும் பொருந்தக் கூறியுள்ளார். எனினும், வேறுமொரு மதத்தில் மதம் யென்பது ஜாதியென்றும், ஜாதியென்பதை இராசியென்று சிலரும், கிரகம் என்று சிலரும் கொள்வர். ஆதலால் அட்டமாதிபன் சூரியன் சந்திரனுகவிருந்து வேறு கிரகங்களுடன் கூடினும் மேற்சொன்ன அட்டமாதிபத்தியதோஷம் கொஞ்சமுண்டென்றும் கூறுக. 7

(7-2-ஆம் வீட்டோ னியல்பு)

இலக்கினத்துக் காமிரண்டேழ் மாரகமா மென்று
மலேக்குமிரண் டான்கொல் லானல்லா-விலக்கினத்துத்
தோன்றுமந்தப் பாவிகணென் காமதனிற் சொல்லுகின்ற
மூன்றெட்டு மாரகமாய் மூட்டு.



(இ - ள்) ஜென்மலக்கினத்திற்கு இரண்டாம் வீட்டுக்குடையவனும், 7-ஆம் வீட்டுக்குடையவனும், அந்த ஜாதகனுக்கு மாரகாதிபதியாவார்கள். ஆயினும், இரண்டாம் வீட்டோனென்னும் மாரகாதிபதி கொல்லமாட்டான். மற்றுமெவர்கொல்வாரெனில், ஒவ்வொரு லக்கினத்திற்கும் மாரக பாவகர் நால்வர். அவர்களுக்கு 3-8-க்குடையவர்களே கொல்வாரென்று சுருதிப்படி கூறுவாய் எ-று.

(வி-ரை) இவை முக்கியமாய் கவனிக்கத்தக்க விஷயமாகும். எப்படியெனில், பல நூலாசிரியர்களும், 2-7-ஆம் இடத்ததிபனே மாரகாதி யென்றும், அதிலும் இரண்டாம் மாரகாதியைவிட 7-ஆம் மாரகாதிபதியே விசேஷ மாரகனென்றும் கூறியுள்ளார். இந்நூலாசிரியர் பாவிகள் நால்வர் என்றதால் 3-6-8-12-க்குடையவர்களை பாவிகளெனக் குறிப்பிட்டார். மூன்று எட்டுக்குடையவரும், 6-க்கு மூன்றெட்டுக்குடையவர்களும், 8-க்கு மூன்றெட்டுக்குடையவரும், 12-க்கு 3-8-க்குடையவருமே கொல்வாரென்று உறுதியாய் கூறியுள்ளார்.

உதாரணமாக கீழ்கண்ட சாதகப்படி கவனிப்போம்.

| | | | |
|---|---|---|---|
| ல | சனி | ராகு | |
| | இராசி | | |
| | | | சூ-அ சுக் |
| | கே | சங் | பு-கு |

இந்த சாதகனுக்கு மாரகாதிபனை மேற்சொன்ன செய்யுளின்படி கவனிக்குமிடத்து 3-க்கு 3-8-க்குடையவர்கள் சந்தி

ரன்-குருவும், 6-க்கு 3-8-க்குடையவர்கள் சுக்கிரன்-குருவும், 8-க்கு 3-8-க்குடையவர்கள் குரு-சுக்கிரனும், 12-க்கு 3-8-க்குடையவர்கள் செவ்வாய் - புதனுமே யாவார்கள். ஆயினும் குரு மூன்று விதத்தில் மாரகாதியாய் வந்தமையால் குருவே முழுமாரகனென்றும், 2-ஆம் வீட்டோனுன குஜனும், 8-ஆம் வீட்டோனுன சுக்கிரனும் கெண்டாதிபிணியைத் தருவார்க ளன்றி கொல்லார் என்பது இச்செய்யுளின் கருத்தாகும்.

மற்றும் மாரகபாவங்களைப் பின்வரும் செய்யுளாலுங் காணலாம். 8

(மாரகம் செய்வோர் யோகம் கொடுப்பாரெனல்)

மாரகத்தா னந்தன்னில் வந்தோர்சம் பந்தமுள
பேருந்தான் மாரகமாய் பேசியிடிற்-சீரரசர்
யோகம் பிறந்தவருக் கோர்மாறுப் புத்திதிசை
யாகவரும் யோகங்க ளாம்.

(இ-ள்) மாரகத்தானத்தில் சம்மந்தப்பட்டவர்கள் மாரகம் என்று சொல்லும் ஆயுள் விரயத்தை செய்வார்களேயாமானுல் ஷை மாரகாதியோ திசாநாதனே யோககாரகனுகவரில், அந்த ஜாதகனுக்கு ராஜயோகமுண்டாகும். அவ்வாறு ராஜயோகம் பிறந்தவருக்கு ஓர்விதமான யோகத்தைக் கொடுத்து அந்தத் திசையின் கொடிய புக்திகளில் யோகத்தைத் தருவதுடன் மேலான பதவியும் கொடுப்பர் எ-று.

(வி-ரை) இச்செய்யுளில் எந்த லக்கினத்திற்கும் மாரகாதியாய் வந்தவனே யோகத்தைக் கொடுப்பவனுகவும்வரில் ஏதோ சிற்சில புக்திகளில் மாத்திரம் யோகத்தைக் கொடுப்பானென்றும் கூறியுள்ளார். ஆனதால் யோகத்தைத் தருபவனே மாரகாதியுமாகிவரில் அவன்திசையில், கொடிய ஆதிபத்தியம் பெற்றவர் புக்தியில், மாரகமும் சுபத்துவம் பெற்றவர்களின் புக்தியில் ராஜயோகத்தையும் தருவார்களென்பதே அர்த்தமாகிறது.



ஆனதால், யோகத்தைத் தருபவன் மாரகம் செய்வானென்றும், யோகத்தைத் தராதவன் மாரகம் செய்யானென்றும் கண்டறிக. மற்றும் மாரகதோஷத்தில் வலுப்பெற்றவர்களைப் பின்வரும் செய்யுளால் அறியலாம். 9

(மாரகம் செய்வதில் குருவும் சுக்கிரனும் வலியரெனல்)

மாரகத்தோ டத்தினுக்கு வன்குருவுஞ் சுக்கிரனும்
மாரகனே யானுல் வலுதோடம்-பாரதனை
விட்டாற் புதனிந் திரவிசனி மேற்செவ்வாய்க்
கட்டாம் பிலநிறையாய்க் காண்.

(இ-ள்) மாரகம் செய்யும் தோஷத்திற்கு தேவகுருவான பிரகஸ்பதியும், அசுரகுருவென்னும் சுக்கிரனும் மாரகதோஷம் செய்ய வலுத்தவர்களாகும். மேற்சொன்ன குரு சுக்கிரன் இவ்விருவர்களையும்விட்டால் புதன்-சந்திரன் - சூரியன்-சனி-குஜன் இவர்கள் ஷை தோஷத்திற்கும் மாரகதோஷத்திற்கு உரியவர்களென்னும் மூன்றும்பிறையைபொத்த புருவங்களையுடையபெண்ணே! கூறுவாயாக எ-று.

(வி-ரை) இச்செய்யுளால் மாரகம் செய்வதில் பலமுடையவர்கள் குரு சுக்கிரனென்றும் ஷை குரு சுக்கிரனுக்குப் பிறகு புதன்-சந்திரன்-சூரியன்-சனி-செவ்வாய் இவ்வைந்துபேரையுங் குறிப்பிட்டனர்.

முன்சொன்ன செய்யுளின்படி மாரகம் செய்வதில் பலமுள்ளவர்கள் 2-7-ஆம் யிடத்துக்கு உரியவரெனினும் ஷை 2-7-ஆம் இடத்துக்குடையவர்கள் குரு சுக்கிர குஜனுகவரில் ஷை மாரகம் செய்வதில் மிக்க பலமுடையவர்களென்றே கூறவேண்டும். மேற்சொன்ன குரு சுக்கிரனுக்கு பின்சொன்ன ஐவர்களும் பலமுடையவர்களென்றுங்கூற யிடமுண்டு. குருவுக்கும் சுக்கிரனுக்கும் ஏன் அவ்வளவு பெருமைகளைப்பற்றி கூறவேண்டுவதெனில்; சுபத்துவத்திலோ, அல்லது அசுபத்திலோ மிக்க சிரேஷ்டம் பொருந்திய கிரகங்களெனவுங் கருதலாம். 10

(12-ஆம் வீட்டோனியல்பு)

உற்ற தமமுந்தா னோர்மார கத்தானன்
பற்றியிருக் கின்றாலும் பார்த்தாலும்-வெற்றியுற
மாரகத்தான் றன்னுடனே கூறுகினு மாரகர்போ
லார வதைத்திடுவ ரன்று.

(இ-ள்) ஜென்மலக்கினத்திற்கு பன்னிரண்டாம் வீட்டுக்குடையவனுடன் மாரகாதிக ளிருவரில் ஒருவரொருவர் கூடியிருந்தாலும், அல்லது மேற்சொன்ன மாரகத் தானாதிபதியைப் பார்த்தாலும், அல்லது மாரகத்தானாதிபதி 12-ஆம் வீட்டுக்குடைவன் கூறியிருக்கினும், அந்த ஜாதகனை மாரகம் செய்துவிடுவரென்று கண்டிப்பாய் கூறுவாயாக எ-று.

(வி-ரை) இதனால் மாரகத்தான் 12-ஆம் வீட்டிலோ அல்லது பன்னிரண்டாம் வீட்டுக்குடையவனுடனோ அல்லது பன்னிரண்டாம் வீட்டோன் பார்வைபெற்றிருக்கிலோ, அவன் மாரகத்தைக் கொடுப்பான் என்பது பொருள்படுகிறது.

இவ்வீட்டுக்குடையவர்கள் மாரகதானத்திற்கு விரயாதிபர்களல்ல. மாரகாதியரென்னும் 2-7-ஆம் வீட்டுக்குடையவர்கள் ஜென்மலக்கினத்திற்குப் பன்னிரண்டாம் வீட்டுக்குடையவர்களுடன் சேர்ந்தாலும், ஷை பன்னிரண்டாம் வீட்டோன் பார்த்தாலும், அல்லது பன்னிரண்டாம் வீட்டோன் வர்க்கமேறி யிருந்தாலுங்கூட மாரகத்தைச் செய்வாரென்பது திண்ணம். 'உற்ற அதமம்' என்பதை 12-ஆம் வீடாகக்கொள்க.

இச்செய்யுளில் 12-ஆம் வீட்டோன் வலிமையைப்பற்றி கூறினாராயினும், இனிவரும் பாட்டால் 12-3-8-6 என்னும்
க்ஷேத்திரத்தோர் மகிமையைப்பற்றி கூறுவார். 11

(3-6-8-11-க்குடையவரியல்பு)

பன்னொன்று மூன்றாறெட் டாதி பதியமிசை
தன்னுடைய சம்பந்தஞ் சார்ந்தவரும்-வன்பாவி
சம்மந்தர் கூடுவதும் பார்க்கிறதுந் தானதுவா
மிம்மகிமை கண்டே யியம்பு.



(இ-ள்) ஜென்மலக்கினத்திற்கு 3-6-8-11-க்குடையவர்களுடன் சேர்ந்தவர்களும், ஜென்மலக்கினாதிபதியுடன் சேர்ந்தவர்களும் கொடிய பாவிகளேயாகும். மேலே சொன்ன 3-6-8-11-க்குடையவர்களுடன் நட்பு கிரகங்கள் கூடிநின்றாலும் அல்லது பார்த்தாலும் மேலே கூறியபடி அந்த கிரகமும் பாவ கிரகமென்னும் கொடிய பலனை விளைவிக்கும் கிரகங்களேயாகும். ஆனதால் இவ்வாறான விசேஷ விதிகளையுங் கூறுவாயாக எ-று.

(வி-ரை) இச்செய்யுளால் 3-6-8-11-க்குடையவர்களுடன் சேர்ந்த கிரகமும் ஓர் பாவியாவானென்பது கருத்தாகிறது. அதிலும் சுபர்கள்சேரினும், பாவர்கள்சேரினும் அந்தபாவக்கிரகங்களைப்போலவே பாவகிரகமாகுமென்பதால் கொடியஸ்தானமெனப் பெயர்பெற்ற 3-6-8-11-ஆம் யிடத்ததிபர்கள் யோகத்தையும் ஆயுளையும் கெடுக்குந்தன்மை யுடையவராதலாலும், சில நூற்களால் யோகத்தைக் கொடுக்கின் மாரகம் செய்வானென்றும், மற்றும் யோகம் கொடாது மாரகாதிபத்திய தோஷம் நீங்கின கிரகமும் மாரகத்திற்கு சமமான கண்டாதிபத்திய பிணியும் கொடுப்பார்களென்றும் கருத யிடமுண்டு.

மற்றும் பல நூற்களில் யோகம் தரும் கிரகங்களைச் சோதிக்குமிடத்து 3-6-8-11-க்குடையவர்கள் பாவக்கோளென்னும் சனி-குஜன்-சூரியன்-ராகு-கேதுவாக வரில் அவர்கள் திசைகளில் பூரணராஜயோகம் உண்டெனவுங் கூறுவர். ()

(கேந்திரகோணாதிபர்களின் பலம் கூறுகின்றது)

பிலகேந்த்ர கோண நாதருக்குப் பேதஞ்
சொல்லும்பாவி சம்பந்த தோட-மிலைமயிலே
யன்னியகண் டங்கோணத் தாதிபருக் குண்டாகு
வின்னதனைப் பார்த்தறிவா யே.

(இ-ள்) பலம்பெற்ற கோணம் என்னும் 5-9-ஆம் அதிபர்களுக்கும் 1-4-7-10-க்குடையவர்களுக்கும் மேலேசொன்ன பாவிகள் சேர்ந்தாலோ பார்த்தாலோ அந்தப் பாவிகளின்

தோஷமில்லை. மற்றுமுள்ள பலமில்லாத கோணங்களுக்கும் கேந்திரமென்னும் 1-4-7-10 என்னும் பலமில்லாத கேந்திராதிபர்களுக்கோ மேலே சொன்ன பாவிகள் தோஷங்களுண்டாகும் என்றும் பாவத்துவம் உண்டென்றுங் கூறுகையால் இவ்வித கேந்திரபலம் கோணபலம் என்பதையும் பார்த்து அறிந்து கூறுவாயாக எ-று.

(வி-ரை) பலகேந்திரம் பலகோணம் என்பதை இராசி சக்கரத்தில் கண்ட கிரகங்களின் பாகைகளை யென்பதினாலறிந்து, 4-ஆம் கேந்திராதிபதி 7-ஆம் கேந்திராதிபதி 10-ஆம் கேந்திராதிபதியும் 5-ஆம் கோணாதிபதி 9-ஆம் கோணாதிபதி 1-ஆம் கோணாதிபதிகளிருக்கும் தாராதரத்தைக் கொண்டே கூறவேண்டும். அவையாவன: 4-ஆம் கேந்திரத்திற்கு 60-பாகையும், 10-ஆம் கேந்திராதிபதிக்கு 90-பாகையும், 5-ஆம் கோணாதிபதிக்கும் 9-ஆம் கோணாதிபதிக்கும் மத்தியில் 120-பாகையு மிருக்குமாகில், பலம்பெற்ற கோணம் பலம்பெற்ற கேந்திரம் என்றும் கொள்ளல் வேண்டும்.

இல்லையேல், கேந்திரபல மில்லாதுபோம். இதனால், நம்பிக்கையான பலன் உரைப்பதும் மிக்க அசாத்யமேயாகும். இன்னும் ஸ்தானாதிபத்திய பலங்களை பாவசக்கரத்தால் கண்டறிந்து கூறுவோருமுளர்.

நாம் முக்கியமாய் கேந்திரபலம் கோணபலம் என்பதைப் பற்றி பாவசக்கிரவகையிலும் காண்பதே முக்கியமாகும். இதனை என்னால் உரை எழுதப்பெற்ற 'சோதிடகளஞ்சியத்திலும், ஜாதக அலங்காரத்திலும்' காணலாம். 13

(கோணாதிபரும் கேந்திராதிபரும் கூடினால்
யோகம் கொடுப்பரென்பது)

சாடுந்திரி கோணத் ததிபதிக டன்னுடனே
நாடுகண்ட மாதிபர்க ணாற்கோளாய்க்-கூடியிடின்
மெத்தப் பலன்றருவர் மேலவர்க டன்றிசையில்
வெற்றியோ கங்கொடுப்பார் விள்.



(இ-ள்) கோணம் என்னும் 5-9-க்குடையவர்களுடன் கண்டத்ததிபரென்னும் 1-4-7-10-க்குடையவர்கள் சேர்வார்களேயாமானால் அவர்கள் யோகத்தைக் கொடுப்பவர்களாம். மற்றும் அவர்கள் திசைவருங் காலங்களில் வெற்றியைத் தரத்தக்க பிரபலமான ராஜயோகத்தையுங் கொடுப்பாரென்றுங் கூறுவாயாக எ-று.

(வி-ரை) கோணாதிபரும் கேந்திராதிபரும் ஓர் ராசியில் கூடிநிற்கில் யோககாரகரென்பது இந்நூலாசிரியரின் கொள்கை. ஏனெனில் முன்சொன்ன செய்யுட்களால் சுபகிரகங்களுக்கு கேந்திராதிபத்தியம் வரில் அவர்கள் தீயவரென்றும், தீயபலனையே தருவாரென்றுங் கூறியதனால் ஷெ கண்டத்ததிபர்கள் கோணத்ததிபர்களுடன்கூடி எந்தராசியிலிருக்கினும் அவர்கள் மேற்சொன்ன பாவத்துவம் நீங்கி சுபத்துவத்திற்கே உரியவரென்பதாம்.

மற்றும்பல நூலாசிரியரும் கேந்திராதிபர்கள் கோணாதிபருடன் கூடினாலும், கோணாதிபர்கள் கேந்திராதிபருடன் கூடினாலும், அவர்கள் ராஜயோகத்தைத் தருவாரென்று கூறியுள்ளார். ஆயினும், கேந்திரத்தில் பலமுடையவர்களும் கோணத்தில் பலமுடையவர்களின் விவரங்களை இங்கே கூறுவாம். 14

(கேந்திரகோண பலம்)

கேந்திரத்திற் பத்தாங் கிளர்திரிகோ ணத்தொன்பா
னாய்ந்தபெல மாம்பெயர்க ளந்ததிபர்-சேர்ந்திருக்கப்
பார்க்கவொரு வர்க்கொருவர் பார்யோகக் காரகரா
மார்க்கு மரிதா மறி.

(இ-ள்) கேந்திரம் என்னும் 1-4-7-10 என்னும் நான்கு ராசிகளில் 10-ஆம் க்ஷேத்திரமே மிக முக்கிய க்ஷேத்ரமாகும். கோணம் என்னும் 1-5-9 என்னு மிவ்விராசிகளில் 9-ஆம் கோணமே மிக முக்கிய க்ஷேத்திரமாகும் என்று கூறுவர். மேற்சொன்ன கோணாதிபரும் கேந்திராதிபரும் ஒன்றுகூடினாலும் பார்த்தாலும் அந்த ஜாதகனுக்கு பிரபலயோகத்தையே

கொடுப்பார்கள். இவ்வாறு கேந்திரகோணாதிபர்கள் ஒன்று சேர்வது மிக அரிது என்று தெரிந்துகொள்வாய் எ-று.

(வி-ரை) கோணத்தில் 9-ஆம் யிடமே முக்கியம் எனவும் கேந்திரங்களில் 10-ஆம் கேந்திரமே பலம் எனவுங் கூறினார். ஏனெனில் 9-ஆம் யிடமென்பது, பொதுவாய் பாக்கியம் பிதா பிரபுத்வம் பெருமை புண்ணியம் உபதேசம் தெய்வபக்தி முதலிய முக்கியஸ்தானங்களாம். 10-ம் யிடம் என்பது புண்ணியம் தொழில் தேவதாபக்தி இரக்கம் ஞானம் பிதாவின் சம்பவங்கள் என்னும் முக்கியதலமாதலாலும், இவ்விருவரும் ஒன்றுகூடின் பிரபலராஜயோகத்தைக் கொடுப்பாரென்பதும் யாவரும் சம்மதிக்கத்தக்கதேயாகும்.

மற்றும் 9-10-க்குடையவர்கள்கூடி எந்த ராசியிலிருந்தாலும் யோகத்தைக் கொடுப்பாரென்பதும், மற்றுமுள்ளவர் குணங்களையும் கீழ்வரும் செய்யுளால் காணலாம். 15

(கேந்திரகோணாதிபர்கள் சம்மந்தயோகம்)

ஒன்பதுபத் தல்லா ருறுதிரிகோ ணங்கண்ட
மன்னியயோ கப்பெயரா மந்ததிப-ரன்பாக
வொன்றுக்கொன் றுய்மருவிச் சம்மந்த முண்டாகில்
நன்றரசர் யோகமாம் நம்பு.

இ-ள். மேலே சொன்ன 9-10-ஆம் அதிபர்கள்போக, மற்றுமுள்ள 1-5 என்னும் கோணேசனும் 1-4-7 என்னும் கேந்திராதிபதிகளும்கூட யோககாரர்களே ஆனாலும், மேலே சொன்ன ஸ்தானாதிபர்கள் ஒருவர் கூடியும் அப்படி கூடுங்கால் ஒருவர்க்கொருவர் சினேகத்துடன்கூடி யிருந்தார்களேயாமானல் அந்த ஜாதகனுக்கும் ராஜயோக முண்டாகுமென்று தெளிவாய்க் கூறுக எ-று.

(வி - ரை) இச்செய்யுளில் 9-10-க்குடைய கேந்திரகோணாதிபர்களைநீக்கி, மற்றுமுள்ளவர்களை கேந்திரகோணாதிபர்கள் நட்புடன் ஒன்றுகூடி. நிற்கில் ராஜயோகத்தைக் கொடுப்பார் என்று கூறினார். ஏனெனில், 4-என்பது $\frac{1}{2}$-பலம், 7-என்பது $\frac{3}{4}$-பலம், 1-என்பது $\frac{1}{4}$-பலம் உடைய கேந்திரமெனவும், 5-ஆம் கோணமும் $\frac{1}{2}$-பலமுடையதே எனவுங் கூறியதனால், இவ்விருவரும் பகைபெருது நட்புபெற்று கூடுவதல்லாது மற்றும் சுபகோட்களின் சேர்க்கையுமிருக்கின் அவர்கள் ராஜயோகத்தைத் தருவார்களென்பது பல நூலாராய்ச்சியில் காணலாம். இதுவே சம்மந்தயோகம் எனப்படும். மற்றும் பல நூற்களில்,

“உறுவொன்பதா மிடத்தோன் வெகுபலவானாகி
உற்றவிடத் ததிபதிகேந்திரத்திற் பாக்கியவான்
பெருந்தந்தை தனிலதிகன் கீர்த்திமான்அரசன்”

என்றுங் கூறியதனாலென்க. 16

(10-க்குடையோ னியல்பு)

பத்துக் கதிபதிதன் பாக்கியத்தி லேயிருக்க
வைத்தாம னீரைந்தில் வாய்த்திருக்கச்-சத்தோ
டவரவர்கள் வீட்டி லமர்ந்திருக்க யோக
முவமாக மேவருமா மோது.

(இ - ள்) ஜென்மலக்கினத்திற்கு தசமகேந்திராதிபதியென்னும் 10-ஆம் வீட்டோன் தன் வீட்டிற்கு பாக்கியத்தானமென்னும் 6-ம் வீட்டிலிருக்க, சந்திரன் முன்சொன்ன 10-ஆம் ராசியில் நிற்க, மற்றுமுள்ள கோட்கள் தன் ஆக்ஷி வீடுகளிலேயே நிற்க, அந்த ஜாதகனுக்கு பிரபல்யமான யோகங்களுண்டாகுமென்றுந் திண்ணமாய்க் கூறுவாயாக எ-று.

(வி-ரை) இச்செய்யுளில் 10-ம் வீட்டோனின் குணத்தை கூறப்பட்டது. 10-ஆம் வீட்டில் சந்திரனும் 10-ஆம் வீட்டோன் 10-க்கு 9-லும் நிற்க ராஜயோகத்தைக் கொடுப்பாரென்றுங் கூறினர். மற்றும்பல சாஸ்திரவாயிலாய் மேற்சொன்னபடி கிரகங்களிருந்தால் சந்திரமங்கள யோகமென்றும் சந்திரமங்கள யோகமென்பது அவன் ஜெனித்தது முதல்

அந்தியகாலம்வரையி லுண்டாவதென்றும், இவ்வாறுன யோக முடையவர்கள் ஆயிரத்திற் கொருவரே என்றும் வராகரோரை யில் சிறப்புபெறக் கூறியதும் கவனிக்கத்தக்கதேயாகும்.

மற்றும் 'சத்தோட வரவர்கள் வீட்டிலமர்ந்திருக்க' என்ற தால் சந்திரன் ஆக்ஷிபெற்றும், 10-ஆம் வீட்டோனும் ஆக்ஷி பெற்று நின்ருலும், சந்திரகேந்திரத்தில் குரு-புதன்-சுக்கிரன் இம்மூவரி லொருவரிருந்தால் அந்த ஜாதகனுக்கு ராஜயோக முண்டாகுமென்றும் கூறுவதற் கிடமுண்டு. 'சத்து' என் பதை உச்சம் என்றும் சிலர் கூறுவர். 17

(8-11-க்குடையவ ரியல்பு)

ஒன்பதுபத் துக்குடையா ரெட்டுப்பன் னென்றதிபர்
இன்பயோ கங்களில்லை யென்றிடினும்-பின்னர்திரி
கோணேசர் சம்மந்தங் கூடிலும்யோ கங்களுண்டா
மாணேறு யோகமுடை யார்க்கு.

(இ-ள்) ஜென்மலக்கினத்திற்கு, கோணங்களில் பலம் பொருந்திய ஒன்பதாம் வீட்டுக் குடையவனுகவோ அல்லது கேந்திரங்களில் பலம் பெற்ற பத்தாம்வீட்டுக் குடையவ னுகவோ வந்து, மேற்சொன்ன 9-10-க்குடையவர்களே 8-11 இவ்வீட்டுக் குடையவர்களாக வருவார்களானல், இன்பத் தைத் தரத்தக்க யோகங்களில்லை. ஆயினும் மேற்சொன்ன 9-ஆம் ஆதிபனே 10-ஆம் ஆதிபனே 8-11-க்குடையவனுக வந்தாலும், அவர்களுடன், திரிகோணுதிபதிகள் என்னும் ஐந்தாம் வீட்டுக்குடையவன் கூடினர்களானல், யோகத்தைத் தருபவர்களாவார்கள். அதன்றியும் ஆண்மையும் ராஜயோக மும் உண்டாகும் என உரைப்பாய் எ-று.

(வி-ரை) இச்செய்யுளில் 9-10-க்குடையவர்களே 8-11-க் குடையவர்களாக வரில் யோகத்தைத் தரமாட்டாரென்றும், அவர்களுடன் முன்சொன்ன கோணத்ததிபதிகளி லொருவர் சேர்வார்களானல், எவர்களுக்கும் யோகமுண்டெனக் கூறி யுள்ளார்.



இச்செய்யுளால் ஆதிபத்யதோஷம் விளங்குகிறது. கேந்ர கோணதிபதிகளென்னும் 9-10-க்குடையவர்களே, 8-11-க் குடையவர்களாயிருந்து அவர்களுடன் 1-5-க்குடையவர்கள் சேராவிடில் அந்த ஜாதகனுக்கு முன்சொன்ன 9-10-க்குடைய வர்கள் யோகத்தைக் கொடுக்கார் எனவுங்கூற யிடமுண்டு.

மற்றும் 6-8-12-க்குடையவ ரியல்பும் 11-ஆம் வீட்டுக் குடையவ ரியல்பும் 10-ஆம் வீட்டோ னியல்பையும் பின்வரும் செய்யுள்களா லறியலாம். 18

(கேந்திரதோஷ மடைந்த 10-ஆம் வீட்டோன் சுபபலனைத் தருவது)

விண்டபத்துக் காதிபர்க்கு விள்கோணத் தோரிலொன்று
தண்டியிடுஞ் சம்மந்தந் தானிருக்கில்-வண்டமிழோர்
சொன்னபத்துக் காதிபதி சொல்யோகக் காரகனு
மன்னரிகந் தான்கொடுப்பான் வந்து.

(இ - ள்) பலம்பொருந்திய கேந்திராதிபதி யென்னும் 10-ஆம் வீட்டுக்குடையவன் கோணம் என்று சொல்லும் 1-5-9-க்குடையவர்களில் எவர்களேனு மொருவருடன் சேர்ந்து நட்பு பெற்றவர்களாயிருக்கின் சாஸ்திரமேதாவிகள் கூறியபடி மேலேசொன்ன 10-ஆம் வீட்டுக்குடைய கிரகமே யோகத் தைக் கொடுப்பதுடன் ராஜரீகமுங் கொடுப்பானென்று கட்டாயமாய்க் கூறுக எ-று.

(வி-ரை) இச்செய்யுளில் கேந்திரம்பெற்ற கிரகங்கள் கோணத்தாதிபதிகூடி இருவரும் நட்பு பெற்றிருக்கில் ராஜ யோகத்தைக் கொடுப்பவனென்று கூறப்பட்டது.

முன்சொல்லிய செய்யுளில் சுபர்களுக்கு கேந்திரதோஷம் சுபகிரகங்களுக் குண்டென்றும், அதிலும் குரு சுக்கிரற்கு அதிகமுண்டென்றும் கேந்திரங்களில் பலம்பொருந்திய 10-ம் வீட்டுக்கதிபர் குரு சுக்கிரனுகவரில் கொடியதோஷமென்றுங் கூறியதை யறியலாம்.

இங்கு 10-ஆம் கேந்திராதிபதி சுபர்களிலெவரானாலும் கோணாதிபத்தியம் பெற்ற சுபர்களுடனோ பாவிகளுடனோ கூடியிருந்தால் ஷெ 10-ஆம் வீட்டுக்குடைய கோட்களெவ ராணாலும் ராஜயோகத்தைக் கொடுப்பாரென்பது அர்த்த மாகிறது.

மற்றும் சில நூற்களில் 10-ஆம் கேந்திரம் குரு சுக்கிரர்க ளிருவரில் எவர்க்கேனு மொருவர்க்கு வந்து 5-9-ஆம் ஆதிபதி யும் சுபனாகவிருந்து அவர்களுடன் கூடியிருக்கில் அவர்கள் திசை புக்தி காலங்களில் பூரணராஜயோகத்தைத் தருவா னென்று கூறப்பட்டிருப்பதையும் அறியலாம். 19

(ராகு-கேதுக்களி னியல்பு)

நன்கேது ராகுவுந்தா னற்கோளைக் கூடுகினும்
பன்சுபர்கள் நோக்குத்தான் பட்டாலு-மன்புடைய
நற்றான மேகுகினு நல்லபல மேகொடுப்பார்
சொற்றியகேள் தங்களுக்குச் சொல்.

(இ-ள்) இராகு கேதுக்களென்னும் சாயாகிரகங்கள் நன்மையான பலன்களைக் கொடுப்பதெப்படி யெனில் மேற் சொன்ன ராகு கேதுக்கள் நற்கோளென்னும் சந்திரன்-புதன்-குரு-சுக்கிரன் இவர்களுடன் கூடியிருந்தாலும், மேலேசொன்ன சுபகோட்களின் பார்வை பெற்றிருந்தாலும், அல்லது சுபஸ் தானங்களென்னும் 1-4-5-7-9-10 என்னும் க்ஷேத்திரங்களி லிருந்தாலும், நல்லபலனையே கொடுப்பார்களென்று உன்னிடம் ஜாதகபலன் கேட்பவரிடத்தில் கண்டிப்பாய் கூறுவாயாக எ-று.

(வி-ரை) இச்செய்யுளால் ராகு கேதுக்கள் பாவர்களாயி னும் அவர்கள் பாபத்துவம் சுபகிரகங்களின் சேர்க்கை பார்வை இடம் முதலியவற்றால் நீங்கி சுபபலனைக் கொடுப்பார்களென்று கருதவேண்டியதாகிறது.

இவை பலநூற்களின் சம்மதமென்றுங் கூறலாம். எப்படி யெனில்,



"சொல்லுகிறேன் ராகுகேதுக்கள் தானும்
சுகமான கேந்திரத்தில் வீழ்ந்தாலுந்தான்
அல்லலிலா சுபர்களுடன் கூடினாலும்
அருமையுடன் சுபர்சேர்ந்து நின்றிட்டாலும்
தொல்லையில்லை ஜாதகற்கு சுகமுண்டாம்
சூக்ஷமுடன் பொன்பொருளும் சேரும்பாரு
எல்லையிலா தனம்படைத்து குபேரனவன்
எவருக்கும் நன்மைபெற வாழ்வான்பாரே"

என்பதனாலும் காணலாம். இச்செய்யுள் வெள்ளைச்சொற்க ளானமையால் உரைவேண்டாமென விடுத்தனம். 20

(இராகுவின் குணம்)

கெடிராகு கேந்திரங்கள் கீறுதிரி கோணக்
குடிநாதர் நற்கோளாய்க் கூடித்-திடனாகக்
கேந்திரத்தி நற்சுபர்கள் நோக்கக் கிளர்யோகஞ்
சேர்ந்திருக்கச் செய்வான் றினம்.

(இ-ள்) பலம்பொருந்திய ராகு, கேந்திரங்களென்னும் 1-4-7-10-ல் நின்று புகழ்ச்சிபொருந்திய சுபகிரகங்கள் கோணமென்னும் 1 - 5 - 9 - க்குடையவர்களுடன்கூடி பலம் பெற்றிருக்கவும், கேந்திரமான 1-4-7-10-ல் நின்ற சுபகிரகங் கள் நோக்கமுமானால், அந்த ஜாதகனுக்கு பூரணராஜயோக முண்டென்றுங் கூறுவதுடன் அவை எந்நாளும் நீங்காத யோகமாயிருக்குமென்றுங் கூறுவாயாக எ-று.

(வி-ரை) இச்செய்யுளிலும் இராகு கேதுவின் கொடிய குணம் மாறுபட்டு நற்குணமுண்டாவதை கூறியுள்ளார்.

எப்படியெனில் கேந்திரங்களில் நின்ற ராகு கோணாதி பத்தியம் பெற்ற சுபகிரகங்களுடன் கூடியும் கேந்திரங்களி லுள்ள சுபர்கள் பார்க்கவுமானால் ஷெ இராகு எந்நாளும் நீங்காத ராஜயோகபலனைக் கொடுப்பவ னென்பதாம்.

இவை ஆதிபத்திய பலத்தாலும் சுபகோட்களின் சேர்க் கையாலும் மாறுபடுவதாம். ஏனெனில் இராகு கேதுக்கள்

ஆக்ஷிவீடில்லாத சாயாகிரகமாகையாலும், அவர்கள் நின்ற வீட்டுக்குடையவர் அல்லது சேர்ந்தவர் பார்த்தவர் என்னுமிவர்களின் பலனையே தருவார்களென்னும் சாஸ்திரமிருப்பதாலும் இவ்வாறு கூறினாரெனக் கொள்க. அதிலும் பிரமாத யோகத்தைத் தருபவரென்றும் கூறலாம். 21

(இராகு கேதுக்களே மாரகம் செய்வாரெனல்)

செல்திரிகோ ணாதிபருஞ் சேர்ந்தகண்டக் காதிபருங்
கொல்கேது ராகு வுடன்கூடில்-வல்பிலமாய்க்
கூடின் வரும்பாம்புங் கொல்யோகக் காரகராம்
நாடியிதைச் சொல்வாய் நயந்து.

(இ-ள்) கோணாதிபதிக ளென்னும் 1-5-9-க்குடையவராவது கேந்திராதிபதிக ளென்னும் 1-4-7-10-க்குடையவராவது கொல்லத்தகுந்த கொடியவரென்னும் இராகு கேதுக்களுடன்கூடி மிக்கபலம் பெற்றிருப்பார்களேயாமானால் மேலே சொன்ன இராகு கேதுக்களே யோககாரகரும் அந்த ஜாதகனைக் கொல்லத்தகுந்தவருமாவார்கள். ஆனதால் இதனை நன்காராய்ந்து கூறுவாயாக எ-று.

(வி - ரை) கேந்திரகோணாதிபதிகள் இராகு கேதுக்களுடன்கூடி பலம் பெற்றிருப்பார்களேயாமானால் ஷை இராகு கேதுக்களே கொல்லத்தகுந்தவரும் யோகத்தைக் கொடுப்பவருமாவார்களெனக் கூறினார்.

இதனால் இராகு கேதுக்கள் சுபர்களுடனே அல்லது சுபஸ்தானாதிபதியுடனே சேர்ந்திருக்கில் யோகம் கொடுக்கின் மாரகம் செய்வாரென்றும், யோகமில்லையேல் மாரகம் செய்யாரென்றுங் கூறபிடமுண்டு. ஏனெனில், இராகுவுக்கு வைராக்கிய காரகரென்றும், கேதுவுக்கு மோக்ஷகாரகரென்றும், அவர்கள் எந்தயிடத்தில் நின்றார்களோ அந்த ராசியதிபதியின் பலனையே கொடுப்பார்களென்றும் சாஸ்திரசம்மதமிருப்பதாலென்க. 22



(இராகு கேதுக்களின் க்ஷேத்திர சம்பந்த விவரம் கூறுகின்றன)

மீறுமிரு பாம்பிருந்த வீட்டுக் கதிபதிதா
னேறுமிரா சிக்குடையோ னேராகி-யூறுய்க்
கலந்தகோ ளின்பயனைக் கண்டளிப்பார் காரக்
குலமரவு தம்மவராங் கூறு.

(இ-ள்) பாம்புகளென்னும் இராகு கேதுக்கள் எந்த ராசியிலிருந்தார்களோ, அந்த ராசிக்குடையவர்கள் எந்த ராசியிலிருந்தார்களோ அந்த ராசிநாதன் மேற்சொன்ன இராகு கேதுகளுக்கு 7-ஆம் ராசியிலிருந்தால் அவர்கள் பலனையும் ஷை இராகு கேதுக்களுடன் எவரெவர்கள் சேர்ந்தார்களோ அந்த ராசிநாதனின் பலனையுமே ராகு கேதுக்கள் கலந்து கொடுப்பார் என்றுங் கூறுவாயாக எ-று.

(வி-ரை) இதனால் ராகு கேதுக்களிருந்த வீட்டுக்குடையோர் இராகு கேதுக்களுக்கு சப்தமராசியிலிருக்கில் அவர்கள் பலத்தையும் இராகு கேதுக்களுடன் சேர்ந்தவர் பலத்தையும் பரித்தே இராகு கேதுவுக்கு பலமுண்டாகுமென்றும். அவர்களில் சுபாசுபபலனையே இராகு கேதுக்கள் கொடுக்கவல்லவர்களெனவுந் திட்டமாய்கூற யிடமுண்டாகிறது. ஏனெனில், இராகு கேதுக்கள் சாயாகிரகங்களென்னும் பெயருடையவரானதினாலேயே என்பதாம். உதாரணம் கீழ்கண்ட சக்கரத்தை கவனியுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| ல | சனி ராகு | | |
| | இராசி | | |
| | | | சூ-சு அங் |
| | | சங் கே | குரு புத |

மேற்காட்டிய சக்கரத்தில் இராகுவுடன் சனியும், கேதுவுடன் சந்திரனுமிருக்கிருர். இராகு கேதுக்கள் நின்ற வீட்டுக்குடையவர்கள் ஷெ ராகு கேதுக்களுக்கு எதிர்ப்படவில்லையாதலால் சனியின் பலத்தையும் சந்திரன் பலத்தையுமே பரித்துத் தருவார்கள் என்றுங்கொள்க. இதனைக் கீழ்க்கண்ட செய்யுளாலும் அறியலாம். 23

(இராகு கேதுக்களுடன் சேர்ந்த கிரகங்களால்
இராகு கேதுவுக்கு பலமெனல்)

கூறு மரவுடனே யெத்தனைகோள் கூடுகினு
மீறுபில வான்பலனை விண்டளிப்பார்-வேறுமற்றப்
பேர்பலனைத் தாரார்கள் பேதைநீ யாராய்ந்து
பாரிதனைச் சொல்வாய் பகுத்து.

(இ-ள்) கொடியவரென்று சொல்லத்தக்க இராகு கேதுக்களுடன் எத்தனை கிரகங்கள்கூடி யிருந்தனவோ அவ்வளவும் ராகு கேதுவுக்கு பலமுண்டாகும். ஆனதால் இராகு கேதுக்களுடன் சேர்ந்த கிரகங்கள் எவரும் பலனைக் கொடுக்கார்கள். ஆனதால் இவ்விஷயத்தை (சேர்க்கையை) நன்ருய் பகுத்து ஆராய்ந்து பார்த்து பலாபலன் உரைக்கவேண்டும் எ-று.

(வி-ரை) இச்செய்யுளில் இராகு கேதுக்களுடன் எத்தனை கிரகங்கள் சேர்ந்திருந்தாலும், அந்த கிரகங்களின் பலத்தை இராகு கேதுக்கள் பரித்து அவர்கள் காலங்களில், தானே அப்பலனைக் கொடுப்பார்களென்று அர்த்தமாகிறது.

சேர்ந்த கிரகங்களில் சுபகோட்களோ அல்லது சுபஸ்தானம்பெற்ற கோட்களோகூடில் அவர் காலங்களில் சுபபலனுண்டென்றும், அசுபகோட்களோ அல்லது அசுபஸ்தானம்பெற்ற கோட்களோ கூடியிருக்கில் ஷெ இராகு கேதுக்களே மேற்சொன்ன அசுபதானுதிபர்களின் பலனைக் கொடுப்பாரெனவுங் கூறவேண்டியது.



முன்சொன்ன செய்யுட்களால் சூரியனுடன் சேர்ந்த கிரகங்களும் பலம்குறைந்து சேர்ந்த கிரகங்களெவர்களானுலும் அவர்கள்பலனை சூரியனே கொடுப்பானென்பதையுங் குறிப்பிடத்தக்கது. 24

(கேந்திரகோணுதிபர் சம்மந்தம்)

கண்டத்திற் பாம்புமுதற் றீயோர் கலந்திருக்கிற்
றண்டகோ ணத்ததிபர் சம்மந்த-முண்டெனினுங்
கோணத்தி ருக்கிற்கண் டத்ததிபர் சம்பந்தம்
பூணயோ கங்களுண்டாம் பொற்பு.

(இ-ள்) கண்டம் என்று சொல்லும் 1-4-7-10 என்னுமிராசிகளில் பாம்பென்னும் இராகுவுடனுவது கேதுவுடனுவது இருந்து அவர்களுடன் தீயர் என்று சொல்லும் சனி-குஜன்-ரவி இவர்கள் கூடியிருந்தாலும், அல்லது கோணுதிபதிகளென்னும் 5-9-ஆம் வீட்டுக்குடையவர்கள் கூடியிருந்தாலும் அல்லது மேலே சொன்ன இராகு கேதுக்கள் 5-9-ஆம் ராசியில் பாவ கிரகங்களுடனும் 1-4-7-10-க்குடையவர்களுடனும் கூடியிருந்தாலும் அந்த ஜாதகனுக்கு மலையைப்போன்று பூரணயோகமே சித்திக்கும் எ-று.

(வி-ரை) இச்செய்யுளால் இராகு கேதுக்கள் கோணத்திலிருந்து கேந்திராதிபதிகள் சம்பந்தப்பட்டாலும் கேந்திரத்திலிருந்து கோணுதிபதிகளும் பாவர்களும் சம்பந்தப்பட்டாலும் யோகமுண்டு என்பதேயாகும்.

இது எதனுலென்ருல் கோணத்திலிருந்த ராகு கேது கோணுதிபர்களின் பலனைத்தர பூரணபலமுண்டு என முன்பே கூறியபடியும், கேந்திராதிபதிகள் சம்பந்தப்பட்டதால் அந்த கேந்திராதிபதிகளின் பலனையுங் கொடுப்பானென்று அர்த்தமாகிறது. மொத்தமாய் இராகு கேதுக்கள் எவர்களுடன் சேர்ந்தாலும் அவர்களின்பலனை இராகு கேதுக்கள் பரித்து தன் திசையிலோ புக்தியிலோ கொடுப்பார்களென்றும் அவர்களே யோககாரகர்களென்றுங் கூறலாம். 25

(கேந்திரகோணேசர் சம்பந்தம்)

கேந்திரகோ ணங்களதிற் கேடில்லாக் கோள்கூடி
யார்ந்திருக்கி லன்னியகோ ணத்ததிபர்-போந்தமலர்க்
கண்ணாலே பார்த்திடினுங் கூடக் கலந்திடினும்
நண்ணுமன்னோர் யோகநல்கு நாடு.

(இ-ள்) கேந்திரங்களென்று சொல்லும் 1-4-7-10-லாவது கோணமென்று சொல்லும் 5-9-லாவது சுபகோட்களென்னும் சந்திரன்-புதன்-குரு-சுக்கிரர்களி லெவராவது கூட்டமாகவோ தனித்தனியாகவோ நின்றிருக்கவும், மற்றுமுள்ள கோணத்தோர் என்னும் அவர்களிருந்த ராசிக்கு 5-9-ஆம் வீட்டுக்குடையவர்கள் சேர்ந்திருந்தாலும் பார்த்தாலும் அவர்கள் பூரணராஜயோகந் தருவார்களெனக் கூறுக எ-று.

(வி-ரை) கோணத்தில் நின்ற சுபகிரகங்களுக்கு அவர்கள் நின்ற ராசிக்கு 5-9-ஆம் ராசியதிபர்களும் கேந்திரங்களிலொன்றில் நின்ற சுபர்களுக்கு, அந்தராசிக்கு 5-9-ஆம் வீட்டுக்குடையவர்களும் கூடினாலும் பார்த்தாலும் யோகத்தைக் கொடுப்பாரென்பதே இச்செய்யுளின் முக்கிய கருத்தாகும்.

இவை சம்பந்த விசேஷமெனக் கூறவேண்டும். எப்படியெனில், சுபர்கள் கேந்திரங்களில் நின்றால் தீயபலனைக்கொடுப்பாரென முன்பே கூறினாலும், அவர்கள் நின்ற ராசிக்கு 5-9-ஆம் வீட்டுக்குடையவர்கள் சேர்ந்தாலும் பார்த்தாலும் அவர்களுக்குண்டாகும் பாவபலன்நீங்கி யோகத்தைத் தருபவர்களாவார்கள். இவை சுபர்களுக்கு மாத்திரமேயன்றி பாவர்களுக்கில்லையாம். 26

(கேந்திரகோணாதிபதிகள் சம்பந்த காரகம்)

தாங்குகண்டங் கோணத் ததிபதிகள் சம்பந்தம்
நீங்கிமூன் றாறெட்டு நேர்பதினொன்-றாங்கதிபர்
காரகசம் பந்தந்தான் சாரில்யோ கத்தினுக்குக்
காரகமா மென்றே கருது.



(இ-ள்) கேந்திரம் கோணம் என்னும் இவ்விரண்டின் அதிபதிகள் ஒருவர்க்கொருவர் சேராமல் அவரவர்கள் வீட்டிலிருந்து ஜென்மலக்கினத்திற்கு 3-6-8-11-ஆம் வீட்டுக்குடையவருடன் சேர்ந்தாலும் காரகம் பெற்றாலும் அந்த ஜாதகனுக்கு பூரணமான யோககாரகம் உண்டென்றும் யோகத்தைத் தருவார்களென்றுங் கருதுவாயாக எ-று.

(வி-ரை) கேந்திராதிபதி கேந்திரத்திலேயே நின்று 3-6-8-11-க்குடையவர்களின் காரகசம்பந்தம் பெற்றாலும் கோணாதிபர்கள் கோணத்திலேயே நின்று 3-6-8-11-க்குடையவர்கள் காரகம் பெற்றாலும் அந்த ஜாதகனுக்கு யோகமுண்டென்பதே இச்செய்யுளின் முக்கிய கருத்தாகும்.

இவை சம்பந்த காரகம் எனப்படும். எப்படியெனில், கேந்திரதோஷம் பெற்ற சுபகிரகங்களுடன் பாவத்தானாதிகள் கலந்தாலும் பார்த்தாலும் காரகம் பெற்றாலும் அவர்களின் பாபத்துவம் நீங்கி சுபபலனைக் கொடுப்பாரென்றும், கோணதோஷமடைந்த பாவர்கள் பாவத்தானம்பெற்ற சுபர்களுடனே அல்லது பார்வையோ காரகமோ பெற்றாலும் யோகத்தைக் கொடுப்பவராவார் என்பது சாஸ்திரங்களின் கொள்கையாகும்.

மற்றும் பாவர்களுக்கு 3-6-8-11-ஆம் ஆதிபத்தியம் வரில் சுபபலனைக் கொடுப்பார் என்பது சாஸ்திர சம்மதமாகும். 27

(யோகதிசை விஷயம்)

நன்யோகக் காரகர்க ளன்றிமற்றோர் நற்றிசையின்
மன்யோ கமுமுண்டாம் வந்திடினும்-பன்யோகக்
காரகரே யாகிற் கனபலனீ வார்மற்றோ
ராரநிறை யக்கொடுப்ப ராய்ந்து.

(இ-ள்) திசைவருங் காலங்களில், திசாநாதனே யோககாரகனாகவு மிருப்பானாகில், அந்ததிசை காலங்களில் அளவிடமுடியாத விசேஷயோகத்தைக் கொடுக்கும். அதிலும் சுபர்களாயிருந்தாலும் யோகத்தையே கொடுப்பார்கள். யோக

காரகனல்லாத சுபர்களின் திசையாகவரில், அவர்கள் திசை காலங்களில் விசேஷ சுபபலனைத் தராவிட்டாலும், அவர்கள் தன்மைக்குத் தக்கபடி அளவாகவாவது கொடுப்பார்கள் எ-று.

(வி-ரை) எவர்களுக்கும் சுபர்களுடையதிசையில் பலனைத் தரும். அந்த திசாநாதன் யோககாரகனும் சுபனுமாக வரில் விசேஷ சுபபலனையும் யோகத்தையும் கொடுப்பார்கள். யோக மில்லாதவரும் பாவிகளுடைய திசையாயிருக்கினும், (அவை யாவன) கொடிய ஆதிபத்தியம் பெற்றவர்களாயினும் அவர்கள் சுபர்களாயிருக்கின் அளவுடன் தன்மைக்குத்தகுந்த யோகத் தைக் கொடுப்பார்கள் என்பது இச்செய்யுளின் கருத்து.

யோகன் - சுபன் - மாரகன் - பாவி என்பதை கீழ்வரும் அட்டவணையில் கண்டு கொள்க.

| இராசி | பாபர் | சுபர் | மாரகர் | யோகர் |
|---|---|---|---|---|
| மேடம் | ச-சு-பு | கு-சூ | சனி-பு | சனி |
| இடபம் | கு-சு-ம | ச-சூ | கு-சு-ம | சனி |
| மிதுனம் | அ-கு-சூ | சு | அ-கு-சூ | குரு |
| கடகம் | சு-ச-ம | அ-கு | சு-சனி-சங் | அங் |
| சிங்கம் | சு-பு | அ | சு-பு | அங் |
| கன்னி | அ-கு-ம | சு | அ-கு-சங் | சு-பு |
| துலாம் | கு-சூ-அ | சனி-பு | கு-சூ-அ | பு-சங் |
| விருச்சிகம் | பு-அ-சு | சங் | பு-அ-சு | சூ-சங் |
| தனுசு | சு | அ-சூ | சங்-சு-கு-சனி | சூ-பு |
| மகரம் | கு-ம-அ | சு-பு | கு-அ-சூ-பு-சனி | சுக் |
| கும்பம் | கு-ம-அ | சு | ம-அ-சூ-பு-சனி | சுக் |
| மீனம் | ச-சு-சூ-பு | அ-ம | சங்-சு-பு-சூ | அ-குரு |

இப்பெயர்கள் கிரகங்களின் முதலெழுத்தைக் குறிக்கும். 28



(திசாநாத ரியல்பு)

இரவிமுத லொன்பதுகோ ளேற்குந் திசையிற்
சருவுமவர் புத்தியினிற் றூரார்-மருவுபலன்
வேறொருவர் புத்தி யநுசரித்து விள்பலன்கள்
கூறுகூறாய்க் கொடுப்பார் கூறு.

(இ-ள்) சூரியன்-சந்திரன் - செவ்வாய்-புதன்-குரு-சுக்கிரன்-சனி-இராகு-கேதுக்க ளென்னும் நவகோட்கள், அவ ரவர்கள் தன் திசைவருங்காலம் தன் சுயபுக்தியில் பலனைக் கொடுக்கார். அவர்களின் பலனை மற்றும் பின்வரும் புக்தி களில் புக்திநாதனிருக்கும் தாரதரத்தை யறிந்தே கூறுகூறாகக் கொடுப்பார்களென்றும் கூறுவாயாக எ-று.

(வி-ரை) இச்செய்யுளில் எந்த திசாநாதனும் தன் சுய புக்தியில் பலனைக்கொடுக்கான். தன்சுயபுக்தி போக மற்ற புக்தி களில் அவரவர்கள் ஸ்தானபேதத்திற்குத் தக்கபடியே வெவ் வேறாய் பலனைக் கொடுப்பார்கள் என்று கூறினர்.

இவை பல சாஸ்திரமொழியாலும் கூறப்பட்டிருப்பதை யறியலாம். தன் சுயபுக்தியில் பலனைக் கொடுப்பவர் மற்றைய புக்தியில் அந்ததிசை முடியும்வரை பலனைக் கொடுக்கார்க ளென்று சோதிடர்களின் முக்கிய கருத்தாகும். 29

(கேந்திரகோணாதிபர்களின் திசை யியல்பு)

கேந்திரத்துக் காதிபதி கேட்கிலுந் தன்றிசையில்
போந்ததிரி கோணேசர் புத்தியினிற்-சேர்ந்தபலன்
றந்திடுவர் கோணேசர் தன்றிசையில் கேந்திரேசன்
றொந்தபுத்தி யிற்கொடுப்பார் சொல்.

(இ-ள்) கேந்திரமென்று சொல்லும் 1-4-7-10-க்குடை யவர்கள் தன்மை யெப்படியெனில், அவர்கள் திசையில் ஜென்மலக்கினத்திற்கு கோணாதிபதியான 1-5-9-க்குடையவர் புக்தியிலே பலனைக் கொடுப்பார்களாகையால் மேற்சொன்ன

கோணுதிபர்களான 5-9-க்குடையவர்கள் திசை நடக்கும் போதும் முன்சொன்னபடியே கேந்திராதிபதிகளான 1-4-7-10-ஆம் வீட்டுக்குடையவர் புக்தியிலேயே பலனைத்தருவார்களென்று கூறுவாயாக எ-று.

(வி - ரை) இச்செய்யுளில் திசாபுக்தி நாதர்களைப்பற்றி கூறியுள்ளார். எப்படியெனில் கோணுதிபதி திசையில் கேந்திராதிபதி புக்தியும், கேந்திராதிபதி திசையில் கோணுதிபதி புக்தியும் பலனைத் தருமென்பது கருத்தாம்.

'யோகத்தைக் கொடுப்பார்' என்பது பிரபலயோகம் எனப்படுவதால், எந்த திசையிலும் மேற்சொன்னவாறே ஆதிபத்யபலம்கொண்டு அவ்வாருன புக்திநாதர் வருங்காலங்களிலேயே பிரபலயோகமுண்டாகு மென்பது மற்றெல்லோராலும் சம்மதிக்கப்பட்டும் அனுபவத்திலும் நடந்துவருவதையும் அறியலாம்.

இங்கு தோஷமுண்டாகும் திசையில் எவர் புக்தியில் பலனைக் கொடுப்பார் என்பதுபற்றி விளக்குவார். 30

(கேந்திரகோண தோஷங்களைப்பற்றிக் கூறுவது)

சொல்லுமிரு வோர்தனக்குந் தோடமுண்டாய்க் கேந்த்ரேசன்
புல்லியிடுஞ் சம்பந்தம் பொய்த்திடினு-நல்லதுதான்
பூண்ட திசையதனிற் கேந்த்ரேசன் புத்தியினில்
நீண்ட சுபமளிப்பார் நின்று.

(இ-ள்) திசாநாதன் புத்திநாதன் இவ்விருவர்களுக்கும் தோஷமுண்டா யிருந்தாலும், மேற்சொன்ன யிருவர்களிலொருவருடன் மேன்மைபெற்ற கேந்திராதிபதி சம்பந்தமுண்டாயிருப்பாரேயாமானல், அவர்களும் விசேஷ சுபபலனைக் கொடுப்பவர்களேயாவார்கள். எப்போதெனில் 6-8-11 என்னும் தோஷமடைந்த திசாநாதனில், கேந்திரமென்னும் 1-4-7-10-க்குடையோன் புக்தியில் மேலான ராஜயோகத்தையளிப்பார்கள் எ-று.



(வி-ரை) இச்செய்யுளில் ஆதிபத்தியதோஷமடைந்த திசாநாதனுயினும், கேந்திரம் பெற்றவர்களின் புக்தியில் விசேஷ சுபபலனைக் கொடுப்பார்கள் என்பதை விசேஷமாய்க்கூறினர்.

மற்றும் 'சொல்லு மிருவோர் தனக்குந் தோஷமுண்டாய்' என்றதால், திசாநாதனுக்கும் புக்திநாதனுக்கும் பகையாயிருக்கினும் என்றும் சிலர் அர்த்தம் கொள்வர். அப்படி திசாநாதனுக்கும் புக்திநாதனுக்கும் பகையுண்டாயிருக்கினும், புக்திநாதன் கேந்திராதிபதியானல் சுபபலனைக் கொடுப்பானென்பதில் ஐயமில்லை. ஆனல் திசாநாதனுக்கு புக்திநாதன் பகையாயிருப்பதுடன் சுபனுகவு மிருக்கவேண்டுமென்பது சாஸ்திரங்களின் கருத்தாகும். 31

(திசைபுக்திநாதர்களின் முக்கிய விசேஷம்)

ஏற்றதிசை யிற்பலன்க ளெப்போ தருள்வரெனி
லாற்ற லவர்க்குமூன் ருறெட்டுத்-தேற்றுபதி
னென்றுக் குடையரல்லா லொத்தசமா னக்கிரக
நன்றுபுக்தி யிற்கொடுப்பார் நல்கு.

(இ-ள்) எந்த திசாநாதர்களும் தன் சுபாவகுணம் என்னும் சுபபலனை எப்போது கொடுப்பார்களென்ருல், ஒவ்வொரு திசாநாதனுக்கும் 3-6-8-11-க்குடையவர்களல்லாது மற்றவர்கள் பாவர்களாயிருக்கினும் அல்லது மற்றெவர்கள் புக்திநாதனுக வரினும் அவர்கள் புக்தியிலேயே மேற்சொன்ன யோகத்தை பிரபல்யமாகக் கொடுப்பார்களென்றுங் கண்டிப்பாய் கூறுவாயாக எ-று.

(வி-ரை) இச்செய்யுளில் திசாநாதனுக்கு 3-6-8-11 இவ்வீட்டுக்குடையவர்களைத் தவிர மற்றெவர்கள் புக்தியிலும் மேற்சொன்ன திசாநாதன் பூரண ராஜயோகத்தைக் கொடுப்பவனுவான் என்றுங் கூறியுள்ளார். ஏனெனில் ஜென்மலக்கினத்தைக்கொண்டு, எவ்வாறு 3-6-8-க்குடையவர்கள் பாவிகள் என்று கூறுகிறேமோ, அத்தன்மைபோலவே திசாநாதனைக் கொண்டும், திசாநாதனுக்கு 3-6-8-12-க்குடையவர்களைத்

தவிர மற்றவர் விசேஷ சுபபலனைத் தருவார்கள் எனவுங் கூற வேண்டும். 32

(3-6-8-11-க்குடையவர்க ளியல்பு)

ஏற்றதிசை நாதனுக்கு மேந்துபுத்தி நாதனுக்குந்
தோற்றமூன் றாறெட்டுத் தொல்பதினொன்-றாற்றதிபர்
சம்பந்த மில்லையெனிற் றாமிருவோ ரும்பலன்கள்
செம்ம ன‌ளிப்பார் சிறந்து.

(இ-ள்) எந்த ஜாதகனுக்காவது திசைவருங்காலம் திசாநாதனுடனாவது புக்திநாதனுடனாவது ஜென்மலக்கினத்திற்கு 3-6-8-11-ஆம் வீட்டுக்குடையவர்கள் சேராமல் தனித்திருப்பார்களேயாமானால், முன்சொன்ன திசாநாதனும் புக்திநாதனும் விசேஷ சுபபலனையே தருவார்கள் என்றுங் கூறுவாயாக.

(வி-ரை) இச்செய்யுளில் திசாநாதனுடனும், புக்திநாதனுடனும், 3-6-8-11-க்குடையவர்கள் சேராவிடில், முன்சொன்ன திசாபுக்திநாதர்கள் பூரணபலனைக் கொடுப்பாரென்றுங் கூறினார்.

இதனால் 3-6-8-11-க்குடையவர் கொடியவர்களென்று கூறவேண்டியதும் மேற்சொன்ன 3-6-8-11-க்குடையவர்களை பல நூற்களிலும் கொடியத்தானாதிபதிகளென்றே கூறியிருப்பதுடன் அவர்கள் திசைபுக்தியும் வேறு சுபகோட்களின் பார்வை சேர்க்கையில்லாவிடில் கொடிய பலனையே கொடுப்பார்களென்பதில் ஐயமில்லை. ஆயினும் திசாநாதன்முன் 32-ஆம்பக்கத்தில் கண்டபடி யோககாரகனாகில், கொடியவரல்லவென்பதை பின்வரும் செய்யுளால் காண்க. 33

(யோககாரகருக்கு 3-6-8-11-க்குடையவர்
தோஷம் செய்யாரெனல்)

தானுவெனு மாயோகக் காரகாள் சம்பந்தந்
தோனுமூன் றாறெட்டுத் தொல்பதினொன்-றாணதிபர்
வன்றிசையில் வெற்றியுள மாயோகக் காரகாள்
தன்புசிப்பில் யோகந் தரும்.



(இ-ள்) மேலேசொன்ன 3-6-8-11 என்னுமவர்கள் திசை வருங்காலம் அந்த ஜாதகனுக்கு 32-ஆம் பக்கத்தில் காட்டியபடி யோககாரகர்களெவர்களோ அவர்கள் புக்தியில் பிரபலமான யோகத்தையே தருவார்களென்றும் சாஸ்திரமேதாவிகளால் கூறப்பட்டுள்ளன எ-று.

(வி-ரை) இச்செய்யுளில் ஒவ்வொரு ஜாதகர்களுக்கும் யோககாரகர் வந்தால் கொடியதானாதிபதியான 3-6-8-11-க்குடையவர் திசையிலும் மேற்சொன்ன யோககாரகாள் புக்தி வருங்காலம் யோகத்தையே தருவார் என்பதே அர்த்தமாவதாலும், எக்காலத்தும் யோககாரகாள் எவ்விதமான சேர்க்கை பார்வையாலும் பலங்குறையாது. தனது சுபாவமான சுபத்துவத்தையே தருவார் என்னும் சாஸ்திரவிதியிருப்பதாயும் தெரிகிறது. இவை யோகத்தை தருபவரின் பெருமையென்றுங் கூறலாம். மற்றும் யோகத்தைக் கொடுப்பவர் மாரகாதியும் கொடியவருமே என்பதை பின்வரும் செய்யுளாலு மறியலாம்.

(மாரகாதியும் பாவர்களும் யோகம் கொடுப்பரெனல்)

சீரரசர் யோகமது சேர்ந்துவருங் காலங்கண்
மாரகத்தான் றிசையில் வந்தெய்தும்-பாரதனுள்
பாவபுத்தி யின்மிகுதி பாக்கியமுங் கீர்த்திகளு
மேவுமற்றப் புத்திசமன் மெய்.

(இ-ள்) ஒவ்வொரு ஜாதகர்களுக்கும் சிறப்புபெற்ற ராஜயோகம் எப்போது உண்டாகுமெனில், மாரகம் செய்யத்தகுந்தவர்கள் திசையிலேயே மேற்சொன்ன ராஜயோகமானது உண்டாகும் என்றும், மேற்சொன்ன மாரகத்தோன் திசையில் பாவர்களென்று சொல்லும் சனி-ராகு-கேது என்னு மிவர்கள் புக்தியில் பாக்கியங்களும் பலரால் கீர்த்தியும் உண்டாகும். மற்ற புக்திகள் சமபலனையே கொடுக்கும் என்று உண்மையாய் கூறுவாயாக எ-று.

(வி-ரை) இச்செய்யுளால் மாரகம்செய்பவரே யோகத்தையே கொடுப்பாரெனக் கண்டிப்பாய் கூறியுள்ளார். அதிலும்

மாரகம் செய்வோன் திசையில் கொடியபாவிகள் புக்தியே செல்வம் கீர்த்தி முதலியனவற்றை யளிக்குமென்றும், மற்ற புக்திகள் சுபபலனையே கொடுக்குமெனவுங் கூறியது பலசாஸ்திரங்களாலும் சம்மதிக்கத்தகுந்ததேயாகும். மற்றும் மாரகம் செய்யத்தகுந்தவர் யோகத்தைக் கொடுப்பாரென்பதற்கு,

“கொல்லும் பாவர் திசையதனில்
கூடும் யோகம் பலவாக.” என்றும்,

“மாரகம் செய்வோர்கள் மந்தனிருபாம்பு எனில்
மாரகமும் செய்வர் மதிகொடுப்பர்-தாரணியில்
என்னுளும் செல்வ மினிக்கு மிளமயிலே
பொன்னுளும் ராசனென்பர் போந்து.”

என்னும் செய்யுளால் மாரகாதிகள் சனி-இராகு-கேதுக்களாகில், ராஜயோகத்தைக் கொடுப்பதுடன் மாரகம் செய்வார் என்றுங் கூறியதனு லறியலாம். 35

(பாவர்களும் ஆதிபத்தியத்தால் பாவிகளான சுபர்களும்
யோகம் கொடுப்பாரெனல்)

சாற்றும் பவர்சுபங்க டந்தார் சுபர்திசையிற்
போற்றுசுபர் புத்திவரிற்·பொங்குசெல்வந்-தோற்றிவிடு
மென்பதற்குச் சந்தேகமில்லை யிளமுலைமேற்
பொன்புனையு மாதே புகல்.

(இ-ள்) பாவர்களென்று சொல்லும் சூரியன்-சனி-குஜன்-இராகு-கேது யிவர்கள் திசையிலும், ஆதிபத்தியதோஷத்தால் தன் சுபத்துவத்தையிழந்த சுபர்களான சந்திரன்-புதன்-குரு-சுக்கிரன் யிவர்கள் திசையிலும், போற்றத்தகுந்த சுபகோட்களின் புக்திவரில் அவர் வருங்காலம் ஏராளமான செல்வத்தைக் கொடுப்பார் என்பதிற் சந்தேகமில்லை யாதலால் அழகிய இளங் கொங்கையையுடைய மாதே! இதனைக் கட்டாயமாய்க்கூறுக.

(வி-ரை) இச்செய்புளில் ஆதிபத்திய தோஷத்தால் தன் சுபத்துவத்தையிழந்த சுபர்களின் திசையிலும் பாவர்களின்



திசையில் சுபர்களின் புக்தியிலும் யோகமுண்டாகுமென்று கூறினமையாம்.

சுபர்களுக்கு ஆதிபத்தியதோஷ மாத்திரமுண்டேயன்றி அவர்கள் திசை வருங்காலம் பாவர்கள் திசையில் சுபர்கள் புக்தியிலும், சுபர்கள் திசையில் பாவர்கள் புக்தியிலும் நற்பலனைத் தருவாரென்பதாம். இவை பலநூற்களின் ஆராய்ச்சியாலறியலாம். 36

(யோகாதிகளின் திசையில் பாவர்கள் பலன்
கொடுப்பாரெனல்)

மன்யோக காரகா ளாந்திசையில் வந்திடுமேற்
பன்புத்தி நாதனுக்குப் பாவமுறிற்-றன்றோட
மில்லையந்தப் பாவிபுத்தி யில்யோக மெத்தவுண்டாஞ்
சொல்லும்பின் யோகங்க ளுண்டு.

(இ-ள்) இராஜயோகத்தைக் கொடுக்கத் தக்கவர்களின் திசை வந்தகாலத்து புக்திநாதர்கள் சுபர்களாயிருந்து அந்த சுபர்களுக்கு ஆதிபத்தியத்தால் தோஷமுண்டாகி பாவியாயிருக்கினும் அந்த பாவத்துவம் இல்லையாம். மேற்சொன்ன பாவிகள் புக்தி நடக்குங்காலங்களிலேயே யோகமென்றும், அவை நாளுக்குநாள் மிக்க பிரசித்திபெற்ற யோகமாயிருக்குமென்றுங் கூறுவாயாக எ-று.

(வி-ரை) யோகத்தை தரத்தக்கவர்கள் சுபர்களாயினும் பாவர்களாயினும் அவர்கள் திசைவருங்காலம் ஆதிபத்தியத்தால் கொடியவரெனப் பெயர்பெற்ற சுபர்கள் புக்தியும் நற்பலனைக் கொடுப்பாரென்றுங் கூறினர். ஏனெனில் முன்புசொல்லிய செய்புளில் பாவர்கள் திசையில் சுபர்களின் புக்தியிலும், சுபர்கள் திசையில் பாவர்கள் புக்தியிலும் பலனைக் கொடுப்பார் என்றபடி சுபனுகை விருந்தவர்கள் ஆதிபத்திய தோஷத்தால் பாவியானமையால் அவர்கள் புக்தியிலும் விசேஷபலனையே தருவார் என்பதுவேயாகும். இனி பின்வரும் செய்யுளால் மற்ற விஷயங்களையுங் காணலாம். 37

இதுவுமது

தூண்டுமவர் சம்பந்தந் தோன்றுநற்கோ ளில்யோகம்
பூண்டளிப்பன் சம்பந்தம் பூணாது-தாண்டுநற்கோள்
புத்தியுந்தான் முன்போற் பொருந்துஞ் சமபலனை
மெத்தத் தருவார் விரைந்து.

(இ-ள்) மேலேசொல்லியபடி நற்கோளென்னும் சந்திரன்-புதன்-குரு-சுக்கிரன் என்னு மிவர்கள் புக்திகளிலும் யோகமுண்டாகும். மேற்சொன்னபடி ஆதிபத்திய தோஷத்தால் கொடியவனான கோட்களுடன்கூடிய சுபர்களின் புக்தியுங்கூட முன்சொல்லியபடியே சமமான பலனையாவது சீக்கிரத்தில் கொடுப்பாரென்றுங் கூறுவாயாக எ-று. 38

(யோககாரகன் திசையில் யோககாரகன் புக்தியில் பலனெனல்)

விரைந்துவரு மாயோக காரகாள் வெற்றி
பொருந்துஞ்சம் பந்தமில்லாப் போங்தே-யிருந்துவரு
மன்னியோ கங்களுட காரகா ளாம்புசிப்பில்
மன்னுயோ கங்கள் வரும்.

(இ-ள்) வரிசையாய் யோகத்தைத் தரத்தக்க ஆதிபத்தியம் பெற்றுவரும் பூரணயோகத்தைத் தருபவர்கள் வெற்றியையுடைய சுபஸ்தானங்களிலோ அல்லது சுபத்தானாதிபதிகளுடனே சேர்ந்திராவிட்டாலும், பார்வை பெறாவிட்டாலும், திசாநாதனைப்போலவே மற்றுமொருவர் யோககாரகனாயிருந்து அவர்கள் புக்திவருங்காலம் அல்லது அந்திரசூக்ஷ்ம சித்திர காலங்களிலாவது ராஜயோகத்தைக் கொடுத்தேதீருவன் எ-று.

(வி-ரை) யோகம் கொடுப்பவர் நற்க்ஷேத்திரங்களிலோ நல்ல கோட்களுடனே சேர்ந்தாவது பார்வை பெறாவது இல்லாவிடினும் தன்னைப்போன்ற யோககாரகாள் புத்தியிலாவது தனக்குரிய யோகபாவத்தையொட்டி ராஜயோகத்தைக் கொடுப்பாரென்று கூறுவதால் யோககாரகனை பலவிதஆராய்ச்சி



மூலமாக யோகமுண்டாகுங் காலமெப்போதென்று அறிய வேண்டியிருக்கிறது.

ஏனெனில் பொதுவாய் யோகஸ்தானம் பெற்றவர்களின் திசைவராவிட்டாலும் அவனுடன் சேர்ந்தவன் பார்த்தவன் யோககாரகனிருந்த வீட்டுக்குடையவன் திசையிலோ அல்லது புக்தியிலோ தான் ஆதிபத்திய யோகபலனைகொடுத்தே தீருவானென்ற கருத்தினாலேயாம். 39

(எந்த திசையாயினும் யோககாரகன் புக்தியில் பலனெனல்)

சார்யோக காரகா டங்களுட சம்பந்த
மேர்கிலாக் கோளி லெதிர்திசையி-லார்யோகக்
காரரவர் புத்தியினிற் காணும் பலன்கொடுப்பர்
மேறு மொருவிடத்தே விள்.

(இ-ள்) எந்த திசாநாதனும் வந்தகாலத்து அந்த திசாநாதனுடன் யோக ஆதிபத்திய கிரகங்கள் சேராவிட்டாலும் ஷை திசாநாதனை யோககாரகாள் பார்த்திருக்கின் அவர் புக்தியிலும், அவ்வாறில்லையேல் பொதுவாய் கூறியபடி யோககாரகர்களின் புக்தியாலாவது தன் ஆதிபத்தியம் பெற்றபடி யோகத்தைக் கொடுப்பாரென்றும் அவ்விதமான புக்தி யெதுவென்றுங் கண்டறிந்து கூறுவாயாக எ-று.

(வி-ரை) எந்த திசாநாதனும் யோககாரகாள் சம்பந்தமில்லாவிடில் பார்க்கப்பெற்ற யோகன் புக்தியும் அல்லது பொது விதிப்படியுள்ள யோககாரகன் புக்தியிலாவது பலனைக் கொடுப்பார்களென்றுங் கூறியுள்ளார். ஆனதால் எந்த திசையும் எந்த காலத்தில் பலன் கொடுப்பாரென்று அறிந்துகொள்ள அந்த திசாநாதனுடன் யோககாரகர் சேர்ந்தனரா அல்லது பார்த்தனரா வென்றாராய்ந்து அவர்கள் புக்தி அந்திரகாலங்களில் ஷை யோகத்தைக் கொடுப்பாரென்று ஆராய்ந்து கூற வேண்டுமென்பது திண்ணம். 40

(யோககாரகர் எவ்விதத்தும் பலன் கொடுப்பார் எனல்)

விண்கேது ராகுவுக்கு மேல்யோக காரகா
ளெண்மருவு சம்மந்த மில்லையெனு-நன்திசையிற்
யோகமுள காரர்புத்தி யுற்றபொழு தேயோகம்
வாகு படக்கொடுப்பார் மாண்பு.

(இ-ள்) சாயாகிரகங்களென்னும் இராகு அல்லது கேது இவ்விருவர்களின் திசையும் வந்தகாலத்து ஷை இராகு-கேதுக்களுடன் பலம்பொருந்திய கிரகங்கள் சேராவிடினும் ஷை திசையில் பொதுவாய்கூறியபடி யோககாரர்களின் புக்தியாலாவது, அவர்களின் புக்தியானது ஆரம்பித்த உடனேயே யோகத்தைக் கொடுத்தேதீருவார்கள். அவை பிரமாதமான யோகமாயுமிருக்கும் எ-று.

(வி-ரை) இராகு-கேதுக்கள் யோககாரகர்களுடன் சேராவிட்டாலும் பொதுவில் இப்படி கூறிய யோககாரகன் புக்தியிலாவது தன் சுபாவகுணப்படி மேலான யோகத்தைக் கொடுப்பார்கள் என்பதே இச்செய்யுளின் கருத்தாகிறது.

ஏனெனில் இராகு-கேதுக்களின் விசேஷகுணங்களைப் பற்றி முன்பே கூறியுள்ளமையால் இங்கு விசேஷமா யுரையாமல் சுருக்கிச் சொல்லில், மேற்சொன்ன யோககாரகன் புக்தியோ அல்லது அந்திரசூக்ஷுமகாலங்களோ எவ்வளவிருந்தாலும், அந்தகாலத்துக்குள் அவர்கள் வைராக்கியப்படி அளவிறந்த பலனைக் கொடுப்பார்கள் என்றுங் கூறுக. 41

(கொடியவர்கள் திசையில் ஆதிபத்யதோஷமடைந்த
சுபர்கள் பலன் கொடாரெனல்)

பாவிதிசை யாயவர்கள் சம்பந்த மேபரவத்
தேய்வுசுபக் கோள்புசிப்பிற் றீதுபலன்-மேவியிடு
மன்னோர்சம் பந்தமுள நற்கோட்க டன்புசிப்பி
லென்ற திருவினையு முண்டு.

(இ-ள்) கொடிய கோட்களென்னும் தீயவர்கள் திசையிலாவது, அல்லது தீயவர்களுடன்கூடினவர்களின் திசையிலாவது ஜென்மலக்கினப்படி ஆதிபத்தியதோஷமடைந்த சுபர்களில் புக்தி அந்திரகாலங்களில் பலனைக் கொடார்கள். மற்றுமெவர் கொடுப்பாரென்றால், பாவிகளுடன் சேர்ந்த சுபர்கள் புக்தி அந்திரகாலங்களில் அளவிடமுடியாத செல்வம், கல்யாணம், கௌரவம், என்னு மிவற்றை பிரபலமாகக் கொடுப்பார் எ-று.



(வி-ரை) கொடிய கோட்களின் திசையாவது கொடிய கோட்களுடன் சேர்ந்தவர்கள் திசையிலாவது ஜென்மலக்கினப்படி கொடிய ஆதிபத்தியம் பெற்ற சுபர்கள் பலனைக் கொடார்கள் என்றாலும் சுபர்களென்னும் சந்திரன்-புதன்-சுக்கிரனென்னும் இவர்கள் ஒருவர்க்கொருவர் சேர்ந்துள்ள யோககாரரென்னும் சுபர்கள், ராஜயோகத்தைக் கொடுப்பார்கள் என்பதே இந்த செய்யுளின் முக்கிய கருத்தாகும்.

ஆனதால் எந்ததிசை வரினும் ஜென்மலக்கினப்படி கொடிய ஆதிபத்தியம்பெற்ற சுபர்களையறிந்து அவர்கள் திசையில் பலன் கொடார் என்றும் கொடியவர்கள் திசையில் கொடியவர்களுடன்கூடிய சுபர்கள் புக்தியிலும் பலனுண்டெனக் கொள்க. 42

(இங்கு மாரகம் செய்வோரியல்பு கூறப்படுகிறது
யோகமும் அரிட்டமும் கொடுப்பவ ரிவரெனல்)

திசைநாதன் பாவியாய்ச் சேர்ந்தபுத்தி னாத
னசையோக காரகரா நண்ணி-னிசையாக
ராசயோ கங்கணல்கி யேயரிட்டங் கூடத்
தராசுநிறை போலளிப்பார் சற்று.

(இ-ள்) திசாநாதன் பாவர்களென்னும் சனி - ராகு-கேது - குஜன் - சூரியனென்னு மிவர்களி லொருவரானாலும் பொதுவிதிப்படி பாவியானாலும் அவர்கள் திசையில் யோககாரகர்களின் புக்திவருங் காலங்களில் மேலான ராஜயோகங்களைக் கொடுப்பதுடன், தராசுநிறைபோன்று கட்டாயமாய்

அரிட்ட தோஷத்தையுங் கொடுப்பார் எனவுங் கூறுவாயாக எ-று.

(வி-ரை) திசைநாதன் பாவியாய் என்றமையால் பாவர்களென்னும் சூரியன்-குஜன்-சனி-ராகு-கேது என்னுமிவரையும் ஒவ்வோரிலக்கினத்திற்கும், 32-ஆம் பக்கத்தில் கூறிய பாவர்களையும் சேர்க்கவேண்டியதாயிற்று. மற்றும் அந்தந்த லக்கினத்திற்குள்ள பாவிகளின் திசையென கணக்கிட்டு கூறலாம். இவை அனுபவவாயிலாகவே காணவேண்டும். எப்போதெனில் முன்சொன்னபடி பாவர்கள் திசை வருங்காலங்களிலென்பதாம்.

தராசு நிறை என்றதால் ஏற்றத் தாழ்வின்றியென்றும் கொள்ளுக. 43

(பாவிகளும் யோகம் கொடுப்பா ரெனல்)

ஆகாத யோகமுள காரகா ளாந்திசையில்
வாகாநல் யோகமுந்தான் வந்தெய்தும்-யோகம்
வருங்காலெப் போதென்றால் மாயோகக் காரர்
பெரும்புசிப்பி லுண்டாகும் பேசு.

(இ-ள்) பாவிகளென்னும் கொடியவர்கள் திசையிலும் கூட முன்சொன்னபடி யோகமுண்டாகும். அவ்வாறு யோகமுண்டாகும் காலம் எப்போதெனில் அந்தந்த லக்கினத்திற்கு வரும் யோககாரகர்கள் புக்தி அல்லது அந்திரம் சூக்ஷ்மம் முதலியவை வருங்காலமே யோகத்தைக் கொடுப்பாரென்று கட்டாயமாய்க் கூறுக எ-று.

(வி-ரை) இச்செய்யுளில் பாவர்கள் திசையிலும் யோககாரகர் புக்தியில் யோகமுண்டாகுமென்று கூறினர். ஆனாலும் பல நூலாராய்ச்சியால் எவர்கள் திசையிலும் யோககாரகர்களின் புக்தி அந்திரகாலங்களில் யோகமுண்டாகும் எனவும், அவை தராசு நிறைபோன்று ஏற்றத்தாழ்வின்றி யிருக்குமெனவும், முன்சொல்லிய செய்யுளா லறியலாம். ஆனதால் அவை சமயோகமென்றே கூறுவதற்கு இடமுண்டாகிறது. 44



(பாவிகளுடன் கூடியயோகர் பலன் கொடா ரெனல்)

தீயோர் திசையிலந்தத் தீயோர்சம் மந்தமுள
மாயோக காரகர்த மன்புசிப்பிற்-றேயு
மவபலன்கண் மெத்தவுண்டா மானபலன் றூரா
ருவமையுள்ள மின்னே யுரை.

(இ-ள்) தீயோர் என்று கூறப்பட்ட பாவிகளின் திசையில் பாவர்களுடனேகூடிய யோககாரகரென்னும் யோகத்தைத் தர வல்லவர்கள். யோகத்தைதராது மெத்தக் கடினமாகிய கொடியபலனையே கொடுப்பார்கள். அவர்களின் புக்தியின் அந்தியகாலபரியந்தம் கொடிய பலனையே கொடுப்பாரென்று அழகு பொருந்திய பெண்ணே! கட்டாயமாய்க் கூறுவாயாக எ-று.

(வி-ரை) இச்செய்யுளில் பாவர்கள் திசையில் பாவர்களுடன்கூடிய யோககாரர்களின் புக்தியில் கொடிய பலனையே கொடுப்பானென்று கூறினர். இதனால் பாவர்களுடன்கூடிய யோககாரகன் திசையின் திசையில் பாவத்துவம் பெற்றவர்களின் புக்தியிலும் பலன் கொடுக்காரென்றுங் கூறவேண்டியதாகிறது. ஏனெனில் முன்சொன்ன 42-ஆம் செய்யுளில் பாவர்கள் திசையில் சுபக்கோள்களின் புக்தியில் தீயபலனே உண்டாகுமாயினும், சுபகிரகங்களுடன்கூடிய யோககாரகன் பலன் கொடுப்பானென்றதினாலேயாம். 45

(இதுவுமது)

மாரகா டன்னுடைய சம்பந்த மாக்கமுள
சார சுபர்புசிப்பிற் றுன்கொல்லா-னேருடைய
சம்பந்த மில்லாத்தீ யோர்புசிப்பிற் றுன்கொல்வா
னம்ம விதுகண்டே யறி.

(இ-ள்) எந்த திசாநாதனாயினும் மாரகத்தானாதிபதியுடன் கூடியிருந்தாவது அல்லது பார்த்திருந்தவர்கள் திசையாவது வந்தகாலத்து சுபர்களென்னும் சந்திரன்-புதன் - சுக்கிரன் என்னும் சுபராவது அந்தலக்கினத்திற்குடைய சுபர்கள் புக்தியாவது மாரகம் செய்யமாட்டான். மற்று மெப்போது செய்வா

னெனில், மேற்சொன்ன சுபகிரகங்களின் சேர்க்கையில்லாத கொடிய பாவர்களின் புக்திவருங் காலங்களிலேயே கொல்வா னென்று அழகுபொருந்திய பெண்ணே! கூறுவாயாக எ-று.

(வி-ரை) மாரகத்தோனுடன்கூடிய அல்லது மாரகாதி யால் பார்க்கப்பெற்றவர்களின் திசையில் சுபர்கள் பார்வை சேர்க்கையில்லாத தீயோர்புக்தியில் மாரகம் செய்வானென்பது இச்செய்யுளின் முக்கிய கருத்தாகும்.

இதனை பல நூலாசிரியரும் ஒப்புக்கொண்டதோடு மார காதிதிசையில் நல்லோர் சம்பந்தமில்லாத் தீயவர்புக்தி காலங் களிலும் கொல்வாரென்பது சாஸ்திரங்களின் கருத்தாகும். 46

(பொது)

இன்னவகை யெல்லா மிசைபு மிலக்கினங்கள்
பன்னிரண்டி னுள்ளும் பரவியே-மன்னியிடு
மாரகரைப் பாவிகளை மாயோக காரகரைச்
சேரவெல்லாஞ் சொல்வேன் தெரிந்து.

(இ-ள்) பல நூலாராய்ச்சியைக் கொண்டு ஒவ்வோரிலக்கி னங்களுக்கும் பாவிகள் எவர் என்பதையும், சுபர்கள், யோகர் மாரகஞ் செய்யத்தகுந்தவர்கள் எவர்களென்பதையும், மாரகாதி பத்தியம் பெற்றவர்கள் எவரென்பதையும் மற்றுமுள்ள விசேஷகுணங்களையும் யாவரும் மதிக்கும்படி உண்மையைக் கூறுகிறேன் கேட்பாயாக எ-று.

(வி-ரை) கீழ்வரும் செய்யுளால் ஒவ்வொரு லக்கினத் திற்கும் மாரகன், யோகன், பாவி, சுபன் என்னுமிவற்றை தெளிவாய்க் கூறுவார். 47

(மேட லக்கினத்தின் விளக்கம்)

மென்மேட லக்கினத்தை மேவிப் பிறக்கிலிந்து
பண்புகர்மா லுஞ்சனியும் பாவிரவி-நன்குருசேய்
நீடுநல்லர் பாக்கியகர் மாதிகுரு நேர்சனியுங்
கூடியிடில் யோகமில்லை கூறு.



(இ-ள்) மேன்மை பொருந்திய மேடமென்னு மிராசியில் பிறந்தவர்களுக்கு இந்துவென்னும் சந்திரனும், புகராகிய சுக் கிரனும், மால் என்னும் புதனும்-சனியும், பாவிகளாவார்கள். ரவியாகிய ஆதித்தனும், நன்மைபொருந்திய குருவும், சேய் என்னும் அங்காரகனும், சுபர்களாவார்கள். பாக்கிய கர்மாதி என்னும் குரு - சனி இவ்விருவர்களும் ஒன்று கூடியிருக்கில் அவனுக்கு யோகமில்லை என்றுங் கூறுவாயாக எ-று.

(வி-ரை) மேடலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு சந்திரன்- சுக்கிரன்-புதன்-சனி-சூரியன்-குரு என்னும் 6-கோட்களும் நல்லவர் என்றும், பாக்கியாதி குருவும், கர்மாதி சனியும் ஒன்று கூடில் இந்த ஜாதகனுக்கு தர்ம கர்மாதி யோகமில்லை யென்ப தாம். இதன் விவரம் கீழ்வரும் செய்யுளால் காணவும். 48

கூறுமந்த ணார்குருவும் பாவிவெள்ளி கொல்லான்பின்
வேறுசனி யும்புதனும் விண்டுகொல்வன்-றேறிப்
பகுந்தரிந்து பார்த்துப் பலாபலன்கள் கண்டே
தொகுத்துரையா யெல்லாந் துடர்ந்து.

(இ-ள்) யாவரும் சொல்லத்தகுந்த சனி குரு இவ்விரு வரும் பாவிகள். சுக்கிரன் மாரகாதிபத்தியம் பெற்றவனானாலும் ஆயுள் விரயம் செய்யமாட்டான். பின்னெவர்கள் கொல்வா ரென்றால் சனியும் புதனுமே கொல்லத் தக்கவர்கள். ஆகலால் மேற்சொன்ன இருவரையும் நன்றாய் கண்டாராய்ந்து மாரகம் செய்பவரையும் யோகம் கொடுப்பவரையுங் கூறுவாயாக எ-று.

(வி-ரை) முன்சொன்ன 48-ஆம் செய்யுளில் சந்திரன்- புதன்-சுக்கிரன்-சனி-சூரியன் - குரு இந்த ஆறுகோட்களும் சுபர்களென்றும், அந்தப்பாவிகளில் கீழ்சொன்ன 49-ஆம் செய் யுளால் சனியும் புதனுமே கொல்வாரென்று கூறினர். சுக்கிரன் கொல்லானென்றும் கூறியுள்ளார். ஆனதால் மேடராசிக்கு 3-6-க்குடைய புதனையும், 10-11-க்குடைய சனியையும் அவர் களிருக்கும் தலவிசேஷத்தை யாராய்ந்து அந்த ஜாதகனுக்கு

ஷ்டி திசைகள் எந்தகாலத்தில் மாரகம் வருமென்பதையு மாராய்ந்து அந்த ஜாதகனின் மரணகாலத்தை கூறுக. 49

(ரிஷபலக்கின விளக்கம்)

தன்னிடப லக்கினத்தைச் சாரச் செனித்தவர்க்குப்
பன்னுமதி பொன்புகரும் பாவியா-மன்னிரவி
காரியுந்தா னல்லவர்கள் காண்சனியன் மாத்திரந்தான்
சாரரசர் யோகந் தரும்.

(இ-ள்) மேன்மைபொருந்திய இடபராசியில் பிறந்த ஜாதகருக்கு பிரகாசத்தையுடைய சந்திரனும், பொன் என்னும் குருவும். புகராகிய சுக்கிரனும் பாவியாவார்கள். கிரகணங்களை பலவுடைய சூரியன் சனி இவ்விருவர்களும் யோகம் தருபவர்கள். ஆனல் சனிதிசையில் மாத்திரமே ராஜயோக பலனைக் கொடுப்பார்களென்று திட்டமாய் கூறுவாயாக எ-று.

(வி-ரை) இடபலக்கினத்தவற்கு சந்திரன்-குரு-சுக்கிரன்-இவர்கள் பாவியெனவும், சூரியன் - சனி என்னுமிருவரும் நல்லவர்களென்றும், அதில் சனி மாத்திரமே யோகத்தைத் தரத்தக்கவனென்றுங் கூறியதை யறிக. இதன் விஷயம் பின் வரும் செய்யுளின் விருத்தியில் காண்க. 50

தருகுருவுஞ் செவ்வாயுஞ் சார்ந்த மதியும்
வருமா ரகனக வாட்டி-வெருவியிடக்
கொன்றிடுவர் புந்திகொல்லான் கூறுதிசை தன்னிலுந்தா
னன்றறிவாய் சொன்னே னயந்து.

(இ-ள்) மிக்கப் பெருமையையுடைய குரு-அங்காரகனும் பிரகாசத்தையுடைய சந்திரனும் ஷ்டி இடபலக்கினத்திற்கு மாரகம் செய்யத்தகுந்தவர்களானதால், ஷ்டி குரு-சந்திரன்-செவ்வாய் இவர்களே கொல்லத்தகுந்தவரென்றும், புந்தியென்னும் புதன் கொல்லமாட்டானென்றும், இடபலக்கினத்தோற்கு பலதிசை வருங்காலங்களில் கண்டறிந்து கூறுவாயாக எ-று.



(வி-ரை) இச்செய்யுளால் இடபலக்கினத்தோர்க்கு புதன் இரண்டாம்வீட்டு மாரகாதியாயினும் கொல்லமாட்டான். பின்பு எவர்கள் கொல்வாரெனில், குரு-சந்திரன்-செவ்வாய் இவர்களே கொல்லத்தகுந்தவரென்றும் கூறியதால், செவ்வாய் 7-12-க்குடையவனும், சந்திரன் மூன்றும்வீட்டுக்குடையவனானாலும், குரு அட்டமலாபாதியானதாலு மென்க.

மற்றும் யோகர்களைக் கூறுமிடத்து, சூரியனும்-சனியுமே நல்லவர் என்றதால், சுகாதியான ரவியும், தர்மகர்மாதியானவர் சனியுமானதாலெனக் கூறுக. 51

(மிதுனலக்கின விஷயம்)

சொல்மிதுன லக்கினத்திற் றோய்ந்து பிறந்திடவே
புல்சேயும் பொன்னிரவி பொல்லாதார்-நல்லவெள்ளி
தானொருவ னல்லன் சனிகுருவுங் கூடியிடில்
மேனரச யோகமில்லை மீது.

(இ-ள்) மிதுனலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு குஜனென்னும் அங்காரகனும், பொன் என்னும் குருவும், ரவியென்னும் சூரியனும் கொடியோர்களேயாகும். மகுத்துவம் பொருந்திய சுக்கிரனொருவனே நல்லவனாகும். இந்த ரிடபலக்கினத்திற்கு சனி குரு இவ்விருவரும் ஒன்றுகூடி யிருக்கில் அவர்கள் ராஜ யோகத்தை கொடாது தடைசெய்வாரென்றுங் கூறுக எ-று.

(வி-ரை) மிதுனலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு சூரியன்-அங்காரகன்-குரு என்னுமிவர்கள் கொடியவரென்றும், சுக்கிரன் ஒருவனே நல்லவனென்றும், இந்த லக்கினத்திற்குச் சனி குரு இவர்கள் ஒன்றுகூடில் ராஜயோக மில்லையென்றுங் கூறியுள்ளா ரென்பதைக்காண்க. இதன் விவரம் பின்வரும் செய்யுளின் விருத்தியில் காண்க. 52

மீது மதிகொல்லான் மீண்டுசெவ்வா யாதித்தன்
வாதுகுரு மூவர்களு மாரகமாய்-சேதமுறக்
கொல்லுவர்க ளென்றே குலவுகடல் சூழுலகி
லெல்லவருஞ் சொல்லா ரிசைந்து.

(இ-ள்) மேற்சொன்ன மிதுனலக்கினத்தில் பிறந்தவர்களை சந்திரன் கொல்லமாட்டான். மற்றுமெவர்கள் கொல்வாரெனில், கொடியோனென்னும் செவ்வாயும், ஆதித்தனுன சூரியனும், பிரகஸ்பதி யென்னுமிவர் மூவர்களே கொல்வார்கள் என்றும் இங்நெடியகடல்சூழ்ந்த உலகின்கண் ஜெனித்த மாந்தர்களுக்கு சாஸ்திர மேதாவிகள் கூறுவர் எ-று.

(வி-ரை) இச்செய்யுளில் மிதுனத்திற்கு ஒருவனே நல்லவனென்றும், சனி குரு இவ்விருவரும் கூடில் இந்த லக்கினத்திற்கு யோகம் கொடாரென்றும், சூரியன்-குஜன்-குரு என்னுமிம்மூன்று கோட்களும் பொல்லாரென்றும் கூறியபடியும், சந்திரன் கொல்லான். செவ்வாய்-குரு-சூரியன் இம்மூவருமே கொல்லத்தகுந்தவ ரென்றும் கூறினுர்.

ஏனெனில், சந்திரன் 2-ஆம் வீட்டுக்குடையவனுயினும் ஏகவீட்டுக் கிறைவனுனதால் கொல்வானென்றும், குரு ஏழாம் மாரகாதியும், கர்மாதி சனியும், சஷ்டமாதி குஜனுமானதால் அவர்களே கொல்வாரென்றும், பிரபுஸ்தானம்பெற்ற சுக்கிரன் விரயத்தானுதியாயினும் அவனே யோககாரகனென்றும் கருத்தாகும். 53

(கடகத்தின் விஷயம்)

கர்க்கடக லக்கினத்திற் காணச் சனித்தவர்க்குச்
சொற்புதனுஞ் சுக்கிரனுஞ் சொல்பாவி-நற்குருவுஞ்
செல்சேயு நல்லவர்கள் சேய்குருவுங் கூடியிடில்
நல்யோகந் தந்திடுவர் நாடு.

(இ-ள்) கடகலக்கின மென்னு மிராசியில் பிறந்தவர்களுக்கு யாவரும் சொல்லத்தகுந்த புதனும், அசுரகுரு வென்னும் சுக்கிரனும் பாவிகளாவார்கள். நன்மையைத் தரத்தகுந்த குருவும், செம்மை நிறத்தைபுடைய அங்காரகனும் யோகம் தரத்தகுந்தவர்கள் என்றும், அங்காரகனும் குருவும் ஒன்றுகூடில் இந்த லக்கினத்தோனுக்கு யோகம் பிரபல்யமாயளிப்பார்க ளென்றும், கடகலக்கினத்தோருக்கு கூறுவாய் எ-று.



(வி-ரை) புதனும் சுக்கிரனும் பாவிகள் என்றது புதன் 3-12-க்குடையவனுனதாலும், சுக்கிரன் 11-ஆம் வீட்டுக்கதிபதியானதாலுமாம், குஜன் குருகூடில் யோகமளிப்பாரென்றது குஜன் 5-10-க்கும் குருபாக்கியபாவத்திற் கதிகாரியானதாலுமெனக்கொள்க. 54

நாடிரவி கொல்லான் நற்கவிமான் மாரகராய்க்
கூடிநின்று கொன்றிடுவர் கோபமதாய்-நீடுமவர்
தன்றிசையி லும்புத்தி தன்னினுந்தான் றப்பாது
பொன்னனையு மாதே புகல்.

(இ-ள்.) மேற்சொன்ன கடகத்தில் பிறந்தவரை பிரகாசம் பொருந்திய சூரியன் கொல்லான். கவியாகிய சுக்கிரனும், மான் என்னும் புதனுமே கொல்லத் தகுந்தவர்கள் என்றும், மேற்சொன்ன சுக்கிரன் புதன் இவ்விருவர்கள் திசையிலாவது ஒருவர் திசையிலொருவர் புக்தியிலாவது கட்டாயம் கொன்றே தீருவர் என்று பொன்போலுந் திருமுகத்தைபுடைய பெண்ணே! இதனைக் கட்டாயமாய் கூறுவாயாக எ-று.

(வி - ரை) இச்செய்யுளில் இரண்டாம் வீட்டோனுன சூரியன் கொல்லானென்று கூறியது கவனிக்கத்தக்கதாகும். சுக்கிரன் புதனுமே கொல்வாரென்றதற்கு சுக்கிர்ன் 11-ஆம் வீட்டுக் காதிபதியானதா லென்க.

* மான் என்பது கன்னியாதலாலும், கன்னிக்குடையவர் புதனுதலாலும், புதனும் ஓர் மாரகனென்பது கருத்தாகிறது. 55

(சிம்மலக்கின விஷயம்)

சேர்ந்தசிம்ம லக்கினத்தைச் சேரச் செனித்தவருக்
கேந்துசனி சுக்கிரனு மேபாவி-போந்தசெவ்வா
யேறு மிரவிநல்ல னின்புகர்சேய் கூடியிடில்
வீறியயோ கங்களுண்டாம் வேறு.

(இ-ள்) சிம்மம் என்னும் லக்கினத்திலே பிறந்தவர்களுக்கு, கொடிய குணத்தினையுடைய சனியும், அசுரகுருவாகிய சுக்கிரனும், பாவர்களாவார்கள் என்றும், புகழ்ச்சியைத் தரத்தக்க அங்காரகனும், இரவியான சூரியனும் சுபர்களாகும். இந்த லக்கினத்தோருக்கு செவ்வாய் சுக்கிரன் இவ்விருவர்களும் ஒன்று கூடியிருக்கில் பிரமாதமான ராஜயோகத்தைக் கொடுப்பார்க ளென்றுங் கூறுவாயாக எ-று.

(வி-ரை) இச்செய்யுளால் சனி சுக்கிரன் என்னு மிவ்விருவர்களும் பாவர்கள் என்றும் யோகங்கொடாதவரென்றுங்கூறிய காரணமென்ன வெனில், சுக்கிரன் 3-ஆம் வீட்டுக்குடையவனும் சனி அஷ்டமாதியு மானதினாலேயாம். 56

வேறுபுதன் கொல்லான் வினைபுகர்மை கொன்றிடுவர்
கூறுமற்றப் பேர்கள்தான் கொல்லார்க-ணேறிப்
பகுத்தறிந்து பார்த்துப் பதராமல் யார்க்கும்
வகுத்தறியு மின்னே மதித்து.

(இ-ள்) இந்த லக்கினத்தோரை புதன் ஆயுள் விரயமான மரணத்தைக் கொடான். சுக்கிரனும் சனியுமே கொல்லத் தகுந்தவராதலால் மற்றெந்த கிரகங்களும் கொல்வதற்கு ஆதிபத்தியமில்லை யாதலால் இவ்விஷயத்தை நன்றாய் பகுத்து கவனித்தாராய்ந்து மாரகம் செய்பவரை தெரிந்து தெளிவு பெறக் கூறவேண்டும். ஏ பெண்ணே! நன்றாய் கவனிப்பாய் எ-று.

(வி-ரை) புதன் இரண்டாம் வீட்டுக்கும், 11-ஆம் வீட்டுக்கும் ஆதிபத்தியமுள்ளவனாயினும் அவர் கொல்லுவதற்கு இல்லை. திருதிய கர்மாதியான சுக்கிரனும், சப்தமாதியான சனியுமே கொல்வார்க ளானதால் இவ்விரு மாரகாதிபர்களில் எவர் கொல்வார் என்பதை இராசிசக்கர பாவாத்பாவ விசேஷத்தால் கண்டறிந்து கொல்பவரைக் கூறுவாயென்றும் கூறியுள்ளார். இவை மாரகாதிபத்தியதோஷமான 3-6-7-10 - ஆம் தானங்களால் கூறப்பட்டதாகும். 57



(கன்னியின் விஷயம்)

கன்னியா லக்கினத்திற் காணச் செனித்தவர்க்குப்
பன்னுகுரு சேய்மதியும் பாவியா-மன்னுசனி
வெள்ளியுந்தா னல்லவர்கள் விண்புகர்மா லுங்கூடிற்
றெள்ளரசர் யோகமுண்டாஞ் செப்பு.

(இ-ள்) ஆறும் ராசியான கன்னியாராசியில் பிறந்தவர்களுக்கு தேவகுருவெனப் போற்றும் பிரகஸ்பதியும், சேய் என்னும் செவ்வாயும், மதியென்னும் சந்திரனும் பாவியாவார்கள். கரியவனென்னும் சனியும், வெள்ளியாகிய சுக்கிரனும் நல்லவர் என்னும் யோகம் கொடுப்பவர்களாம். அசுரகுருவென்னும் சுக்கிரனும், மாலாகிய புதனும் கூடியிருக்கில் அந்த ஜாதகனுக்கு இராஜயோகமுண்டாகு மென்றுங் கூறுக எ-று.

(வி-ரை) இச்செய்யுளால் 5-9-ஆம் ராசியின் மகுத்துவம் விளங்குகிறது. எப்படியெனில், 5-ஆம் வீட்டோன் சனியும், 9-ஆம் வீட்டோன் சுக்கிரனுமானதாலென்க. புதன் சுக்கிரனிவர்கள் கூடில் யோகமுண்டு என்பது தர்ம கர்மாதிபதிகள் ஒன்று கூடியதாலெனக் கொள்ளவும். 58

செப்புபுகர் புந்திகொல்லான் சேர்ந்தசெவ்வாய் சந்திரனு
மொப்பு குருவோ டுடன்மூவர்-தப்பாமற்
கொல்லுவர்கள் கண்டாய் குலவு மிதன்குறிப்பை
யொல்லையினிற் சொல்வா யுகந்து.

(இ-ள்) கன்னியில்பிறந்தோற்கு, யாவரும் புகழத்தகுந்த புதனும் சுக்கிரனும் கொல்லமாட்டார்கள். செந்தீவண்ணனான செவ்வாய்-சந்திரன் - குரு இம்மூவர்களே கொல்லத்தகுந்த பலமுடையவர்கள். ஆகையால் இம்மூவரிலொருவர் தப்பாமல் அந்த ஜாதகனை ஆயுள் விரயம் செய்வர். ஆதலால் இந்த லக்கினத்தின் பாவாத்பாவ விசேஷங்களை யறிந்து எவர் கொல்வாரென்பதை கண்டறிந்து சொல்லுவாய் எ-று.

(வி-ரை) புகரும் புந்தியும் கொல்லா ரென்பதைப்பற்றி முன்கூறிய செய்யுளிலேயே விரிவாய்க் கூறியுள்ளாம். சந்தி

ரன் 11-ஆம் வீட்டுக் காதிபதியானதாலும், செவ்வாய் 3-ஆம் வீட்டுக் காதிபதியானதாலும், குரு 7-ஆம் வீட்டுக் காதிபதியானதாலும் இம்மூவரும் கொல்லத்தகுந்தவர் எனக் குறிப்பிட்டார். இம்மூவரில் எவர் கொல்வாரென்பதை அவர்கள் கிரககுணபாவ விசேஷத்தாலேயே ஆராய்ந்து கூறுதல் நன்மையாகும். 59

(துலாராசியின் விசேஷம்)

துலையிற் பிறந்தார்க்குச் சூரியன்சேய் பொன்னுஞ்
சொலும்பாவி புந்திசனி சுங்கன்-நிலைசுபர்கள்
புந்திமதி யுங்கூடிற் பேரரசர் யோகமுண்டாம்
வந்தசெவ்வாய் கொல்லான் வளைந்து.

(இ-ள்) ஏழாமிராசியான துலாராசியில் பிறந்தவர்களுக்கு இரவியாகிய சூரியனும், சேயாகிய குஜனும், பொன்னாகிய குருவும் பாவிகள் என்றுங் கூறுவர். புந்தியாகிய புதனும், நீலனென்னும் சனியும், சுங்கனாகிய சுக்கிரனும் சுபர்களென்னும் யோகத்தைக் கொடுப்பவர்களாம். இந்த லக்கினத்தோர்க்கு புதன் சந்திரன் இவ்விருவரும் ஒன்று கூடியிருக்கில் மேன்மைபெற்ற ராஜயோகம் சித்திக்கும். ஆயினும், இந்த ஜாதகனை குஜன் மாரகம் செய்யானெனக் கூறுவாய் எ-று.

(வி-ரை) இந்த லக்கினத்தோரை குஜன் கொல்லான் என்றனர். குஜன் இரண்டாம் மாரகாதியாயினும் அதாவது 2-7-க்குடையவனாயினும், செவ்வாயைவிட சூரியன் பலவானதால் குஜன் கொல்லான் என்றனர். புதன் சந்திரன் கூடினால் ராஜயோகமென்றது தர்ம கர்மாதிபதிகள் யோகம் எனக் கொள்க. 60

வளைந்தகுரு சூரியனும் வன்மா ரகராய்க்
களங்கமறக் கொல்லுவர்கள் கண்டாய்-விளங்கியிடு
சூதளவு மென்முலையாய் சோராம லிந்தவகை
யோத வறிந்தே புகல்.



(இ-ள்) பிரகஸ்பதி யென்னும் குருவும், கதிரோனென்னும் சூரியனுமே கடகலக்கினத்தோரைக் கொல்லத்தகுந்தவர்கள். மேற்சொன்ன யிருவரும் கட்டாயம் விடார்களாகையால் கள்ளத்தனத்தையுடைய மெல்லிய இளங்கொங்கைகளையுடைய பெண்ணே! இதனை (பாவவிஷயங்களை) நன்காராய்ந்து கட்டாயமாய் கொல்லும் கோட்களை கூறுவாய் எ-று.

(வி-ரை) இச்செய்யுளில் குரு சூரியன் இவ்விருவரையுமே மாரகம் செய்யத்தகுந்தவர்களெனக் குறிப்பிட்டார்.

ஏனெனில் துலாராசிக்கு 11-ஆமிடமான சிங்கத்துக் கதிபன் சூரியனாகையாலும், சூரியன் லக்கினாதியான சுக்கிரனுக்கு பகையென்னும் காரணத்தால் சூரியனையும் 3-6 என்னும் கொடிய ஆதிபத்தியம் பெற்ற குரு லக்கினாதியான சுக்கிரனுக்கு கொடிய பகையானதாலும் இவ்விருவருமே மாரகம் செய்யத் தகுந்தவர்கள் என கூறியதால், சோதிட விற்பனர்கள் இராசி ஆதிபத்தியத்தால் கொல்லும் பலம் எவருக்குளது என்பதை கவனித்துச் சொல்லவும்.

சுக்கிரனுக்கு குரு பகை என்றது அசுரகுரு தேவகுரு என்னும் காரணத்தை யொட்டியாம். 61

(விருச்சிகராசியின் விஷயம்)

தேளிற் பிறந்தார்க்குச் சேய்புகர்மான் மைபாவி
நாளுமதி பொன்னிரவி நல்லவரா-நீளிரவி
சந்திரனும் கூடியிடிற் றூரரசர் யோகமுண்டாஞ்
சொந்தகுரு காரிகொல்லான் சொல்.

(இ-ள்) விருச்சிகமென்னு மிராசியிற் பிறந்தவர்களுக்குப் பாவர்களெவர்களெனில் சேயென்னும் குஜனும், புகர் என்னும் சுக்கிரனும், மான் என்னும் புதனும், மை என்னும் சனியும் பாவர்களெனச் சொல்லுவர். நாளாவட்டத்தில் தன் கலையை வளர்த்துக் கொள்ளும் சந்திரனும், பொன்னன் என்னும் குருவும், இரவியென்னும் சூரியனும் நல்லவரென்னும் சுபர்களாவார்

கள். மிக்கபிரகாசம் பொருந்திய சூரியனும் சந்திரனும் ஒன்றுகூடியிருக்கில் அந்த ஜாதகனுக்கு மேலான ராஜயோகமுண்டாகும். எந்த லக்கினத்திற்கும் யோகத்தைத்தரும் குருவும் சனியும் மாரகம் செய்யார்களென்றுங் கூறுக எ-று.

(வி-ரை) இச்செய்யுளில் சூரியன்-குரு-சந்திரன் இம்மூவரையும் நல்லவரென்றும், அவர்களில் சூரியனும் சந்திரனும் ஒன்றுகூடியிருக்கில் ராஜயோகத்தைக் கொடுப்பார்களென்றும் கூறியதோடு குருவும் சனியும் அந்த ஜாதகனை ஆயுள் விரயம் செய்யாரென்றுங் கூறினார்.

குரு சனி ஏன் கொல்லாரென்று கூறினாரெனில் குருவுக்கு இரண்டாம் வீட்டாதிபத்தியம் வரினும் ஷை குருவே ஐந்தாம் வீட்டுக்குடையவனாக வந்தாலும், சனி மூன்றாம் வீட்டுக்குடையவனாக வரினும் அவனே நான்காம் வீட்டுக்குடையவனாக வந்தாலுமென்க. 62

சொல்புதனுஞ் செவ்வாயுஞ் சுக்கிரனு மாரகமாய்
வல்லிரவிற் கொன்றிடுவர் வஞ்சகமாய்-நல்மயிலே
யிந்தவர லாறு மிதனிலையு மேநினைந்து
புந்தியினுட் கொள்வாய் புகழ்ந்து.

(இ-ள்) யாவரும் புகழத்தகுந்த புதனும், செங்கோளென்னும் செவ்வாயும், அசுரகுருவென்னும் சுக்கிரனும், மாரகத்தானாதிபதியென்றும், அவர்கள் திடீரென ஓர் பகற்பொழுதிலேயே செய்வாரென்றும், அவை எவருக்கும் தெரியாதென்றும் கூறுவர். ஆனதால் ஏ அழகுடைய பெண்ணே! இவ்வாறான விசேஷ பாவாத்பாவங்களை நன்கறிந்து கிரகங்களிருக்கும் நல்வினை தீவினை இவ்விரண்டையும் நன்றாயாலோசித்து உன் மனதிற்குள்ளேயே தேர்ந்து புகழ்ச்சி கொள்வாயாக எ-று.

(வி-ரை) இச்செய்யுளில் புதன்-சுக்கிரன்-செவ்வாய் இம்மூவரையே மாரகாதிபதிகளெனக் கூறியுள்ளார்.



ஏனெனில் விருச்சிகராசிக்கு புதன் அட்டமலாபாதிபனும், செவ்வாய் சரீரசஷ்டமாதிபனும், சுக்கிரன் 7-ஆம் மாரகாதியும் விரயாதியுமானதினாலென்க.

மற்றுமொருவர் செவ்வாயைப்பற்றியும் சுக்கிரனைப்பற்றியும் செவ்வாய்-சுக்கிரன் இவ்விருவர்களுக்கும் 6-8-என்னு மிவ்விரண்டு தோஷமுங் கிடையாதென்றும், அப்படி மேற்சொன்னவர்களின் திசைவருங்காலம் அரைச்சுபனென்றுங் கூறியதையு மறியலாம்.

மற்றுமொருவர் தேளினுக்கு மாரகரோ சேய்புந்தி என்றனர். இதனால் புந்தி யென்னும் புதன் அட்டமாதிபத்தியமும் லாபாதிபத்தியமும் பெற்றமையால் புதனே விருச்சிகராசியுடையவற்கு மாரகாதியென்றுங் கூற யிடமுண்டு. 63

(தனுர்லக்கின விஷயம்)

தனுசிற் பிறந்தவர்க்குத் தண்புகர்பொன் பாவி
சனிசெவ்வாய் சூரியன்றா னல்லர்-சனிமதியுங்
கொல்லான் புகர்புதனுங் கொல்லுவர்மால் சூரியனும்
மொல்லையினிற் கூடிலுண்டாம் யோகம்.

(இ-ள்) ஒன்பதா மிராசியென்னும் தனுசு ராசியிற் பிறந்தவர்களுக்குத் தன்மைபொருந்திய அசுரகுருவென்னும் சுக்கிரனும், தேவகுருவென்னும் குருவும் பாவிகளாவார்கள். நீலனென்னும் சனியும், செவ்வாயென்னும் சனியும், சூரியனென்னும் கதிரவனும், நல்லோரென்னும் சுபர்களாவார்கள். சனியென்னும் முடவனும், மதியென்னும் சந்திரனும் கொல்லமாட்டார்கள். மற்றுமெவர்கள் கொல்வாரென்றால், புகராகிய சுக்கிரனும் புதனுமே கொல்லத்தகுந்தவர்கள். யோகம் கொடுப்பவர்க ளெவர்களெனில் முன்புசொல்லிய சூரியனும் புதனும் ஒன்றுகூடியிருக்கின் அந்த ஜாதகனுக்கு பூரணராஜயோகம் உண்டாகுமென்றுங் கூறுவாயாக எ-று.

(வி-ரை) இச்செய்யுளில் சனியும் சூரியனும் கொல்லான் என்றனர். ஏனெனில் சனி மூன்றாம்வீட்டுக் குடையவராயி

னும் மூன்றும்வீட்டாதிபத்தியத்துடன் நான்காம் வீட்டாதிபத்தியமும் வந்தமையாலும், மாரகாதிபதிகளெனக் கூறியதையறியலாம். சந்திரனுக்கு அட்டமமென்னும் யோகத்தை கெடுக்கவல்ல ஸ்தானமும் அட்டமஸ்தானமென்னும் பெயர் வந்தமையாலும், மேற்சொன்ன இருவர்களும் கொல்லாரென்றனர்.

புதனும்-சுக்கிரனுமே கொல்வார் என்றமையால் புதனுக்கு 7-ஆம் மிடமென்னும் மாரகஸ்தானாதிபத்தியமும், கர்மாதிபத்தியமும் வந்ததாலும், சுக்கிரனுக்கு சஷ்டமலாபாதிபத்தியம் வந்தமையாலும், இவர்களுக்கே மேற்சொன்ன மாரகாதிபத்தியதோஷம் உண்டென்பதும் இந்நூலாசிரியரின் கருத்தாகும்.

சூரியன்-புதன் கூடில் யோகமென்றதற்கு சூரியன் பாக்யாதிபதியும் புதன் தசமகேந்திராதிபதியுமாய் நின்றதனாலு
மென்றுங் கூறுக. 64

(மகரலக்கின விஷயம்)

தூய்மகர லக்கினந்தான் றோன்றப் பிறந்தவருக்
கேய்விளங்குஞ் சந்திரனு மேகுருவுந்-தீய்பாவி
வெள்ளிசெவ் வாய்நல்லன் விளங்கிரவி காரிகொல்லான்
விள்ளமதி யுங்குருவு மேல்.

(இ-ள்) மகரமென்னு மிராசியில் பிறந்தவர்களுக்கு உலகமெங்கும் ஒளிவீசத் தகுந்த பிரகாசம்பொருந்திய சந்திரனும், தேவகுருவாகிய வியாழனும் கொடிய பாவிகளாவார்கள். அசுரகுருவாகிய சுக்கிரனும், செவ்வாயென்னும் குஜனும் யோகத்தைக் கொடுக்கத்தகுந்த நல்லவர்களாவார்கள். உஷ்ணமும் பிரகாசமும் பொருந்திய சூரியனும் சனியும் மாரகத்தைச் செய்யார்கள். மற்று மெவர்கள் கொல்வார்களெனில், முன் சொல்லிய மதியாகிய சந்திரனும் குருவுமே கொல்வார்கள் எ-று.



(வி-ரை) சுக்கிரனும் குஜனும் யோகத்தைக் கொடுக்கத் தக்க சுபர்கள் என்று கூறினர். ஏனெனில் மகரராசியில்பிறந்தவர்களுக்கு செவ்வாய் சுகலாபாதி யென்னும் 2-11-க்குடையவனும், சுக்கிரன் பஞ்சமராஜ்யாதி யென்னும் காரகனாக வந்தமையாலென்க.

மற்றும் சந்திரன் குரு இவ்விருவர்களே கொல்வாரென்றுங் கூறினர். ஏனெனில் சந்திரன் ஏகவீட்டுக் கதிகாரம் பெற்றவனாதலாலும், குரு திருதியை விரயாதிபத்தியம் பெற்றமையாலுமெனக் கூறவேண்டியதாகிறது.

மற்றும் சனிக்கு சந்திரன் பகை யென்னுங் கருத்தையும் கொண்டதேயாகும். சூரியன் கொல்லான் என்பதால் மகரலக்கினத்திற்கு சூரியன் அட்டமாதியானதாலும், சூரிய
சந்திரனுக்கு அட்டமாதிபத்தியதோஷ மில்லையென்னும் கருத்
தினாலுமென்றுங் கூறலாம். 65

மேலிருவ ருங்கொல்வர் வெள்ளிபுதன் கூடியிடிற்
கோல்யோக மெல்லாங் கொடுத்திடுவர்-நூல்வழியே
பார்த்துவர லாறறிந்து பார்மா ரகரையெல்லாஞ்
சேர்த்துரையு மின்னே தெளிந்து.

(இ-ள்) மேற்சொல்லிய செய்யுளின்படியே சந்திரனும் குருவுமே கொல்லத் தகுந்தவர்கள். மேலும் மகரலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு வெள்ளி யென்னும் சுக்கிரனும், புந்தி யென்னும் புதனும் ஒன்று கூடியிருக்கில் அந்த ஜாதகன் எவ்விதமான யோகத்தை யடையவேண்டுமோ அவ்வளவு யோகத்தையுங் கொடுப்பார்கள். ஆகையால் அழகுபொருந்திய திருமுகத்தையுடைய பெண்ணே! இவ்வித மாரகாதிபத்தியதோஷ விஷயங்களை சாஸ்திரங்களால் பற்பலவிதமாய்க் கலந்து ஆலோசித்து மாரகம் செய்வோரைத் திட்டமாய்த் தெரிந்து கூறுவாயாக எ-று.

(வி-ரை) மகரலக்கினத்தோர்க்கு சுக்கிரனும் புதனும் சேர்ந்திருக்கில் அந்த ஜாதகனுக்கு பூரணமான ராஜயோகத்தைக் கொடுப்பார் என்றனர்.

ஏனெனில் சுக்கிரன் பிரபுத்தானமான ஐந்தாமிடத்திற் கதிகாரியானதாலும், புதன் 9-ஆம் யிடமென்னும் பாக்கிய தானத்திற்கும் அதிகாரம் பெற்றதின் மகுத்துவத்தாலேயாம்.

ஆயினும் புதன் மகரலக்கினத்தோற்கு சஷ்டமாதி பத்தியம் வருகின்றமையால் சிலர் 6-ஆம் வீட்டுதோஷம் கொடியதென்று கூறுவாராயினும், லக்கினத்தோன் சனியாகவின் சனிக்கு புதன் தீங்குசெய்யான் என்னும் கருத்தையொட்டியும் யோகத்தானங்களில் பேர்பெற்ற 9-ஆம் ஆதிபத்தியம் புதனுக்கு வந்தமையாலும் 6-ஆம் வீட்டுதோஷம் அதிகமாய் பாதிக்கப்படாதென்றும் சிலர் கருத்து கொள்வர். 66

(கும்பலக்கின விஷயம்)

கும்ப விலக்கினத்திற் கூடிப் பிறந்தவர்க்குப்
பம்புகுரு சேய்பாவி பண்பிரவி-விம்புபுகர்
புந்திசனி நல்லன் புகர்சேயுங் கூடியிடிற்
றந்தரசர் யோகந் தரும்.

(இ-ள்) குடம் என்று சொல்லும் கும்பராசியில் பிறந்தவர்களுக்கு சுபகிரகங்களெனப் பெயர்பெற்ற குருவும், சேய் என்னும் அங்காரகனும் கொடியபலனைத் தரத்தகுந்த பாவர்களாவார்கள். மற்றும் பிரகாசத்தையுடைய சூரியனும், வெள்ளியாகிய சுக்கிரனும், புந்தியாகிய புதனும், நீலனாகிய சனியும் யோகத்தைத் தரத்தகுந்த நல்லவர்களாவார்கள். இந்த கும்ப லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு சுக்கிரனும் குஜனும் ஒன்று கூடியிருக்கில் மேன்மைபெற்ற ராஜயோகமும்சித்திக்கும் எ-று.

(வி-ரை) கும்பலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு குருவும் செவ்வாயும் பாவர்கள் என்றனர். ஏனெனில்,கும்பராசிக்கு குரு 11-ஆம் ராசிக்காதிபத்தியம் வந்தமையானதாலும், குஜனுக்கு மூன்றுமாதிபத்தியம் வந்தகாரணத்தாலு மென்க.

புதனும் சந்திரனும் நல்லோர் என்றதால் புதனுக்கு ஐந்தாமாதிபத்தியம் வந்த பெருமையாலும், லக்கினாதிபத்தி



யம்பெற்று பெருமைபெற்ற சனியாலு மென்க. மற்றும் சுக்கிரன் செவ்வாய் இவர்கள்கூடில் பிரபலயோகமுண்டாகு மென்றதற்கு செவ்வாய் 10-ஆம் ஆதிபத்தியம் பெற்றதாலும் புதனுக்கு 5-ஆம் ஆதிபத்தியம் வந்ததாலும் ஏற்பட்ட தர்ம கர்ம யோகமென்பதாம். 67

தருகுருவு மேகொல்லான் சந்திரனுஞ் சேயும்
வெருவி யிடக்கொல்வர் மிக்காய்-வருவிபரங்
கண்டு பிலனாய்க் கருத்திலறிந் தேயுரையும்
கண்டுமொழி நல்லாய் கசிந்து.

(இ-ள்) மேன்மையைப்பெற்ற குருவோ வென்னில் கும்ப லக்கினத்தவரைக் கொல்லமாட்டான். கலைகளையுடைய சந்திரனும், செந்தீவண்ணன் என்னும் செவ்வாயுமே அந்த ஜாதகனின் ஆயுளை விரயம் செய்யும்படியாய்க் கொல்வான். மற்றுமுள்ள விவரங்களை, தேன்போலு மினிய சொற்களையுடைய பெண்ணே! கும்பலக்கினத்து ஜாதகன், நவக்கிரக அடவியை தீர ஆலோசித்து அவரவர்கள் தாரதரங்களை நன்றாய் கலந்தாலோசித்து மேற்சொன்ன இருவரிலெவர் மாரகம் செய்வாரென்பதை தீரமாயறிந்து கூறுக எ-று.

(வி-ரை) கும்ப லக்கினத்தவரை குரு கொல்லான் என்றும், அங்காரகன் சந்திரன் இவ்விருவருமே கொல்லத் தகுந்தவர் என்றுங் கூறியுள்ளார்.

ஏனெனில் கும்பலக்கினத்தில் சந்திரன் சட்டமாதி யென்னும் ஆறும்வீட்டோனும், சேயாகிய அங்காரகன் திருதியை தர்ம கர்மாதியானமையாலும் இவ்விருவரையும் மாரகாதிபதிகளெனக் கூறியுள்ளார்.

மற்றும் பல நூலாராய்ச்சியில் காணுமிடத்து கும்பலக்கினத்துக்கு சூரியன் ஒரு மாரகாதி யென்றுங் கூறவேண்டியதாகிறது. ஆனால் கும்பலக்கினத்தவரை சூரியன் கொல்லான் என்பதேயாம். 68

(மீனலக்கின விஷயம்)

மீன விலக்கினந்தான் மேலாய்ப் பிறந்தவர்க்குச்
சூனசனி புந்திபுகர் சூரியன்பொன்-னானமுடன்
பாவியாஞ் சேய்மதியும் பண்புடைய நல்லவர்கள்
கோவுகுரு செவ்வாயுங் கூடில்.

(இ-ள்) மேன்மையையுடைய மீனமென்னும் இராசியில் பிறந்தவர்களுக்கு முடவனாகிய சனியும், புந்தியாகிய புதனும், புகராகிய சுக்கிரனும், இரவியாகிய சூரியனும், பொன் என்னும் குருவும் கொடிதாகிய துன்பத்தைத் தரத்தக்க பாவிகளாவார்கள். சேய் என்னும் அங்காரகனும்; மதியாகிய சந்திரனும் நன்மையைத் தரத்தக்க சுபர்களாவார்கள். தேவகுரு வென்னும் பிரகஸ்பதியும் செவ்வாய் என்னு மிவ்விருவரும்கூடி ஓர் ராசியிலிருக்கில் எ-று.

(வி-ரை) 'கோவுகுரு செவ்வாயுங்கூடி' என்ற செய்யுளின் மிகுதியை பின்வரும் செய்யுளாலறிக. மேற்சொன்ன செய்யுளில் சேய் என்னும் அங்காரகனையும், மதியாகிய சந்திரனையும், யோகத்தை தருபவர்கள் என்றனர்.

ஏனெனில் ஜென்மலக்கினம் மீனமாகில் சந்திரன் பிரபுஸ்தானமென்னும் 5-ஆம் வீட்டுக்காதிபதியும், செவ்வாய் தனபாக்கியஸ்தானமென்னும் 2-9-க்கு முடையவர்களாதலாலும், இந்த மூன்று க்ஷேத்திரங்களும் முக்கிய ஸ்தானமாகலின், இவ்விருவரையும் யோககாரகர்கள் என்று கூறியதும் ஒப்பிடத் தக்கதேயாகும்.

மற்றும் பாவர்களெனக் கூறப்பெற்ற சனி-புதன்-சுக்கிரன்-குரு என்னு மிவர்களின் விஷயங்களைப் பின்வரும் செய்யுளாலறியலாம். 69

கூடி விராசரிக்க யோகமுண்டாங் கொற்றமதை
நாடுசெவ்வாய் கொல்லா னலிசனியோ-டுடுபுகர்
பானுபுதன் கொல்வார்கள் பைம்பாகி னேடைளவுந்
தேனுமொழி மாதே தெரி.



(இ-ள்) (முன்சொன்ன செய்யுளில் கூறியபடி) பொன்னான குருவும் செவ்வாயும் சேர்ந்து ஓர் ராசியிலிருக்கில் அந்த ஜாதகனுக்கு பிரமாதமான ராஜயோக முண்டாகுமென்றும், அக்கினியையொத்த நிறத்தையுடைய செவ்வாய் மேற்சொன்ன மீனலக்கினத்தில் பிறந்தவர்களைக் கொல்லான். கொல்லத் தகுந்தவர்கள் எவர்கள் கொல்வார்களெனில் பெலயீனத்தையுடைய சனியும், பிரகாசத்தையுடைய புகராகிய சுக்கிரனும், பானுவாகிய சூரியனும், புந்தியாகிய புதனுமே கொல்லத் தகுந்தவர்கள். மேற்சொன்ன நால்வரும் விடார்கள் என்பதை தேன்போலும் இனிய மொழியையுடைய பெண்ணே! இதனைத் தெரிந்துகொள்வாயாக எ-று.

(வி-ரை) செவ்வாயும் குருவுங்கூடில் யோகமுண்டாகுமென்றதற்கு இவ்விருவரும் தர்ம கர்மாதியானதால் கூறப்பட்டதாகும்.

மற்றும் கொல்லுவோர்களைக் கூறுமிடத்து 11-12-க்குடைய சனியும், 3-8-க்குடைய சுக்கிரனையும், 6-ஆம் பாவாதியான சூரியனையும், 4-7-க்குடையவனாகிய புதனையுங் குறிப்பிட்டுள்ளார். இவர்களில் ஜெனன இராசி சக்கிரத்தின் பாவப்படி மேற்சொன்ன நால்வரில் மாரகம் செய்ய பலம் பெற்றவர்களெவர்களென்று நன்கு ஆராய்ந்து மாரகம் செய்வோரைக் கூறவேண்டும்.

இவ்வாறு பன்னிரண்டு ராசிகளுக்கும் யோகர்-மாரகர்-சுபன்-அசுபன் என்னு மிவர்களை வரிசையாய் கூறினபடியாலும் முன்கூறிய 32-ஆம் பக்கத்தில் காட்டிய நால்வகை குணத்தவரையும் நன்காராய்ந்து கூறவேண்டும். 70

(ஆயுள் நிர்ணயம்)

சொல்லிலக்கி னாதிபனுந் தோன்றுமட்ட மாதிபனும்
செல்லுசர ராசியுறிற் றீர்க்காயுள்-வெல்லுஞ்
சரந்திரங்கண் மத்திபமாஞ் சாருஞ் சரமும்
வருமுபய மும்மற்ப மாண்பு.

(இ-ள்) உலகிற் பிறந்த மானிடர்களின் ஆயுள் நிர்ணயங் களைக் கூறவேண்டுவதெனில், ஜென்மலக்கினதிபதியும், சந் திரலக்கினதிபதியும் சரராசிகளி லிருக்கில், அந்த ஜாதகனுக்கு தீர்க்காயுளென்றே கூறவேண்டும். மகாபலம்பொருந்திய சரம் திரம் என்னுமிராசிகளில் மேற்சொன்ன ஜென்மலக்கினதிபதி யும், சந்திரலக்கினதிபதியு மிருக்கில், அந்த ஜாதகனுக்கு மத் திப வயதென்றே கூறவேண்டும். மேற்சொன்ன ஜென்மலக்கி னதியும் சந்திரலக்கினதியும் சரம் உபயம் என்னு மிராசிகளி லிருக்கில் அந்த ஜாதகனுக்கு அற்ப வயதென்றுங் கூறுவா யாக எ-று.

(வி-ரை) ‘சரம்’ என்பது மேடம்-கடகம்-துலாம்-மகரம். ‘ஸ்திரம்’ என்பது ரிடபம்-சிங்கம்-விருச்சிகம்-கும்பம். ‘உபயம்’ என்பது மிதுனம்-கன்னி-தனுசு-மீனம் என்பனவாம்.

இச்செய்யுளில் லக்கினதிபதியும், அட்டமாதிபதியும் சரராசியிலிருக்கில் தீர்க்காயுளென்றும், சரம் ஸ்திரம் என்னு மிவ்விரண்டு ராசிகளினு மிரண்டு கிரகங்களிலிருக்கில் மத்திப வயதென்றும், சரம் உபயமென்னு மிரண்டு ராசிகளில் மேற் சொன்ன இருகோட்களும்நிற்கில் அற்பவயதென்றும் கூறினர்.

இவை பொதுவாய் கூறியதாகும். தீர்க்கவயதென்பது 120, மத்திம வயதென்பது-60, அற்பவயதென்பதை 30- எனவுங்கொள்க. 71

மாண்பிலக்கி னதிபதி மன்னுதிர ராசியுறி
னாணெட்டி னதை னுபயமுறிற்-காண்வயது
தீர்க்கந் திரஞ்சரங்கள் சேரிலது மத்திபமா
மார்க்குந் திரங்களற்ப மாம்.

(இ-ள்) எதாமொரு லக்கினத்திற்கும், ஜென்மலக்கினதி யென்னும் ஜென்மலக்கினத்தோன் மகிமைபொருந்திய திராசி யிலும், ஜென்மலக்கினத்திற்கு ஆயுள் ஸ்தானதிபதி யென்னும் எட்டாம் வீட்டோன் உபயராசியிலு மிருப்பார்களேயானல், அந்த ஜாதகனுக்கு தீர்க்கவயதென்றுங் கூறுக. மேற்சொன்ன



1-8-க்குடையவர்களில் லக்கினதிபதி ஸ்திரராசியிலும் 8-ஆம் அதிபதி சரராசியிலும் நிற்க அந்த ஜாதகனுக்கு மத்திபவய தென்று கூறவேண்டும். மேற்சொன்ன 1-8-க்குடையவர்கள் ஸ்திரராசியிலேயே நிற்க அந்த ஜாதகனுக்கு அற்பவயதென் றுங் கூறுவாயாக எ-று.

(வி-ரை) 1-8-க்குடையவர்கள் 1-ஆம் வீட்டோன் ஸ்திர ராசியிலும், 8-ஆம் வீட்டோன் உபயராசியிலு மிருக்கில் தீர்க்க வயதென்றுங் கூறினர். மற்றுமோர் நூலாசிரியர்,

“சரமதனிற் சரன்தீர்க்கந் திரந்தான் மத்திபமாம்
தயங்கியதோ ருபயங்க டானற்ப மாகும்
திரமதனிற் றிரமற்பஞ் சரந்தான் மத்திபமாம்
திரத்தி லுபயம்பெரிலுந் தீர்க்கவய தாகும்”; என்றும்,

“வருமுபயந் தனிலுபயம் மத்திமமே யாகும்
மற்றுமதிற் சரமாகில் வயதற்ப மாமே
பெருமையுட னுபயத்திற் றிரம்தீர்க்க வயதே
பெற்றிடில் பூரணவயது பெற்றிடுவர் தாமே”

என்ற செய்யுளாலுங் காணலாம். 72

அற்ப மிலாதிலக்க னதிபதி யாமுபயம்
விற்பனமெட் டோன்றிரங்கள் வீற்றிருக்கி-லற்புதஞ்சேர்
மெத்த வயதுபய மேலுபய மற்றையற்ப
மொத்துபய முஞ்சரமு மோது.

(இ-ள்) மேன்மையை யுடையதாகிய ஜென்மலக்கினதி பதி உபயராசியிலும், ஆயுள் ஸ்தானதிபனென்னும் எட்டாம் வீட்டோன் ஸ்திரராசியிலும் இருப்பார்களே யாமானல், அந்த ஜாதகனுக்கு எவரும் புகழும்படியான தீர்க்காயுள் உண்டாகும் என்றும், மேற்சொன்ன 1-8-ஆம் வீட்டுக்குடை யவர்கள் இருவரும் உபயராசியிலேயே கூடியிருக்கில் அந்த ஜாதகனுக்கு மத்திப வயதென்றும், மேற்சொன்ன இருவரில்

லக்கினாதிபதி உபயராசியிலும், 8-ஆம் வீட்டோன் சரராசியிலுமிருக்கில் அந்த ஜாதகனுக்கு அற்ப வயதென்றுங் கூறுவாயாக எ-று.

(வி-ரை) இவ்வாறு சரம்-திரம்-உபய மென்னும் மூவகை இராசிபலத்தைக் கொண்டு பூரணவயது, அற்பவயது, மத்திப வயது என்பதை யறிந்துகொண்டு அக்காலங்களில் எவர்கள் திசை சம்பவிக்கிறதென்றும், அந்த திசாநாதர் மாரகத்தைக் கொடுக்கக்கூடியவரா என்றுங் கண்டறிந்து, ஆயுள் நிர்ணயங் கூறவேண்டுவது சாஸ்திர சம்மதியாகும். 73

(பொது)

ஓதுமிது வல்லா லுதய விலக்கினமு
மீதோரா லக்கினமு மேன்மையுள-சீதமதி
செல்லு மிலக்கினமுந் தேர்ந்தே வயதுகளை
மெல்லவே நிச்சயித்து விள்.

(இ-ள்) இதுவரையில் ஒவ்வொருவர் வயதுகளையுங்கூறி வந்ததல்லாது, ஒவ்வொருவரும் ஜெனித்த ஜென்மலக்கின விஷயத்தையும், மேன்மையையுடைய குளிர்ச்சிபொருந்திய சந்திரலக்கின விஷயத்தையும், ஓராலக்கினாதிபதியின் தாரதம்மியத்தையும் நன்றாய் கண்டாராய்ந்து, அவரவர்களின் ஆயுள் விஷயத்தை நிச்சயம் செய்து கூறுவாயாக எ-று.

(வி-ரை) இதுவரையில் 71-முதல் 73-வரையில் சொல்லி வந்த 3-செய்யுளாலும் பொதுவாய் உத்தம வயது, மத்திப வயது, அற்பவய தென்னு மிவற்றைக்கூறி வந்ததாலும், அதனை தெளிவாய் தெரிந்துகொள்ள, ஜென்மலக்கினாதிபதி யிருக்குந் தாரதரத்தாலும், சந்திரலக்கினாதிபதி யிருக்கும் வண்மையாலும் ஓரா லக்கினாதிபதி யிருக்கும் பலத்தாலுமே அதனை நிச்சயிக்க வேண்டுமென்றுங் கருத்தையொட்டியே இச்செய்யுளில் கூறியிருப்பதாய் தெரிகிறது.



மற்றும் பல நூலாராய்ச்சியிலும்,

“விதியற்று போனபேர்க்கு மதியதைப் பார்த்துச்சொல்லு
மதியற்று போனபேர்க்குச் சனியதைப் பார்த்துச்சொல்லு
சனிமதி,யுதயந்தப்பாதகப்படும் மரணகாலம்”

என்று கூறியதனாலு மறியலாம். 74

(குளிக னியல்பு)

ஒருகுளிகன் மேவு மிராசிதனக் கோசை
தருதிரிகோ ணத்திற் சனியன்-வருங்காலம்
வல்லபக லிற்பிறந்த பேர்கண் மடிந்திடுவர்
தொல்லையுல கோர்தமக்குச் சொல்.

(இ-ள்) எந்த லக்கினத்தில் பிறந்த ஜாதகர்களானாலும் அந்த ஜாதகப்படி குளிகன் எந்த ராசியி லிருந்தானோ அந்த ராசிக்கு திரிகோணமென்று கூறும், 5-9 என்னுமிடங்களில் சனி கோசாரப்படிவந்து சேர்வார்களேயானால், அந்த ஜாதகன் பகலில் பிறந்தவனாக இருக்கில், அந்த ஜாதகன் தன் விதியை இழந்துபோவானென்று இவ்வுலகிற் பிறந்த மக்களுக்குத் தெளிவுபெறக் கூறுவாயாக எ-று.

(வி-ரை) ஆயுள் நிர்ணயம் செய்ய இவை முக்கியமான வழியாகும். எப்படியெனில், பகலில் பிறந்த ஜாதகர்களுக்கு குளிகனிருந்த ராசிக்கு கோசாரப்படி சனி 5-9-ல் வருங்காலம் மரணமுண்டாகும் என்று கூறியுள்ளார்.

சிலர் குளிகனின் பார்வையாவது சேர்க்கையாவது கோசாரப்படி சந்திரனுக்கு வருங்காலமே அந்த ஜாதகனுக்கு மரணம் நேரும் என்றும் கூறியுள்ளார். இதனை பலநூலாசிரியர்களும் சம்மதித்திருக்கின்றனர். குளிகனுக்கு சனிமகன் என்றும் ஓர் பெயர் உண்டு. 75

(இதுவும் குளிகன் விஷயம்)

ஏறுங் குளிக னிருந்தவிரா சிக்கேழு
சேருமிரா சிக்குத் திரிகோணங்-கோரச்
சனிவருங்கா லத்திரவிற் றான்பிறந்த யோக
னனிமரண மாவார் நவில்.

(இ-ள்) முன்சொன்ன குளிகனிருந்த ராசிக்கு ஏழாமிடமான சப்தமராசிக்குக் கோணமென்னும் 5-9-ஆம் யிடங்களில் சனி வருங்காலங்களில் இரவிற் பிறந்த ஜாதகர்களுக்கு கட்டாயமாய் ஆயுள் விரயமான மாரகத்தைச் செய்வானென்று அழகு பொருந்திய பெண்ணே! இதனைக் கண்டிப்பாய் கூறுவாயாக.

(வி-ரை) முன்சொன்ன செய்யுளில் குளிகனுக்கு 5-9-ஆம் ராசியில் சனிவருங்காலம் ஆயுள் விரயம் செய்யுமென்று கூறினர். இங்கு குளிகனிருந்த ராசிக்கு 7-ஆம் வீட்டிற்கு கோணமான 5-9-ல் கோசாரப்படி சனி வருங்காலம் மரணமுண்டாக்கு மென்றுங் கூறியுள்ளார். மற்றுமொரு நூலாசிரியர்,

"ஏழெட்டுக்குடையோர் மாந்தியிராகுவைச் சனியைக்கூடி
யாமுற்றவா றினிற்கி லவன்றிசை யபகாரத்தில்
கோளுற்றசோரராலே கூறுமாயுதத்தாற் கண்டம்
வாளொத்தகண்ணினாளே மலரயன் வகுத்தவாறே"

என்ற செய்யுளாலுங்காண்க. 76

(மரணமடையும் மாதங்களை விளக்குவார்)

பன்னுமட்ட மாதி பதியிருந்த ராசிக்கு
மன்னுந் திரிகோண மாதமாந்-துன்னுமந்த
மாதத்தி லேமரண மாந்த ருடவயதைச்
சோதித்துச் சொல்வாம் துணிந்து.

(இ - ள்) ஜென்மலக்கினாதிபதிக்கு எட்டாம் வீட்டிற்குடையவன் எந்த ராசியிலிருந்தானோ, அந்த ராசிக்குத் திரி



கோணங்களென்னும் 5-9 என்னுமிந்த மாதங்களில், அந்த ஜாதகனுக்கு ஆயுள் விரயமென்னும் மரணமுண்டாகுமென்று சாஸ்திரங்களை யறிந்த மேதாவிகள் நிச்சயமாய்க் கூறுவர்.

(வி-ரை) அட்டமத்தோன் எந்தராசியி லிருந்தாலும், அந்த ராசிக்குத் திரிகோணமான 5-9-ஆம் ராசியே மாதமென்றும், அந்த மாதங்களிலேயே மரணமடைவா னென்றும் இச்செய்யுளின் கருத்தாகும்.

முதலில் கிரக ஆராய்ச்சியில் ஆயுள் எவ்வளவு என்றறிந்துகொண்டு அக்காலம் 75-76-ஆம் செய்யுளின்படி அக்காலம் குளிக நிர்ணயப்படி கெண்டாந்தகால முண்டாகின்றனவா வென்றும், அப்படியாயின் எந்த காலத்திலுண்டாகின்றன, எத்தனை வருஷமென்பதை யறிந்துகொண்டு, மேற்சொன்ன செய்யுளின்படி மாதங்களையறிந்து சொல்ல வேண்டும். 77

(மரணகால நக்ஷத்திர மறிவது)

இரவி யிருக்கு மிராசிக்கு நேசன்
மருவுந் திரிகோண மன்னி-வருகின்ற
நட்சத் திரத்தின் மரணமந்த நாதனுக்குச்
சொட்சேத் திரமறிந்து சொல்.

(இ-ள்) ஜென்மலக்கினம் எந்தராசியாயிருக்கினும் பூரண கலைகளையுடைய சூரியன் எந்த ராசியிலிருந்தானோ அந்த ராசிக்கு சொந்தமான கிரகம் எவையோ அந்த கிரகம் மேற்சொன்ன சூரியனுக்குத் திரிகோணமான 5-9 என்னுமிடங்களில், எந்த நக்ஷத்திரத்தில் பிரவேசிக்கின்றனவோ அந்த நக்ஷத்திரம் வரும் தேதியில் அந்த ஜாதகனுக்கு மரணமுண்டாகுமாகையால் இதனை கவனித்து தெளிவாய் கூறுவாயாக.

(வி-ரை) முன்சொன்ன செய்யுளின்படி மரணமடையும் மாதத்தைத் தெரிந்துகொண்டு பின்பு எந்த நக்ஷத்திரத்தில் உயிர்விடுவா னென்பதை, மேற்சொன்ன செய்யுளின்படி இரவி

யான சூரியனிருந்த வீட்டுக்குடைய கிரகமெவையோ அந்த கிரகம் கோசாரரீதியாய், ஷை சூரியனுக்கு 5-அல்லது 9-ஆம் ராசியில் எந்த நக்ஷத்திரத்தில் பிரவேசிக்கிறானோ அந்த காலமான நக்ஷத்திரத்திலேயே உயிர் விடுவானென்று கூறியுள்ளார்.

இதனை சோதிடர்கள் கவனித்து மேற்சொன்னபடி சூரியனிருந்த வீட்டோன் சூரியனுக்கு 5-9-ல் பிரவேசிக்கும் நக்ஷத்திரத்தை நக்ஷத்திரஸ்புட வாயிலாயறிந்து அக்காலத்தையே மரணகாலமெனக் கணக்கிட்டுக் கூறுக. 78

(மரணகால ராசியைக் கூறுகின்றன்)

இலக்கினத்தோ னங்கிசங்க ளேறுமிரா சிக்குப்
பிலத்ததிரி கோணம் பிழையா-விலக்கினமா
மிந்த விலக்கினத்தி லேமரண மென்றறிவாய்
கந்த மலர்க்குழலீர் கண்டு.

(இ-ள்) ஜெனனலக்கினாதி யென்னும் 1-ஆம் வீட்டுக்குடையவன் எவர்களங்கிசை பெற்றானோ அந்த ராசிநாதனிருந்த க்ஷேத்திரத்திற்கு 5-9 என்னும் லக்கினமே அந்த ஜாதகனை கொல்லத்தகுந்த ராசியாதலால் கந்தமென்னும் வாசனை திரவியத்தை ஜடாபாரத்தணிந்த ஏ நங்காய்! இதனை நன்றாராய்ந்து மரணகால லக்கினத்தைக் கூறுவாய் எ-று.

(வி - ரை) இச்செய்யுளில் மரணமுண்டாகும் லக்கினமென்னும் நேரத்தைக் கூறியுள்ளார். எப்படி யெனில், ஜென்மலக்கினாதிபதி அம்சா சக்கரப்படி எவர்க ளங்கிசையிலிருந்தானோ அந்தராசியாதிபதியே அங்கிசாதிபதியானதால், முன்னம் கூறியபடி மாதத்தையும், நக்ஷத்திரத்தால் மரணமடையும் தேதியைக்கொண்டும், இராசி சக்கரப்படி சூரியனிருந்த அங்கிசாதிபதிக்கு தினசரிப்படி 5-9-ஆம் லக்கினங்களைவையென்றும், அந்தலக்கினம் எத்தனை நாழிகைக்கு உண்டாகிறதென்றும் தெரிந்த அந்தநாழிகை நேரத்திலே மரணமடைவானென்று கூறவேண்டியது அவசியம்.



சரம் திரம் உபய மென்பனவற்றால் ஆயுள் மொத்தத்தையும், குளிகா நிர்ணயப்படி வருஷத்தையும், 77-ஆம் செய்யுள்படி அட்டமாதியிருக்குந் தன்மையால் மாதத்தையும், 78-ஆம் செய்யுளில் சூரியனைக்கொண்டு சொல்லியபடி நக்ஷத்திரத்தையும் தேதியையும், 79-ஆம் செய்யுளின்படி லக்கினமென்னும் நேரத்தையுங் கணக்கிட்டுச்சொல்ல வேண்டுவதாம். 79

(சோதிடவல்லவர்க ளெவரெனல்)

வயதுநிலை மாரகங்கண் டாய்வருட மாதஞ்
செயநா ளிலக்கினங்க ணேர்ந்தே-நயமாய்
நிரியாண காலங்க ணிச்சயமாய்ச் சொல்லும்
பெரியோர் பெரியரெனப் பேசு.

(இ-ள்) சோதிடங்களில் மகாவல்லவர்களென்றும் பெரியோரென்றும் எல்லோரும் புகழ்ச்சி செய்யும்படி யெவரைக் கூறவேண்டுவதெனில், முன்சொல்லிய செய்யுளின்படி, வயதினளவையும் மாரகம் என்னும் உயிர்விடத்தக்க வருடம் மாதம் நக்ஷத்திரமாகிய தேதி லக்கினமென்னும் நேரம் இவற்றை நன்றாராய்ந்து நிச்சயமாய் சொல்லுபவர்களையே, மேற்சொன்னபடி, பெரியோர் பெரியோர் என்று கொண்டாடவேண்டும் எ-று. 80

(புத்திரதோஷம்)

அஞ்சொன்பா னென்றி லரவு சனிகுளிகன்
மிஞ்சவே நோக்க மிகவிருக்க-வஞ்சியரே
சற்பத்தைக் கொன்றதினாற் சந்ததிக்கே டாகுமென்று
விற்பத்தி சொன்னோம் விரைந்து.

(இ-ள்) ஜென்மலக்கினத்திற்கு ஐந்தாமிராசியிலாவது ஒன்பதாமிராசியிலாவது, ஜென்மலக்கினத்திலாவது, அரவு என்னும் இராகு கேதுக்களி லொருவராவது, இரவியின் மைந்தனான சனியாவது, சனியின் மகனாகிய குளிகனாவது, நிற்பார்களே யாமானாலும் அல்லது மேற்சொன்ன 1-5-9-ஆம்

யிடங்களை நோக்குவார்களானாலும், சாஸ்திரங்களின் ஆராய்ச்சியால் காணுமிடத்து அந்த ஜாதகனுக்கு சர்ப்பத்தைகொன்ற தோஷத்தால் புத்திரதோஷ முண்டாகுமென்று அழகு பொருந்திய பெண்பாவாய்! கட்டாயமாய் கூறுவாயாக எ-று.

(வி-ரை) 1-5-9 என்னுமிடங்களில் சனி-குளிகன்-இராகு-கேது இவர்கள் நின்றாலும் பார்த்தாலும் புத்திரதோஷமென்றும் அவை சர்ப்பத்தைக்கொன்ற தோஷத்தாலுண்டாவதென்றுங் கூறியுள்ளார். இதனைப் பற்பல சாஸ்திரவாயிலாகவுங் காணலாம். சிலர் 5-ல் ஷ்டி கிரகம் நின்றால் தோஷமென்றும் சிலர் 5-9 இவ்விரண்டிலும் ஷ்டி கிரகங்கள் நிற்கின்றதோஷ முண்டென்றுங் கூறியிருப்பதையுங் காணலாம். மற்றுமொருவர்,

"பாலர்பிறந்திரு மைந்திலே பாரொருகேது பரிந்துரில்
பாலர்பிறந்திரு மைந்திலே பாழ்கருநாகமமைந்துரில்"

என்றும் கூறியதை யறியலாம். இவ்வாறான புத்திரர்களை யறிவதற்கு, 1-வது புத்திரதானுதிபதியையும், 2-வது புத்திரகாரகனையும், 3-வது புத்திரதானத்தையும் பார்த்தோர் சேர்ந்தோர் என்னு மிவ்வியல்களையுங்கண்டு கூறவேண்டியதாகும். இச்செய்யுளில், புத்திரத்தானமான 5-ஆம் ராசியுடன் 9-ஆம் ராசியையும் சேர்த்ததற்கு காரணமென்னவெனில் 5-க்கு 5-ஆம் இடமானது 9-ஆம் வீடானது பற்றியேயாம். மற்றும் இவ்விஷயங்களை விரித்தெழுத இங்கு இடங்கொடாததாகையால், என்னால் உரை எழுதப்பெற்ற சோதிடக்களஞ்சியம் பார்க்கவும். 81

## கிரகங்களின் நட்பாக்ஷி யுச்சம் பகை நீசம்

### (சூரியன்)

ஆதித்தற் காட்சி யரிதனுசு மீனுறவு
கோதற்ற வாடுச்சங் கோனீசம்-பேதித்துச்
சொல்லாத ராசியோ ரேழும் பகைசொல்வ
ரல்லார் குழலா யறி.



(இ-ள்) ஆதித்தனாகிய சூரியனுக்கு ஆக்ஷியென்னும் சுயக்ஷேத்ரம் சிங்கமென்றும், தனுசு மீனம் என்னுமிவ்விரண்டு ராசிகளும் உறவு க்ஷேத்திரங்களென்னும் நட்பு க்ஷேத்திரங்களாகும். குற்றமில்லாத ஆடுயென்னும் மேடராசியானது உச்சராசி யென்னும் $1\frac{1}{4}$-பலங்கொண்ட க்ஷேத்திரமாகும். கோல் என்னும் துலாராசியானது, $\frac{1}{8}$-பலம் என்னும் நீச்சராசியாகும். இச்செய்யுளில் சொல்லாத ராசிகளான ரிடபம்-மிதுனம் - கடகம் - கன்னி-விருச்சிகம்-மகரம்-கும்பமென்னும் ஏழு ராசிகளும் பகைக்ஷேத்திரங்க ளென்றும், அழகு பொருந்திய பெண்ணே கூறுவாயாக எ-று.

(வி - ரை) இச் செய்யுளில் மேற்சொன்ன ரிடபம்-மிதுனம்-கடகம்-கன்னி-விருச்சிகம் - மகரம் - கும்பம் என்னு மிராசிகளை பகையென்றனர். மற்றும் பல நூலாராய்ச்சியாய்க் காணுமிடத்து; மிதுனராசியை சமம் என்றும், விருச்சிக ராசியை நட்பு என்றும், கன்னியா விராசியை சமம் என்று கூறியுள்ளார். சாதக அலங்காரநூலுடையார் கும்பராசிக்கு சூரியன் மித்ரு என்று கூறியிருப்பதையுங் காண்க. 82

### (சந்திரன்)

சந்திரற்கு நண்டாட்சி தண்டுவில்மீன் பெண்டுறவு
வந்திடப முச்சமென மன்னுமே-முந்தவே
நீசந்தே ளாகும் நிலையைந்து ராசிகளும்
பேசும் பகையெனவே பேண்.

(இ-ள்) யாவரும் போற்றத்தகுந்த சந்திரனுக்கு ஆக்ஷியாகிய முழுபலமுடைய க்ஷேத்திரம் நண்டு என்னும் கடகராசியாம். தண்டு என்னும் மிதுனமும் வில்லாகிய தனுசும், மீன் என்னும் மீனராசியும், பெண் என்னும் கன்னியா ராசியும், உறவு என்னும் $\frac{1}{2}$-பலம் கொண்ட நட்பு க்ஷேத்திரமாகும். இடபமென்னு மிராசியே உச்சஸ்தலம் என்னும் $1\frac{1}{4}$-பலங்கொண்ட க்ஷேத்திரமாகும். தேள் என்னும் விருச்சிகமோவெனில் $\frac{1}{4}$-பலங்கொண்ட நீச்சராசியாகும். மேற்சொல்லியவை போக மற்ற ஐந்து ராசிகளும் (அவையாவன) மேடம்-சிங்கம்-

துலாம்-மகரம்-கும்பமென்னு மிராசிகள் பகை க்ஷேத்திர மாகிய $\frac{1}{8}$-பலமுடைய க்ஷேத்திரமாகும் எ-று.

(வி-ரை) சிலர் சிங்க ராசியையும் நட்பு க்ஷேத்திர மென்று கூறுவதுமுண்டு. சந்திரனுக்கு கடகம் - ஆக்ஷி - ரிடபம் - உச்சம் - மிதுனம் - தனுசு - மீனம் - கன்னி இவை நட்பு; விருச்சிகம்-நீசம் இவை போக மற்றவை பகைக்ஷேத்திர மென்பதாம். 83

(செவ்வாய்)

சேய்க்காடு தேளாட்சி தண்டெருது கோலரிவை
வாய்த்தநட் புச்சமே மானுகும்-தேய்த்துநகர்
நண்டதுவே நீசம் நலமமையா தாகிவரும்
பண்டுரையா நான்கும் பகை.

(இ-ள்) சேய் என்னும் அங்காரகனுக்கு ஆடு என்னும் மேஷமும், தேள் என்னும் விருச்சிகமும், ஆக்ஷி யென்னும் முழுபலங்கொண்ட க்ஷேத்திரமாகும். தண்டு என்னும் மிது னமும், எருது என்னும் ரிடபமும், கோல் என்னும் துலா ராசியும், அரிவை யென்னும் கன்னியும், $\frac{1}{2}$-பலங்கொண்ட நட்பு க்ஷேத்திரங்களாகும். தன் உடலைத் தேய்த்து ஊர்ந்து செல்லத் தகுந்த நண்டு என்னும் கடகராசியோ நீச்சம் என்னும் $\frac{1}{4}$-பலம் கொண்ட க்ஷேத்திரமாகும். மான் என்னும் மகரராசியோ $1\frac{1}{4}$-பலமுடைய உச்ச க்ஷேத்திரமாகும். மற்றுமுள்ள ரிடபம்-தனுசு-கும்பம்-சிங்கம் இந்நான்கு ராசியும் பகையென்னும் $\frac{1}{8}$-பலத்தைத் தரும் க்ஷேத்திரமாம் எ-று.

(வி-ரை) மேடம் - விருச்சிகம் - ஆக்ஷி. மகரம். உச்சம். கடகம் நீச்சம். மிதுனம்-ரிடபம்-துலாம்-கன்னி என்னு மிந் நான்கும் நட்பு. இவைதவிர மற்ற நான்கு க்ஷேத்திரங்களும் பகை க்ஷேத்திரங்கள் என்பதாம். 84

(புதன்)

புதன்மங்கை தண்டாட்சி பொற்கொடியா ளுச்சம்
நிதம்பகையாஞ் சிங்கம்மீ னீசம்-இதம்பெறவே



சாற்றரிய ராசியிரு நான்கையு மேதாலத்
தேற்றமுயர் நட்பாகத் தேர்.

(இ-ள்) யாவரும் புகழும் புதனுக்கு, மங்கை யென்னும் கன்னியும், தண்டு என்னும் மிதுனமும், ஆக்ஷியென்னும் சுய க்ஷேத்திரமாகும். பொற்கொடி என்னும் கன்னியா ராசியோ உச்சம் என்னும் $1\frac{1}{4}$-பலத்தைத்தரும் க்ஷேத்திரமாகும். சிங்கம் என்னும் ராசியானது பகையென்னும் $\frac{1}{8}$-பலனைத்தரும் க்ஷேத்திரமாகும். மீனமோ உச்ச ராசியாகும். மற்றும் சொல்லு தற்கரிய ராசிகளாவன: மேடம்-ரிடபம்-கடகம் - துலாம்-விருச் சிகம்-தனுசு-மகரம்-கும்பம் என்னும் எட்டு ராசிகளும் $\frac{1}{2}$-பலத் தைத்தரும் நட்பு க்ஷேத்திரங்களென்றுங் கூறுவாயாக எ-று.

(வி-ரை) புதனுக்கு கன்னி-மிதுனம்-ஆக்ஷி, கன்னியா ராசியோ உச்சம், சிங்கம்-பகை, மீனம்-நீச்சம், இவை 4-ராசிகள் போக மற்ற எட்டு ராசிகளும் நட்பு க்ஷேத்திரங்கள் என்பது கருத்தாம். சிலர் புதனுக்கு சிங்கராசியும் நட்பு என்று கூறுவர். 85

(குரு)

பொன்மீனம் வில்லாக்ஷி போராடு தேட்பகையாந்
நன்னலவ னுச்சஞ் சுறுநீசம்-பொன்மலைபோற்
பாரமுலை மாதரசே பற்றியவோ ராறிடமுஞ்
சேரவுற வென்றிதனைச் செப்பு.

(இ-ள்) பொன் என்னும் குருவுக்கு முழுபலத்தைத்தரும் ஆக்ஷியென்னும் சுயக்ஷேத்ரம். தனுசு-மீனம் என்னு மிவ்விர ண்டும் சுயக்ஷேத்திரங்களாகும். சத்துருத்துவத்தையும் $\frac{1}{4}$-பலத் தையும் தரும் பகை க்ஷேத்திரமானது. விருச்சிகமாகும். தன் பலத்தை தரமுடியாமல் உறங்கிக் கிடக்கத்தக்க $\frac{1}{8}$-பலமென்னும் நீச்சராசியோ சுறு என்னும் மகரராசியாகும். $1\frac{1}{4}$-பலனைத் தரத் தக்க உச்ச ராசியோ கடகமென்பர். பருத்த ஸ்தனபாரங்களை யுடைய பெண்ணே! மேற்சொன்ன ராசிகள்போக மற்ற க்ஷேத்திரங்களி லெங்குசேரினும் அவையாவும் நட்பு என்னும் $\frac{1}{2}$-பலனைத்தரும் க்ஷேத்திரங்களென்றுங் கூறுவாயாக.

(வி-ரை) குருவுக்கு தனுசு-மீனம்-ஆக்ஷி, கடகம்-உச்சம், மகரம்-நீச்சம், விருச்சிகம்-பகை இந்த ராசிகளைத்தவிர மற்ற ராசிகளான மேடம்-ரிடபம்-மிதுனம்-சிங்கம்-கன்னி - துலாம்-தனுசு-கும்பம் என்னும் எட்டு ராசிகளும் நட்பு க்ஷேத்திரங்களாகும். 86

(சுக்கிரன்)

புகரேறு கோலாட்சி பொங்கலைமீ னுச்சம்
நிகரற்ற கன்னியதே நீசம்-பகராய்
குடந்தேள் சமன்பகையாங் கூறாத ராசி
துடந்தே தொகையுறவாய்ச் சொல்.

(இ-ள்) புகராகிய சுக்கிரனுக்கு எரு என்னும் ரிடபமும், கோல் என்னும் துலாராசியும், சுயக்ஷேத்திரமென்னும் முழு பலத்தைத்தரும் ஆக்ஷி வீடாகும். நீண்ட பிரகாசத்தை தரும் மீன் என்னும் மீனராசியே $1\frac{1}{4}$-பலனைத் தரத்தக்க உச்ச வீடாகும். தனக்கு $\frac{1}{4}$-பலனைத் தரத்தக்க நீச்சராசி யென்பதோ இணையிடப்படாத கன்னி என்னும் ராசியாகும். குடம் என்னும் கும்பராசியும், தேள் என்னும் விருட்சிகராசியும், சமனும் பகையுமான க்ஷேத்திரமென்றும் இச் செய்யுளில் சொல்லப்படாத ராசிகளை வரிசைக் கிரமமாய் உறவு என்னும் நட்பு க்ஷேத்திரங்களென்றுங் கூறுவாயாக எ-று.

(வி-ரை) சுக்கிரனுக்கு ரிடபம் - துலாம் - ஆக்ஷி, மீனம்-உச்சம், கன்னி-நீச்சம், கும்பம் - விருச்சிகம் - சமம் பகையென்றும், மற்றுமுள்ள மேடம் - மிதுனம் - கடகம்-சிங்கம்-தனுசு-சிங்கம் என்னும் இந்த ஆறு ராசிகளும் நட்பு க்ஷேத்திரங்களாகும். சிலர் சுக்கிரனுக்கு சிங்கராசியை பகை க்ஷேத்திரமென்றுங் கூறுவர். 87

(சனி)

மந்தனுக்குக்கும்பம் மகரமே ஆட்சியதாம்
சொந்தவுச்சங் கோலாகச் சொல்லலாம்-முந்துவிதி
யாடென்றே நீச மரியபகை நண்டரியாம்
நீடுமிரு மூன்றுறவாய் நேர்.



(இ-ள்) மைந்தன் என்னும் சனிக்கு 10-ஆம் ராசியான மகரமும் 11-ஆம் ராசியான கும்பமும், ஆக்ஷியென்னும் முழு பலனைத் தரத்தக்கதாகும். சுகமும் மகுத்துவமும் பொருந்திய ஒன்றேகால் பலனையுடைய உச்சக்ஷேத்திரமோ துலாம் என்றுங் கூறுவர். முன்னுளின் வினைப்பயனால் கால் பலத்தை ய'டையத்தக்க நீச்சமென்னு மிராசியோ, ஆடு என்னும் மேட ராசியேயாகும். பல சாஸ்திரத்தோராலும் பகையெனக் கூறும் ராசி எதுவெனில், நண்டு என்னும் கடகமும், அரி என்னும் சிங்கமுமாகும். மற்றுமுள்ள ராசிகள் ஆறினுக்கும், மேற்சொன்ன சனிக்கு பகைவீடென்றுங் கூறுவாயாக எ-று.

(வி-ரை) இச்செய்யுளில் சனிக்கு மகரம்-கும்பம் என்னும் இவ்விரண்டும் ஆக்ஷி, துலாம்-உச்சம், மேஷம்-நீச்சம், கடகம்-சிங்கம் என்னும் இரண்டுராசிகளும் பகையாகும். மற்ற ரிடபம் மிதுனம் - கன்னி - விருச்சிகம்-தனுசு-மீனம் என்னும் ஆறு ராசிகளும் ஷை சனிக்கு நட்புஸ்தானமென்றுங் கூறியுள்ளார்.

மற்றும் சில நூலுடையவர்கள் கடகராசியைச் சமம் என்று சிலரும், தனுசுராசியைச் சமம் என்று சிலரும்சிலர் மீன ராசியை சமமென்றும் கூறுவர். 88

(இராகு)

காரரவுக் காடேறு கற்கடகம் வல்லுறவாம்
சீருலவு மாட்சிபெண் தேளாகும்-ஆரணங்கே
நின்முலைபோற் கும்பமுச்சம் நீணிறைமான் மீன்பகையாந்
தன்னிடையே கேளரிநீ சம்.

(இ-ள்) காட்டிற் குடியிரானின்ற பாம்பு என்னும் இராகுவுக்கு உறவு என்னும் $\frac{1}{2}$-பலம் தரும் க்ஷேத்திரம் கடகராசியேயாகும். அவையாவன நட்பு என்பதாம். சிறப்புபொருந்திய ஆக்ஷியென்னும் சொந்தவீடானது பெண் என்னும் கன்னியா ராசியும், தேள் என்னும் விருச்சிகராசியுமாகும். ஏ பெண் பாவாய்! நினது தனபாரங்களைப் போன்ற கலசமென்னும்

கும்பராசியானது உச்சமெனக் கூறுவர், நீண்ட அழகுபொருந்திய மான் என்னும் மகரமும், மீன் என்னும் மீனராசியும் பகையாகும். அரியென்னும் சிங்கமானது நீச்சமென்றும் அழகுடையபெண்ணே கூறுவாயாக எ-று.

(வி-ரை) சிற்சில நூற்களில் இராகு கேதுக்களுக்கு ஆக்ஷிவீடில்லையென்றும், அவை சாயாகிரகமென்றுங் கூறியிருப்பதை வாசகர்கள் அறியலாம். இச்செய்யுளில் கன்னியும் விருச்சிகமும் ஆக்ஷியென்றும் கும்பமென்றும் இராசியே உச்சமென்றும், சிங்கமென்னு மிராசியே நீச்சமென்றுங் கூறியுள்ளார். சாதக அலங்காரத்திலும், ஆக்ஷியென்பதைக் குறிப்பிடவில்லை என்பதை யறியலாம். 89

(கேது)

செம்பாம்புக் காடுந் தெரிவை யுறவுச்சம்
அம்மிதுனந் தேளா மதிநீசம்-அம்பெருது
மன்னுதுலை மீனம் மகரஞ்சா லிந்நான்கும்
பன்னுட்சி யென்றே பகர்.

(இ-ள்) செம்பாம்பென்னும் கேதுவுக்கு காடு என்னும் இடபமும், தெரிவை என்னும் கன்னியும், முழுபலனைத் தரத்தக்க உறவென்றுங் கூறவேண்டும். புகழ்ச்சிபெற்ற தேள் என்னும்விருச்சிகமும்,மான் என்னும் மகரமும் $\frac{1}{8}$-பலனைத்தரத்தக்க நீச்சராசியென்றுங்கூறுவர். அம்பு என்னும் தனுசும் துலை என்னும் துலாராசியும். மீனராசியும் மகரமென்னும் இராசியும் சால் என்னும் கும்பராசியும் ஆக்ஷியென்றுங் கூறுவாயாக.

(வி-ரை) மேலே சொன்னபடியே இராகு கேதுக்கும் ஆக்ஷி உச்சம் நீச்சம் என்பனவற்றை விரிவாய்க் கூறியுள்ளார். அவையாவன.

கேதுவுக்கு மிதுனம்-விருச்சிகமென்னு மிவ்விரண்டு ராசியும் உச்சமெனவும், தனுசு-ரிஷபம் இவ்விரண்டும் நீச்சமென்றும், துலாம்-மீனம்-மகரம்-கும்பம் என்னு மிந்நான்கு ராசியும் எவரும் புகழத்தக்க ஆக்ஷி வீடெனவும் கூறுவர்.



இச்செய்யுளின் முக்கிய கருத்தென்னவெனில், இராகு கேதுக்களுக்கு ஆக்ஷிவீடு உண்டு எனவும், ஆக்ஷிவீடுள்ள போது நீச்சம் பகையுண்டெனவுங் கூறியுள்ளார். 90

(குளிகன்)

சீர்த்தகுளி கற்குநண்டு தேளுறவாஞ் சேல்விடையோ
டார்த்தவரி சால்பகைபின் ருகிடுமே-சேர்த்தபெரும்
வில்லோடா டுச்சம் மிதுனந் துலைநீசம்
நல்லாட்சி கன்னிமக ரம்.

(இ-ள்) சனி மகனென்னுங் குளிகனுக்கு $\frac{1}{2}$-பலனைத் தரத்தக்கயிட மேதுவெனில், நண்டு என்னும் கடகமும், தேள் என்னும் விருச்சிகமும்,உறவு என்னும் நட்பு க்ஷேத்திரமாகும். சேல் என்னும் மீனவிராசியும், விடையென்னும் இடபராசியும், சால் என்னும் கும்பவிராசியும் $\frac{1}{4}$-பலனைத் தரத்தக்க பகைக்ஷேத்திரமாகும். யாவர்களும் சிறப்புபெறப் புகழத்தக்க வில் என்னும் தனுசுராசியும், ஆடு என்னும் மேடராசியும், உச்சமென்னும் $1\frac{1}{4}$-பலனைத் தரத்தக்க க்ஷேத்திரமாகும் மிதுனமென்னும் மூன்றுமிராசியும் துலையென்னும் துலாமிராசியும் $\frac{1}{8}$-பலனைத் தரத்தக்க நீச்சக்ஷேத்திரமாகும். முழுபலனைத் தரத்தக்க கன்னியென்னும் ராசியும், மகரமென்னு மிராசியும், ஆக்ஷி யென்னும் முழுபலனைத் தரத்தக்க க்ஷேத்திரங்களாகும் எ-று.

(வி-ரை) குளிகனுக்கு ஆக்ஷியென்பது கன்னி மகரமும், நீச்சராசியென்பதும், மிதுனம்-துலாமென்னும் இராசியும், தனுசு-மேடம் இவ்விரண்டும் உச்சம் என்றும் ரிடபம்-கும்பம்-என்னும் இவை பகைராசியென்றும், கடகமும் விருச்சிகமும் உறவு என்றும் கருத்தாகிறது. 91

(ஆண் பெண்)

சரமுன் னரிவையாஞ் சாற்றுபின் னிரண்டாண்
திரமுனிரண் டாண்பின்பெண் செப்பில்-உரமுடனே
தோன்றுபய முன்பின்னுண் சொல்லில் நடுப்பெண்ணும்
மூன்றுகூ றுக முடி.

(இ-ள்) சரம் என்னும் இராசிகளிற் பிறந்தவர்கள் முதற்கூறும் பெண் ஆணும் பிற்கூறு இரண்டிலும் ஆண் பிரஜை ஜெனிக்குமெனவும், திரமென்னும் இராசியில் பிறக்கில் முன்கூறும் இரண்டிலும் ஆண் பிரஜையும், கடைக்கூறு பெண் என்றுங் கூறுவர். மகாபலத்தைப்பொருந்திய உபயராசியில் பிறந்தவர்களுக்கு முதற்கூறும் கடைக்கூறும் ஆண் என்றும், நடுக்கூறு பெண் என்னும் விதங்களை ஒவ்வொரு ராசிகளுக்கும் மும்மூன்று கூறுகளாகப் பங்கிட்டு ஆண் பெண் என்பனவற்றைத் தெளிந்து கூறவேண்டும் எ-று.

(வி-ரை) இச்செய்யுளில் ஆண் பெண் என்னும் இவற்றைப் பகிர்ந்து சொல்ல, சரம்-திரம்-உபயம் என்னும் மூன்றுவித ராசிகளால், ஒவ்வொரு ராசிக்கும் முதற்கூறு, நடுக்கூறு, கடைக்கூறு என்னும் விதங்களால் மேற்சொன்ன ஆண் பெண் என்னும் விதங்களைப் பிரித்துக் கூறவேண்டுமென்றுங் கூறியுள்ளார்.

| | முதற்கூறு | நடுக்கூறு | கடைக்கூறு |
|---|---|---|---|
| சரம் | மே-க-து-ம-பெண் | ஆண் | ஆண் |
| திரம் | ரி-சி-வி-கு-ஆண் | ஆண் | பெண் |
| உபயம் | மி-க-த-மீ-ஆண் | பெண் | ஆண் |

மற்றும் சிலர் மேடாதியாக ஒற்றை ராசிகளில் ஆண் என்றும் இரட்டைராசிகளில் பெண் என்றும் கூறுவதுடன்,

“பாரின்மந்தன் பரிந்தொற்றைராசியில்
சேரநிற்கி லாண்பிள்ளை ஜெனித்திடும்
சீருலாவிய செவ்வா யிரட்டையில்
பேரவாவொடு நிற்கிற் பெண்பிள்ளையே”

என்றுங் கூறுவதுண்டு. 92

(போதகன்-வேதகன்-பாசகன்-காரகனை யறிவது)

கூறு பலனைக் கொடுவென்பான் போதகனும்
வேறுபண்ணித் தட்டுவிப்பான் வேதகனும்-தேறுபலன்



கூட்டுவிப்பான் பாசகனும் கோல மகாதிசைக்கே
ஈட்டுபொருள் காரகனீ வான்.

(இ - ள்) சாஸ்திரவிதிகளாற் கூறியபடி அவரவர்கள் காரகப்படி நற்பலனைக் கொடுக்கும் கோட்கள் போதகன் என்பவராம். வேதகன் தன் காலங்களில் எல்லாவற்றையும் இடையூறு செய்வதுடன் கொடிய பலனையுந் தருபவனும். மதிப்பிடமுடியாத விசேஷ அசுபபலனைக் கொடுக்கத்தக்கவன் பாசகன் என்பவனும். காரகன் என்பவன் தன்பலமெவ்வளவுண்டோ அதுவரையில் கொடுத்தே தீருவன். இவை ஒவ்வொரு மகாதிசையிலும் இவர்கள் மாறி மாறி வந்து இவ்விதப் பலனைக் கொடுப்பார்கள் எ-று.

(வி-ரை) போதகன்-வேதகன்-பாசகன்-காரகன் என்பவர்கள், ஒவ்வொரு திசையிலும் மாறிமாறி வருபவர்களாம். இவர்களின் குணங்களென்னவெனில், போதகனென்பவன் தான் பலனைத்தர ஆதிபத்தியமில்லாதவனாயினும் பார்த்தவர் சேர்ந்தவர்களையேனும் பலனைக்கொடு என்பவனென்றும், வேதகனென்பவன் தானும் கொடாமல் தன்னுடன் சேர்ந்தவர்கள் பார்த்தவர்களையும் கொடுக்கவொட்டாமல் தடுப்பவனாகும். பாசகனென்பவன் தன்பலம் எதிரிபலம் சேர்ந்தவர்பலம் எல்லாம் சேர்த்துக் கொடுப்பவனாகும். காரகனென்பவன் தன்னுடன் எவர் சேர்ந்தாலும் பார்த்தாலும எவ்வித ஆதிபத்தியதோஷமிருந்தாலும் அதனை எதிர்பாராது தன் அதிகாரப்படி பலனைக் கொடுப்பவனும். இதை ஒவ்வோர் மகாதிசையிலும் கீழ்கண்ட செய்யுளின்படி ஒவ்வோர் திசைக்கும் வரும் போதகன்-பாசகன்-வேதகன்-காரகனென்னு மிவர்களையறிந்து மேலே சொன்னபடி பலாபலனைக் கூறுவாயாக. 93

(சூரிய திசைக்கு)

பானு திசைக்குமந்தன் பாசகனுஞ் சுக்ரனே
மானேகேள் வேதகனு மன்னவனே-தேனனையாய்

காரகனுஞ் செவ்வாயுங் காசினியோர் தாமறிய
வரணியும் போதக னாமே.

(இ-ள்) சூரிய மகாதிசைக்கு பாசகனென்னும் பலவித பலனையுங் கூட்டுவிப்பவன் சனியாகும், எவ்வித பலனையுங் கொடாத வேதகனென்பவன் சுக்கிரனாகும், தன் சுயபல மெவ் வளவோ அதுவரையில் கொடுக்கத்தகுந்தவன் மன்னவனென் னும் குருவாகும். தன்பலம் எதிர்பலம் எல்லாவற்றையும் சேர்த்துக்கொடு என்பவனும் போதகனென்பவனும் புதனாகும். எவரையு மெதிர்பாராது தன் சுயபலத்தைமாத்திரம் கொடுக் கத்தகும் காரகனென்னும் பெயருடையவன் செவ்வாயாகும் எ-று.

(வி-ரை) சூரியதிசைக்கு போதகன்-புதனும், வேதகன்-சுக்கிரன்-பாசகனென்பவன்-சனியும் காரகனென்பவன் சனி செவ்வாய் என்பதாம். 94

(சந்திர திசைக்கு)

இந்து திசைக்குவெள்ளி யேற்றதோர் பாசகனும்
விந்தைமலர் நண்பனே வேதகனும்-மந்தனே
கங்கா நதிபுடைசூழ் காசினியிற் காரகனும்
அங்கார கன்போ தகன்.

(இ-ள்) சந்திரதிசை நடக்குங்காலம் பலாபலன்களைக் கூட்டிக் கொடுக்கத்தகுந்தவனும் பாசகனென்பவனும் சுக்கி ரனேயாகும். பலனைக் கொடுக்கமாட்டாத கொடியவனென்னும் வேதகன் சூரியனாகும். எவ்வளவுமெதிர்பாராது தன்பலத்தை மாத்திரம் கொடுக்கத்தகுந்தவனென்னுங் காரகன் சனியாகும். பலாபலன்களை கொடு என்னும் தன்மையையுடைய போதக னென்னும் பெயருடையவன் அங்காரகனென்றுங் கூறுவா யாக எ-று.

(வி-ரை) சந்திரதிசைக்கு போதகன் செவ்வாய், வேதகன் சூரியன், காரகன் சனி, பாசகன் சுக்கிரனு மாவார்களென்றுங் கூறுவாயாக. 95



(அங்காரக திசைக்கு)

மங்கலனார் தன்திசைக்கு மார்த்தாண்டன் பாசகனும்
திங்களரும் போதகனுஞ் சேயிழையீர்-பொங்குபுகழ்
ஏயபுதன் வேதகனு மித்தரணி யோரறிய
ஆயசனி காரகனே யாம்.

(இ-ள்) மங்கலன் என்னும் அங்காரகன் திசைக்கு பலவித பலன்களைக் கூட்டிக் கொடுக்கத்தக்க வாசகனென்று கூறத்தக்கவன் சூரியனாகும். கொடுவென்று சொல்லத்தகுந்த போதகனென்பவன் சந்திரனாகும். நற்பலனைக் கொடுக்கமாட் டாத வேதகனென்று வருபவன் புதனாகும். பூமியிலுள்ள அனைவருங் காணும்படிக்கு தன் சுயபலத்தைத் தவராது கொடுக்கத்தக்க காரகனென்னும் பெயருடையவன் சனியு மாவானென்று அழகுபொருந்திய பெண்ணே! கூறுவாயாக எ-று.

(வி-ரை) செவ்வாய் திசைக்கு போதகன் சந்திரனும், வேதகன்-புதனும், பாசகன்-சூரியனும், காரகன்-சனியென் றுங் கூறுவர்.

(புததிசைக்கு)

புந்தி திசைக்குப் புரவலனே போதகனும்
சந்திரனே பாசகனுந் தானவ-னிந்துநுதல்
மின்னனையீர் செவ்வாயோ வேதகனும் வெள்ளியோ
மன்னுபுகழ் காரகனு கும்.

(இ-ள்) புதன் திசைக்கு பலாபலன்களைக் கொடு என்னுந் தன்மையுடைய போதகனென்பவன் குருவாகும். தன் பலத் துடன் சேர்ந்தோர் பார்த்தோர் என்னு மிவ்விருவர் பலன்களை யும் சேர்த்து கொடுக்கத் தகுந்த பாசகனென்பவன் சந்திர னாகும். எவ்விதபலனையுங் கொடுக்கமாட்டாத வேதகனாகி வருபவன் செவ்வாயென்றுங் கூறுவர். எவரையு மெதிர்பாராது தன் சுயபலத்தைத் தவராது கொடுக்கத் தகுந்தவர்களென்னும் பெயருடையவன் சுக்கிரனென்றும், மூன்றாம்பிறைச் சந்திரனை யொத்த புருவத்தையுடைய பெண்ணே! கூறுவாயாக எ-று.

(வி-ரை) புதன் மகாதிசைக்கு போதகன்-குருவும், வேதகன்-செவ்வாயும், பாசகன்-அங்காரகனும், காரகன் சுக்கிரனுமெனக் கண்டுகொள்க. 97

(குரு திசைக்கு)

வேந்தன் மகாதிசைக்கு வெய்யவனே வேதகனும்
போந்துவருஞ் செவ்வாயே போதகனுங்-காந்திசெறி
சந்திரனே காரகனுந் தையலே தாரணியில்
அந்தகனே பாசகனு மே.

(இ-ள்) குரு மகாதிசைக்கு எவ்விதபலனையுங் கொடுக்கப் படமாட்டாத வேதகனென்பவன் சூரியனாகும். நற்பலனைத் தரத்தகுந்த போதகனென்னும் பெயருடன் வருபவன் செவ்வாயென்னும் அங்காரகனாவான். எவரையு மெதிர்பாராது தன் சுயபலத்தை மாத்திரம் கூட்டிக்கொடுக்கத் தகுந்த காரகனென்னும் பெயருடையவன் மிக்க பிரகாசத்தையுடைய சந்திரனாகும். தன்னுடன் சேர்ந்தவர் பார்த்தவர் பலத்தையும் சேர்த்துக் கொடுக்கத்தகுந்த பாசகனென்னும் பெயருடன் வருபவன் அந்தகன் என்னும் சனியாவானென்று அழகு பொருந்திய பெண்ணே! இப்பூமியில் பிறந்த மக்களுக்கு திசைப்பலன் கூறுவாயாக எ-று.

(வி-ரை) குருதிசைக்கு போதகன் செவ்வாயும், வேதகன் சூரியனும், பாசகன் சனியும், காரகன் சந்திரனுமாவார்களெனக் கூறுக. 98

(சுக்கிர திசைக்கு)

வெள்ளி மகாதிசைக்கு வேந்தனே போதகனும்
தெள்ளுபுதன் பாசகனுஞ் செங்கதிரோ-மெள்ளவரும்
காரகனே தானாகும் காரியோ வேதகனும்
வாரணியும் கொங்கைமயி லே.

(இ-ள்) சுக்கிர மகாதிசைக்கு தன் பலமில்லாவிடினும் எதிரியின் பலத்தையாவது கொடு என்னும் தன்மை வாய்ந்த போதகனென்பவன் வேந்தனென்னும் குருவாகும். தன்பலம்



எதிரியின் பலம் எல்லாம் கூட்டித் தரத்தகுந்த பாசகன் என்னும் பெயருடையவன் புதனாகும். தன் சுயபலத்தை மாத்திரம் பிறரை எதிர்பாராது கொடுக்கத்தகுந்த காரகன் என்னும் பெயர் வாய்ந்தவன் சூரியனாகும். எவ்வித பலனையுங் கொடுக்கப் படமாட்டாத வேதகன் என்னும் பெயருடையவன் சனியென்னும், அழகிய தனபாரங்களையுடைய பெண்ணே! இப்பூமியிலுதித்த மக்களுக் கெடுத்துரைப்பாயாக எ-று.

(வி-ரை) சுக்கிரதிசைக்கு போதகன் குருவும், வேதகன் சனியும், பாசகன் புதனும், காரகன் சூரியனுமாவாரெனக் கூறுக. 99

(சனி திசைக்கு)

சனியின் றிசைக்குச் சசிபோ தகனாகும்
இனியசெவ்வாய் வேதகனென் றேத்தும்-கனிமொழியாய்
வெள்ளியே பாசகனும் வேந்தனே காரகனும்
தெள்ளுதமி ழோருரைத்த சீர்.

(இ-ள்) சனி மகாதிசைக்குச் சசியென்னும் சந்திரனே போதகனென்னும் பெயருடன் நற்பலனைக்கொடு என்று சொல்லத்தகுந்தவனாகும். எவ்வித பலனையுங் கொடுக்கப்பட மாட்டாத வேதகனென்பவன் செம்மை நிறத்தையுடைய செவ்வாயாகும். தன்பலம் எதிரிபலமென்னு மிவ்விரண்டையும் சேர்த்து கொடுக்கத்தகுந்த பாசகனென்னும் பெயருடையவன் சுக்கிரனேயாகும். எவரையும் எதிர்பாராது தன் பலத்தை மாத்திரம் கொடுக்கத்தகுந்த பலமுடைய காரகனென்பவன் வேந்தன் என்னும் குருவாகும். இவை சாத்திரங்களை யறிந்த மேதாவிகளால் கூறப்பட்ட விதியாகும் எ-று.

(வி-ரை) சனிதிசைக்கு போதகன் சந்திரனும், வேதகன் செவ்வாயும், பாசகன் சுக்கிரனும், காரகன் குரு என்றுங் கூறுக என்பதாம். 100

ஒருவர் மகாதிசைக்கு ளுற்றபல னுண்ண
வருவர் நவக்கிரக மாதே-அவரவரில்

போதகனும் பாசகனும் போற்றுபொருள் காரகனும்
வேதகனு மாகிவரு வார்.

(இ-ள்) ஒவ்வொருவர் மகாதிசை காலங்களிலும் அந்த மகாதிசை யதிபரின் பலன்களையுண்ண போதகனென்றும், வேதகனென்னும், பாசகனென்னும், காரகனென்னும் பெயர் கொண்டு ஒவ்வோர் திசையிலும் ஷெ நவகோட்களே மேற் சொன்னபடி பெயர்கொண்டு ஒருவருக்குப் பின்னொருவராய் மாறி மாறி வந்துகொண்டே யிருப்பார்கள். அவர்களும் நவக் கிரகந்தானன்றோ எ-று.

(வி-ரை) ஒவ்வொரு திசையிலும் திசாநாதரின் மொத்த காலங்களைப் பங்கிட்டு அவரவர்களின் காரகத்துக்குத் தக்கபடி நன்மை என்னும் சுபத்துவம் பெற்றவர்கள் நற்பலனையும், கொடிய காரகத்துவம் பெற்றவர்கள் கொடிய பலனையுங் கொடுக்கும் தன்மையுடன் போதகன், வேதகன், பாசகன், காரகன் என்னும் பெயருடன் மாறி மாறி வருவார்களென் பதாம். 101

இந்தப் படிநால்வ ரெய்தியொரு கோள்திசைக்குள்
வந்துபல னுண்ணும் வகையறிந்தே-சிந்தித்
துரைத்தபல னைத்திருக்கு மொண்டொடியே கேளாய்
தரைத்தமிழோர் தாமறியத் தான்.

(இ-ள்) மேற்சொன்ன விவரப்படி போதகனென்றும் வேதகனென்னும் பாசகனென்னுங் காரகனென்னும் பெயர் கொண்டு, ஒரு கிரகத்தின் திசையிலேயே மாறி மாறி வந்து நற்பலன் தீயபலன் என்பதை யளிப்பார்கள். ஆனதால், மேற் சொன்ன நால்வரின் விஷயா விஷயங்களை யறிந்து தெரிந்து திசைப்பலன் கூறுவாயானால் அவை உலகத்தவருக்கு பொருத்தமாயும் ஒற்றுமையாயுமிருக்கும். ஆகையால் ஓ அழகிற் சிறந்த பெண்பாவாய்! உலகத்தவற்கு இவ்விதமே பலனுரைப்பாயாக எ-று.

(வி-ரை) முன் சொன்ன 93-ஆம் செய்யுள் முதல் 102-வரையிலுமுள்ள 10-பாட்டாலும் ஒவ்வொருவர் திசையிலும்



புக்திநாதர்கள் திசாநாதனின் வருஷத்தை பங்கிட்டுக்கொண்டு தனது காரகத்தின்படி பலாபலனை அளிப்பதுபோலவே போதகன்-வேதகன்-பாசகன் என்னும் திருநாமத்துடன் ஷெ திசாநாதன் வருஷங்களைப் பங்கிட்டுக்கொண்டு தனது காரகப் படியும், ஆதிபத்தியப்படியும் சேர்க்கை பார்வையென்னும் பலாபலங்களுடன் அந்த திசையில் தன் காலங்களில் பலனைக் கொடுப்பார்கள் என்பதே கருத்தாகும்.

இது சோதிடர்களுக்கு திசைகாலங்களுக்கு பலன் சொல்ல வெகு முக்கிய ஆதாரமாயிருக்கும். எப்படியெனில் திசைபலம் சொல்லவென்றால் விசேஷமாய் புக்தி அந்திர சூக்ஷமங்களைக்கொண்டு பலன் சொல்லுவதுபோலவே, அந்த புக்திநாதன் அல்லது அந்தரநாதன் அல்லது சூக்ஷமநாதன் முதலியவர்கள் இராசி சக்கரப்படி அவர்கள் கொண்டுள்ள பாவாத்பவ விசேஷப்படி சுபர்களாகவோ அல்லது பாவர்க ளாகவோ வந்தாலும் அந்த கிரகம் போதகனு அல்லது வேதகன்-பாசகன்-காரகன் என்னு மிவர்களிலெவர் என்று அறிந்து அவர்களுக்குரிய காரகப்படி பலன் சொல்வதே யாம். இதுவரையில் சொல்லிவந்த செய்யுட்களின் முக்கிய சாராம்சங்கள் பின்வருமாறு.

(மகாதிசைக்கு-போதகன்-வேதகன்-பாசகன்-காரகன்
முதலியவர்கள் விவரம்)

| திசாநாதன் | போதகன் | வேதகன் | பாசகன் | காரகன் |
|---|---|---|---|---|
| சூரியனுக்கு | செவ்வாய் | சுக்கிரன் | சனி | குரு |
| சந்திரனுக்கு | செவ்வாய் | சூரியன் | சுக்கிரன் | சனி |
| குஜனுக்கு | சந்திரன் | புதன் | சூரியன் | சனி |
| புதனுக்கு | குரு | செவ்வாய் | சந்திரன் | சுக்கிரன் |
| குருவுக்கு | செவ்வாய் | சூரியன் | சனி | சந்திரன் |
| சுக்கிரனுக்கு | குரு | சனி | புதன் | சூரியன் |
| சனிக்கு | சந்திரன் | செவ்வாய் | சுக்கிரன் | குரு |

(ஆக்கியோன் பெயர்)

பேசுமதி ராசிதனிற் பெம்மான்ச தாசிவன்சொல்
வாச மெனுங்கவிதை வையகத்தில்-நாசமிலை
என்றெவரும் போற்றி யீச னருள்பெறுவர்
மன்றதனில் மெய்யாம் மதி.

(இ-ள்) சந்திரகுலமென்னும் ராஜவமிசத்தில் பிறந்த பெரியாரென்னும் சதாசிவ சோதிட ரவர்களா லியற்றப்பெற்ற சோதிட நூலாகிய இந்த கவியென்னும் வெண்பாக்களை, இப்பூமியிலுள்ளவர்கள் யாவர்களுங் கைக்கொண்டு இப்பூவுல கோர்க்கு பலன் சொல்வார்களேயாமானால், அனைவரும் போற் றத்தகுந்து எமது எம்பிரான் கிருபையால் யாதொரு குற்றங் குறைவில்லாமல் மேற்சொன்ன ஈசனனுக்கிரகம் பெறுவார் என்பதில் ஐயமில்லை என்றுந் தெரிவாயாக எ-று.

(வி-ரை) 'மதிராசிதனிற் பெம்மான்' என்றதால் சந்திர குலத்துதித்த பெரியார் என்றும் 'வாசமெனுங் கவிதை' என்ற தால் நல்வாசனையுடைய அல்லது அனைவரும் விரும்பத்தக்க நூல் என்றும், இவை பண்டையகாலத்து நூற்களாயிருக்கு மென்றுங் கருதப்படுகிறது. மற்றும் இந்நூலுக்குச் சந்திர காவியமென்னும் பெயரும், சந்திரகுலத்துதித்த சதாசிவ சோதிடரவர்கள் செய்த கவியாகையால் சந்திரகாவியமென் னும் பெயருண்டாயிருக்கலாமென்றும் முன்பே கூறியுள்ளேன்.

சந்திரகாவியம் மூலமும்-விருத்தியுரையும்

முற்றிற்று.

---

# கோசாரப் படலம்

(இரவியின் பலன்)

சூரியன்ஜன்மந்தன்னிற் றுலங்கியகாலேழைந்தில்
பாரியவெட்டொன்பானிற் பகர்ந்தபன்னிரண்டினின்றால்
காரியக்கேடலைச்சல் கண்வலி தலைநோக்காடு
வீரியவெறுவீடாக்கி வீடுவிட்டோட்டுமென்றே.

(இ-ள்) மாதாந்தரகாலங்களில் கோசாரப்படி சூரியன் மாதாமாதம் ராசி ஒன்றுக்கு ஒவ்வொரு மாதவீதம் வாசம் செய்யுங்காலம் சந்திரனிருந்த அல்லது கோசார நக்ஷத் திர லக்கினப்படி ஷை லக்கினத்திற்கு ஜென்மம் 4-7-5-8-9-12-என்னு மிராசியில் சூரியன் சஞ்சரிக்குங்காலம் சுயகாரிய விக்கினம், கேடு - அலைச்சல் - கண்ணோய்-தலைநோய்-வீட்டில் தரித்திரம், இடப்பெயர்ச்சி என்னு மிப்பலனையே கொடுப் பான் எ-று.

(வி-ரை) சூரியன் 1-4-5-7-8-9-12-ல் வரில் சுபபலனைக்
கொடான் என்பதாம். 1

(சந்திரன் பலன்)

பனிமதியிரண்டிநான்கிற் பரிவிலாவைந்திலெட்டிற்
கனமறுபன்னிரண்டிற் கதிக்கவீற்றிருந்தானாகில்
இனியநற்பெண்டீர்மக்க ளியல்பறக்கேடுதுக்கம்
தனமதைச்செலவழித்தால் தான்கொடுத்திடுவன்றானே.

(இ-ள்) மதியென்றுசொல்லும் சந்திரன் கோசார லக்கி னத்திற்கு 2-4-5-8-12 என்னும் ஸ்தானங்களில் வரும்போது மனைவி மக்களுக்குத் துன்பமும், துக்கம் முதலியவைகளும் கையிலுள்ள பொருளைச் செலவழித்தலும், பிறரால் மோசம் போதல் என்னு மிவ்வித பலனைக் கொடுப்பான் எ-று.

(வி-ரை) சந்திரன் 2-4-5-8-12-ல் வரில் நல்ல பலனைக்
கொடான் என்பதாம். 2

(செவ்வாயின் பலன்)

நிலமகன்ஜன்மந்தன்னி னிலவியவிரண்டினான்கில்
நலமறுமெட்டுபத்தினாட்டு பன்னிரண்டினினின்றால்
பலவிதக்கேடுபெண்டீர் பதிபொருணாசம்வெப்பு
குலவியவாயுதத்தாற் குணகுலப்பதியும்போக்கும்.

(இ-ள்) செவ்வாயென்னும் அங்காரகன் கோசார லக்கினத்திற்கு 1-2-4-8-10-12-ல் சஞ்சரிக்குங்காலம் பற்பலவிதமான துன்பங்களும், மனை - குடும்பம்-பொருள்-முதலியன நாசமாதலும், வெப்புநோயும் ஆயுதங்களால் காயமும், இடம் விட்டுப் பெயருதல் முதலிய கொடிய பலனும் உண்டாக்கும் எ-று.

(வி-ரை) செவ்வாய் 1-2-4-8-10-12-ல் வரில் சுபபலனைக்
கொடான் என்பதாம். 3

(புதன் பலன்)

புந்திதான்ஜென்மந்தன்னில் பொதியமூன்றைந்திலேழில்
உந்தியவெட்டொன்பானி னுகந்தபன்னிரண்டினின்றால்
சிந்தைபேதகமாம்வித்தை திரவியங்களவுபோகும்
கொந்தலர்குழலாள்சேதம் கோளினாற்குற்றமாமே.

(இ-ள்) புந்தியாகிய புதன் கோசாரலக்கினத்திற்கு 1-3-5-7-8-9-12-ல் வருங்காலம் புத்தி குறைவு, வித்தைப்பழுது, திரவியங் களவுபோதல், மனைவிக்குத் துன்பம் சேதமும் கோளுண்டாதலும், அதனால் துன்பம் முதலியன உண்டாகும் என்றுங் கூறுக. எ-று.

(வி-ரை) புதன் 1-3-5-7-8-9-12-ல் வரும்போது நல்ல
பலனைக்கொடான் என்பதாம். 4



(குருவின் பலன்)

பொன்னவன்ஜன்மந்தன்னில் பொதியமூன்றைந்திலேழில்
வின்னமாமெட்டிற்பத்திற் விளங்குபன்னிரண்டினின்றால்
தன்னுடன்பிறந்தார்சுற்றந் தானியமாடுமக்கள்
வின்னமாம்பதியைவிட்டு வெறுப்பதாயிருக்குந்தானே.

(இ-ள்) பொன்னவன் என்னும் குரு கோசார லக்கினத்திற்கு 1-3-4-8-10-12-ல் வருங்காலம் தன் உடன்பிறந்த சகோதரரும், பந்துஜனங்களும் தானியம் நாற்கால் ஜீவன் என்னும் மாடாடுகளும், தன்னைவிட்டு அல்லது தன்பதியைவிட்டு நீங்கிவிடும் எ-று.

(வி-ரை) குரு 1-3-4-8-10-12-ல் வரில் சுப பலனைக்
கொடான் என்பதாம். 5

(சுக்கிரன் பலன்)

சுக்கிரன்மூன்றிலாறில் துலங்குமெட்டாமீராறில்
உக்கிரமாகவேதானுகந்த நட்பின்றிநின்றால்
மக்கள்நல்மாடுபெண்டீர் வரிசையாயுரைத்தாற்கேடு
சிக்கியபொருள்கணாசந் திரவியங்களவுபோமே.

(இ-ள்) சுக்கிரன் கோசார லக்கினத்திற்கு 2-6-8-12 என்னும் ஸ்தானங்களில் சஞ்சரிக்குங் காலத்து நட்பு இன்றி பகைபெற்று ஷ ஸ்தானங்களிலிருந்தாலும், புத்திராளுக்கும், வாகனங்களுக்கும், மனைவிக்கும் கேடுண்டாகுமென்றும் தன் கையிலுள்ள பொருள் நாசமும், திரவியம் களவுபோதல் முதலிய கொடிய பலனுண்டாகும் எ-று.

(வி-ரை) சுக்கிரன் 3-6-8-12-ல் வரில் சுபபலன் கொடான்
என்றதாம். 6

(சனியின் பலன்)

முடவன்றான்ஜன்மமைந்தில் முன்னியவிரண்டுநான்கில்
திடமறுமெட்டிற்பத்திற் சேர்ந்தபன்னிரண்டில்நின்றால்
உடன்மன்னர்பொருள்மாடு பெண்டணிமக்கள்சேதம்
அருமையும்பதியும்விட்டே யரசராலலைச்சலாமே.

(இ-ள்) முடவனுகிய சனி, கோசார லக்கினத்திற்கு 1-2-4-5-8-10-12-ல் சஞ்சரிக்குங்காலம் தனது முன்னவருக்குத் துன்பமும், பொருள்சேதம், மாடு மக்கள்சேதம், தனது அழகிய பதியாகிய வீட்டைவிட்டு வெளியேறுவான், மன்னர்களால் துன்பமும் கஷ்டமும் உண்டாகும் எ-று.

(வி-ரை) சனி 1-2-4-5-8-10-12-ல் வரில் சுபபலனைக் கொடான் என்பதாம். 7

(இராகு கேதுவின்பலன்)

ராகுவுங்கொடியகேதும் நலமிலாச்சென்மந்தன்னில்
ஏகமாமூன்றிஞன்கி லேழிமாறிலெட்டிற்பத்தில்
வேகமாம்பன்னிரண்டில் வேண்டியேவந்துநின்ருல்
பாகுநேர்மொழியாள்மக்கள் பதியுடனழிந்துபோமே.

(இ-ள்) பாம்பாகிய இராகு கேது இவர்கள் கோசார லக்கினத்திற்கு 1-3-4-6-8-10-12 என்னும் க்ஷேத்திரங்களில் ஸ்தானம் ஒன்றுக்கு வருடம் 1, மாதம் 6-வீதம் சஞ்சரிக்குங் காலங்களில் அவர்கள் தரும் பலனென்னவெனில்:—தனது அன்பிற்குரிய மனைவியும், புத்திர புத்திரிகளும், தனது யில்லமும் அழிந்துபோம் எ-று.

(வி-ரை) இராகு கேது இவர்கள் 1-3-4-6-8-10-12-ல் வருங்காலம் சுபபலனைக் கொடான் என்பதாம். 8

இதுவரையில் சொல்லிவந்தபடி அந்த கிரகங்களுக்குச் சொல்லிவந்தவை நற்பலனைக்கொடாத துற்பலஸ்தானங்கள் ஆகையால் இதில் சொல்லப்படாதவை நற்பல ஸ்தானங்கள் என்றுங் கூறுவர்.

மேற்சொன்னபடி கோசாரபலன் சொல்வதற்கு ஜென்ம நக்ஷத்திரமில்லாதவர்கள் நாம நக்ஷத்திரத்தைக் கொண்டும் கூறுவதுண்டு. நாம நக்ஷத்திரங்களென்பது கீழ்க்கண்டபடி தெரிந்துக்கொள்ளவும்.

நாமநக்ஷத்திர அக்ஷரங்கள்

| | |
|---|---|
| அச்சுவினி | சு-சே-சோ-ல |
| பரணி | லீ-லு-லே-லோ |



| | |
|---|---|
| கார்த்திகை | ஆ-ஈ-ஊ-ஏ |
| உரோகணி | ஓ-வா-வீ-வு |
| மிருகசிரம் | வே-வோ-கா-கி |
| திருவாதிரை | கூ-க்க-ஞ-ச |
| புனர்பூசம் | கே-கோ-ஹ-ஹி |
| பூசம் | ஹு-ஹே-ஹோ-ட |
| ஆயில்யம் | டீ-டு-டே-டோ |
| மகம் | மா-மீ-மூ-மே |
| பூரம் | மோ-டா-டி-டு |
| உத்திரம் | டே-டொ-பா-பி |
| அஸ்தம் | பூ-ஷ-ண-ட்ட |
| சித்திரை | பே-போ-ரா-ரி |
| சுவாதி | ரூ-ரே-ரோ-த |
| விசாகம் | தீ-து-தே-தோ |
| அனுஷம் | நா-நீ-நூ-நே |
| கேட்டை | நோ-யா-இ-யூ |
| மூலம் | ஏ-யோ-ப்பா-ப்பி |
| பூராடம் | பூ-தா-ப-ட |
| உத்திராடம் | பே-போ-ஜ-ஜீ |
| திருவோணம் | ஜு-ஜே-ஜோ-க |
| அவிட்டம் | க-கி-கு-கே |
| சதயம் | கோ-சா-சீ-சூ |
| பூரட்டாதி | ஸே-ஸோ-தா-தி |
| உத்திரட்டாதி | தூ-ஸ-த்தா-தி |
| இரேவதி | தே-தோ-ச்சா-ச்சி |

இங்கு காட்டியபடி அவரவர்களுக்குரிய பெயரின் முதலெழுத்தைக்கொண்டு அந்த எழுத்துக்கு எந்த நக்ஷத்திரம் வருகிறதோ அந்த நக்ஷத்திரத்திற்குரிய ராசிகளைக்கொண்டு மேற்சொன்னபடி கோசாரபலன் கூறவேண்டும்.

கோசாரப்படலம் முற்றிற்று.

## காலன் அர்த்தப்பிரகரன் எமகண்டன் குளிகன் இவர்கள் உதயகால நிர்ணயம்

| | | |
|---|---|---|
| ஞாயிற்றுக்கிழமை | பகல் | 2-ம் நாழிகையிலும் |
| சனிக்கிழமை | பகல் | 6-லும் |
| வெள்ளிக்கிழமை | பகல் | 10-லும் |
| வியாழக்கிழமை | பகல் | 14-லும் |
| புதன்கிழமை | பகல் | 18-லும் |
| செவ்வாய்க்கிழமை | பகல் | 22-லும் |
| திங்கட்கிழமை | பகல் | 26-லும் |

காலன் உதயமாவான்

| | | |
|---|---|---|
| புதன்கிழமை | பகல் | 2-ம் நாழிகையிலும் |
| செவ்வாய்க்கிழமை | பகல் | 6-லும் |
| திங்கட்கிழமை | பகல் | 10-லும் |
| ஞாயிற்றுக்கிழமை | பகல் | 14-லும் |
| சனிக்கிழமை | பகல் | 18-லும் |
| வெள்ளிக்கிழமை | பகல் | 22-லும் |
| வியாழக்கிழமை | பகல் | 26-லும் |

அர்த்தப்பிரகரன் உதயமாவான்

| | | |
|---|---|---|
| வியாழக்கிழமை | பகல் | 2-ம் நாழிகையிலும் |
| புதன்கிழமை | பகல் | 6-லும் |
| செவ்வாய்க்கிழமை | பகல் | 10-லும் |
| திங்கட்கிழமை | பகல் | 14-லும் |
| ஞாயிற்றுக்கிழமை | பகல் | 18-லும் |
| சனிக்கிழமை | பகல் | 22-லும் |
| வெள்ளிக்கிழமை | பகல் | 26-லும் |

எமகண்டகன் உதயமாவான்

| | | |
|---|---|---|
| சனிக்கிழமை | பகல் | 2-ம் நாழிகையிலும் |
| வெள்ளிக்கிழமை | பகல் | 6-லும் |



| | | |
|---|---|---|
| வியாழக்கிழமை | பகல் | 10-லும் |
| புதன்கிழமை | பகல் | 14-லும் |
| செவ்வாய்க்கிழமை | பகல் | 18-லும் |
| திங்கட்கிழமை | பகல் | 22-லும் |
| ஞாயிற்றுக்கிழமை | பகல் | 26-லும் |

குளிகன் உதயமாவான்

| | | |
|---|---|---|
| புதன்கிழமை | ராத்திரி | 2-ம் நாழிகையிலும் |
| செவ்வாய்க்கிழமை | ராத்திரி | 6-லும் |
| திங்கட்கிழமை | ராத்திரி | 10-லும் |
| ஞாயிற்றுக்கிழமை | ராத்திரி | 14-லும் |
| சனிக்கிழமை | ராத்திரி | 18-லும் |
| வெள்ளிக்கிழமை | ராத்திரி | 22-லும் |
| வியாழக்கிழமை | ராத்திரி | 26-லும் |

காலன் உதயமாவான்

| | | |
|---|---|---|
| சனிக்கிழமை | ராத்திரி | 2-ம் நாழிகையிலும் |
| வெள்ளிக்கிழமை | ராத்திரி | 6-லும் |
| வியாழக்கிழமை | ராத்திரி | 10-லும் |
| புதன்கிழமை | ராத்திரி | 14-லும் |
| செவ்வாய்க்கிழமை | ராத்திரி | 18-லும் |
| திங்கட்கிழமை | ராத்திரி | 22-லும் |
| ஞாயிற்றுக்கிழமை | ராத்திரி | 26-லும் |

அர்த்தப்பிரகரன் உதயமாவான்

| | | |
|---|---|---|
| ஞாயிற்றுக்கிழமை | ராத்திரி | 2-ம் நாழிகையிலும் |
| சனிக்கிழமை | ராத்திரி | 6-லும் |
| வெள்ளிக்கிழமை | ராத்திரி | 10-லும் |
| வியாழக்கிழமை | ராத்திரி | 14-லும் |
| புதன்கிழமை | ராத்திரி | 18-லும் |
| செவ்வாய்க்கிழமை | ராத்திரி | 22-லும் |
| திங்கட்கிழமை | ராத்திரி | 26-லும் |

எமகண்டன் உதயமாவான்

| | | |
|---|---|---|
| செவ்வாய்க்கிழமை | ராத்திரி | 2-ம் நாழிகையிலும் |
| திங்கட்கிழமை | ராத்திரி | 6-லும் |
| ஞாயிற்றுக்கிழமை | ராத்திரி | 10-லும் |
| சனிக்கிழமை | ராத்திரி | 14-லும் |
| வெள்ளிக்கிழமை | ராத்திரி | 18-லும் |
| வியாழக்கிழமை | ராத்திரி | 22-லும் |
| புதன்கிழமை | ராத்திரி | 26-லும் |

குளிகன் உதயமாவான்

## திதித்தியாச்சியம்

| | | | |
|---|---|---|---|
| பிரதமைக்கு | 24 | நவமிக்கு | 5 |
| துதியைக்கு | 12 | தசமிக்கு | 33 |
| திரிதியைக்கு | 55 | ஏகாதசிக்கு | 1 |
| சதுர்த்திக்கு | 5 | துவாதசிக்கு | 15 |
| பஞ்சமிக்கு | 54 | திரயோதசிக்கு | 26 |
| சஷ்டிக்கு | 54 | சதுர்த்தசிக்கு | 7 |
| சப்தமிக்கு | 30 | பூரணைக்கு | 29 |
| அஷ்டமிக்கு | 20 | அமாவாசியைக்கு | 6 |

இந்த நாழிகைக்குமேல் 4-நாழிகை தியாச்சியமாம்.

## லக்கினத்தியாச்சியம்

| | | |
|---|---|---|
| மேஷம் | மிதுனம் | கர்க்கடகம் |
| ரிஷபம் | சிங்கம் | விருச்சிகம் |
| கன்னி | துலாம் | மகரம் |
| தனுசு | கும்பம் | மீனம் |
| இவை 4-ம் முதலில் ½-நாழிகை | இவை 4-ம் நடுவில் ½-நாழிகை | இவை 4-ம் கடையில் ½-நாழிகை |

---

பூமகள்விலாசம் பிரஸ், சென்னை:—1938.

# ஜாதகசிந்தாமணி என்னும்

## அனுபோக

# சோதிட பிரம்ம ரஹஸ்யம்

இந்த அனுபோக சோதிட பிரம்ம ரகஸ்யத்தில் அயனங்கள், ருதுக்கள், திதிகள், நட்சத்திரபாதம், வாரங்கள், யோகங்கள், கரணங்கள், வேளைகள், மாதங்கள் இவைகளின் பலாபலன் மிகத் தெளிவாய் அச்சிட்டிருப்பதால் இவைகளின் பலன்களெல்லாம் யாதாமொரு காரியம் துவக்கும்போது நன்மை தீமை யறிந்து நடப்பதுந்தவிர, குழந்தை ஜனனமாகும்போது அதுகளின் நிலைமைப்பிரகாரம் அவாளவாள் அமைப்பையும் அறிய அனுகூலமாயிருக்கும். இதுதவிர துவாதசபாவபலனும், கிரகதுடர்ச்சி கிரகங்களின் நட்பு பகை சமம் கிரகதத்துவங்களும், கோட்சாரம் ஆருடம் பார்க்கும்விதமும், கோட்சார ஆருடபலன்கள், நவாம்சபலாபலன் முதல்பாகமாகிய பிள்ளையின்குறி, பிள்ளை பிறக்குமிடம், அரிட்டம், அமிசை, மாலை, கொடி, மருவு, ஆயுள், தொழில் முதலியவைகளும், 2-ம் பாவகமாகிய நேத்திரம், ஊமை, வித்தை, தனவான், கர்மம், பொருளின் தொகை, தின்னும் சுவை முதலியவைகளும், 3-ம் பாவகமாகிய சகோதரர், மூத்தவர், இளையவர், அங்கவீனம், ஆபரணங்கள் முதலியவைகளும், 4-ம் பாவகமாகிய மாதுருபலன், வாகனங்கள், தாய்க்கரிஷ்டம், வீடுகள், சாரம் முதலியவைகளும், 5-ம் பாவகமாகிய புத்திரர், தத்துபுத்திரர் முதலியவைகளும், 6-ம் பாவகமாகிய வாழ்க்கை, கெண்டமும், 7-ம் பாவகமாகிய மனைவியின் ஜாதி, கலியாணம், மனைவிவரும் திசையும், 8-ம் பாவகமாகிய [illegible]யுசு, அற்பாயுசு, மு[illegible] வயது, மாரகதிசை, மாரகக்[illegible] இடத்தையும் [illegible]டத்தை[illegible], 9-ம் பாவகமாகிய பிதாவுக்கினம், நலம், அரிட்டம், பாக்கியமும், 10-ம் பாவகமாகிய துர்க்காரியமும், 11-ம் பாவக[illegible] லாபமும், 12-ம் பாவகமாகிய சுகவாழ்வு முதலியவைகளும், [illegible] கமும் சேர்த்து சுத்தமாய் அச்சிட்டிருக்கிறது.

இதன் விலை அணு 12

ஆ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்

24. தாண்டவராயப்பிள்ளைவீதி, சென்னை.